ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

மலர் 14. 28—9—34 இதழ் 13.



தஞ்சை பிரகதீஸ்வர சுவாமி கோவில். —Pon

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவ௵ புரட்டாசி௴ 12௳ வெள்ளி (28-9-1934) இதழ் கரு.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
தனமேறி ஈடி லாது
சொந்தவர சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்தநிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெந் நாளும் வாழ்க!

கோவை மகாநாடு

இந்த மாதம் இருபத்தொன்பது, முப்பது தேதிகளாகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயமுத்தூரில் தமிழ் மாகாண அரசியல் மகாநாடு நடைபெற இருக்கிறது. அதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயம் சில நாட்கள் முன்வரை வேறாக இருந்தது. இப்போது இன்னொன்று பெரிதும் முக்கியம் பெற்றுவிட்டதென்று சொல்லலாம். இந்தச் சமயம் சட்டசபை நுழைவுக் காரியந்தான் முக்கியமெனக் கருத நியாயமுண்டு. எனினும் இன்று காந்தியடிகள் அறிக்கையே முதன்மைபெற்று விளங்குகின்றது.

சட்டசபைக்குச் செல்தல்பற்றி விவாதத்திற்குரியது இனி ஒன்றுமில்லை. அது முடிந்த ஒன்று. சட்டசபை நுழைவு வெற்றி பெற, வேண்டுவ ஆலோசிப்பதைத் தவிர வேறு சிக்கல் எதுவும் அதில் இல்லை. அடிகள் அறிக்கைபற்றிச் சென்றகிழமை எழுதியிருக்கின்றோம். அதில் விவாதத்திற்குரிய விஷயமிருக்கிறது. அடிகள் பம்பாய்க் காங்கிரசில் சில திருத்தம் செய்ய விரும்புகிறார். அவர் கூறும் திருத்தங்கள் நான்கு. ஒன்று காங்கிரசின் லட்சியம் சத்தியமும் அஹிம்சையுமென இருக்க வேண்டுமென்பது; மற்றொன்று ஓட்டுரிமைக்குக் கதரைக் கட்டாயமாக்குவது; இன்னொன்று காங்கிரஸ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது; நான்காவது பணச் சந்தாவுக்குப் பதில் நூல் சந்தா. இந்நான்கு திருத்தங்களையும் பம்பாய்க் காங்கிரஸ் மனமார உடன்பாட்டாலன்றித் தாம் காங்கிரசில் இருக்க முடியாதெனக் காந்தியடிகள் கூறுகிறார். இந்நிலையில் பம்பாய்க் காங்கிரசுக்குக் கடமை பெரிதாக இருக்கிறது.

காந்தியடிகள் விரும்பும் திருத்தங்கள் செய்யப்படா விட்டால் அப்பெரியார் காங்கிரசைவிட்டு விலகி விடுவதாக உண்மையோடு உரைக்கிறார். காந்தியடிகளைக் காங்கிரசை விடுமாறு செய்தல் ஆகாது என்பதே நமது பலமான கருத்து. அவ்வாறே காங்கிரஸ்காரர் பலரும் கருதுகிறார் என நாம் அறிகிறோம். காந்தியடிகள் கூறும் திருத்தங்களைப் பற்றி நோக்குதல் வேண்டும். அடிகளை விடக்கூடாதென்பதற்காகத் திருத்தங்களை அப்படியே ஒப்புக்கொண்டு விடுதல் என்பதும் பொருந்தாது. திருத்தங்களை ஒப்புக்கொண்டு விட்டால் செய்கையிற் காட்டவேண்டுமல்லவா? செய்கைக்கு வாராதென நிச்சயமாகத் தெரியும் ஒன்றை அடிகளை நோக்கி ஒப்புக்கொள்தல் தகாது. அதனை அடிகளே தமது அறிக்கையில் வெறுக்கின்றார். எனவே அடிகள் கூறும் திருத்தங்களை ஆராய்தல் வேண்டும்.

அப்பொறுப்புப் பம்பாய்க் காங்கிரசுக்கே உண்டென்பதில்லை. ஒவ்வொரு மாகாண மகாநாட்டுக்கும் அப்பொறுப்பு உண்டு. இப்போது கோவையில் கூடவிருக்கும் தமிழ் மாகாண மகாநாடு இதனை நன்கு அலசி ஆராய்தல் வேண்டும். காந்தியடிகளை விலக விடத் தமிழர் ஒருநாளும் சம்மதிக்கமாட்டார். ஆகவே, அத்தலைவர்கள் தலைவரை விலக விடாமலும் அவர் திருத்தங்களை ஆராய்ந்து கூடுமானவரை ஒப்புக்கொள்ளவும் பம்பாய்க் காங்கிரசுக்குத் தமிழ் மாகாணத்தார் சிபார்சு செய்தல் வேண்டும். இத்தச் சமயத்தில் கோவை மகா

நாட்டுக்குத் தமிழ் நாட்டுத் தலைவரும் காந்தியடிகட்கு உயிரனைய தோழருமான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தலைமை வகிப்பது பெரிதும் பொருத்தமாகும்.

காந்தியடிகள் அறிக்கைகூறும் திருத்தங்களுள் நாம் இங்கு எடுத்துக் காட்டிய மூன்றையும் ஒப்புக் கொள்ளலாம். நான்காவதாக இங்கு காட்டப்பட்ட நால் சந்தா தான் நிச்சயமாக நடைமுறைக்குக் கொண்டுவர முடியாதெனப் பலராலும் கருதப்படுகிறது. காங்கிரசைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தவரும் இராட்டினத்தில் அமர்ந்து நூல் நூற்றுத் தரவேண்டும் என்ற விதி உண்மையில் செய்கையில் நடைபெற வேண்டுமானால் காங்கிரசில் கடைசியாக எத்தனை பேர் மீதிப்படுவர் என்று சொல்ல முடியாத நிலையிலிருக்கிறது. அத்தனைக் கடுமையான ஒன்றைத் தீர்மானிப்பது சரியாகாது. அதனை விட்டுக் கொடுக்குமாறு காந்தியடிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். மற்ற மூன்றையும் உடன்பட்டு, நால் சந்தாவைக் கட்டாயப் படுத்தாமல் அடிகளையும் சமாதானப்படுத்திக் காங்கிரசை விடாதிருக்குமாறு செய்யும் காரியத்திற்குக் கோவைத் தமிழர் அரசியல் மகாநாடு கால்கோள் வழி ஆற்றும் என நம்புகிறோம்.

தெரிந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கோவை சென்று தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறமாட்டார்களாக! காந்தியடிகளிடத்துப் பெரிதும் செல்வாக்குள்ள தலைவர் இராஜகோபாலாச்சாரியார் தமது பேராற்றலைக் காட்டிக் கோவை மகா நாட்டில் காந்தியடிகள் திருத்தத்தைச் செய்கைக்கு வரக்கூடிய அளவில் நிறைவேற்றி அடிகளையும் அதற்கு உடன்படுத்திக் காங்கிரசுக்கும் அடிகட்கும் உள்ள தொடர்பு அறுபடாதிருக்கும் வகையில் கருமமாற்ற முயல்வாராக!

இடி முழக்கம்

மலையாளத்திற்கு :: :: உதயசங்கர்

உதயசங்கர் என்ற உலகப் பிரசித்தி பெற்ற வடநாட்டு பாதநாட்டிய நிபுணர், சமீபத்தில் திருவாங்கூருக்கு விஜயம் செய்து, ஆங்கு பழக்கத்திலிருந்துவரும் 'கதகளி' என்ற நடனக் கலையைப் பயிலப் போவதாகச் செய்தி வருகிறது. அதனை முழுமனதுடன் நாம் வரவேற்கின்றோம். கதகளி யென்பது ஓர் அபூர்வமான கலை. பரத நாட்டியத்தின் ஓர் பகுதியாகிய அது, நீண்டகாலமாக மலையாள நாட்டாரால் பொன்னே போல் போற்றப்பட்டு வருகிறது. பெரும் பாண்டித்யமும், நடிப்புத் திறமும், சாகித்யப் பயிற்சியும் இருந்தாலன்றி அக்கலையில் வெற்றி பெற்றுவிட முடியாது. ஒரே மனிதன் நடிகனைத் தோன்றி நவாசங்களும் குறைவறத் துலங்கப் பாவனைசெய்து பார்ப்போரை வசீகரிப்பதென்றால் நிச்சயமாகவும் அக்கலையை உலகம் அறிய வேண்டுவதுதான். மலையாள பாஷை ஒருசிறு எல்லைக்குள் மட்டிலுமிருந்து கொண்டிருப்பதால் வெளி நாட்டார் அச்சிறந்த கலையைத் தெரிந்து கொள்ளாது போகின்றனர். ஸ்ரீஉதய சங்கர் போன்ற பேரறிஞர்கள் அதனைக் கற்று, உலகிற்குக் காண்பிப்பதென்றால் உலகம் மகிழ்ச்சி அடைதலென்னும் லாபத்தை அடைந்து கொள்வதோடு, இந்தியாவின் ஓர் பூர்வீகக் கலை வெளியாகவும், மலையாள நாட்டினர் திறம் புலனாகவும் செய்யும். இதுகாறும் கதகளியை நேரில் பார்த்த எந்த அறிஞர்களும் மயக்கம் கொள்ளாதிருந்ததில்லை. ஒரு ஆங்கில நடிகை, சமீபத்தில் பார்த்து

வகுப்புவாதக் குழப்பம்.



அலாகபாதில் கூடிய ஒற்றுமை மகாநாடு முஸ்லிம்களுக்கு இந்தியச் சட்டசபையில் நூற்றுக்கு 33 விகிதம் ஸ்தானங்கள்தர விசைந்தது. ஆனால் சர். சாமுயல் ஹோர் 35 சதவிகிதம் கொடுப்பதாக வாக்களித்துவிட்டார். ஆகையினாலேயே வகுப்பு வாதம் இன்று தலைவிரித்தாடுகிறது; இந்தியர் ஒற்றுமை சிதைகின்றது.

விட்டு, ஹாலிவுட்டிலிருக்கும் பெரிய சினிமா ஸ்டார்கள் கூடவும் கதகளியிலி ருந்து அதிகமாகப் படித்துக் கொள்ள வேண்டுவதுண்டு என்று கூறினர். அத்தகைய கலையை உதய சங்கர் உலகிற்கு எடுத்துக் காட்டுவது விரும்பத்தக்க ஓர் செயலேயாம்.

அரசியல் அஜீரணம்

உடம்பில் ஜீரணக் கருவிகள் கெட்டு விட்டால் இயற்கையான உணவுகூட ஜீரணிக்கும் நிலைமை மாறி வெறும் கஞ்சியைக் குடிப்பதில் ஒரு திருப்தி ஏற்பட்டுவிடும். இந்த வைத்திய உண்மை அரசியல் விஷயங்களிலும் ஏற்படக் கூடியதுதான் என்று சமீபத்தில் பேசிய அரசியல் நிபுணரின் பிரசங்கத்திலிருந்து தெரிகிறது. அவர்தான் திரு. ராமசாமி முதலியார். அவருக்குப் பூரண சுயேச்சை வேண்டாமாம். 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற பழமொழி இந்த மாதிரியான அரசியல் வாதிகளின் வாவை நினைத்துத்தான் சிருஷ்டிக்கப்பட்டது போலும். ஏதோ ஒரு கவிஞன் "கூண்டுக்குள் இருக்கும் கிளி அந்தக் கூண்டிலிருப்பதையே இன்பமாக நினைத்துவிட்டால் அந்தக் கிளிக்கு வேறு என்ன கதிமோட்சம் இருக்கிறது" என்று கூறினர். இதை நினைப்பூட்டுகிறது மேற்படியார் கூற்று. சர்தார் சார்தூல்சிங்கு சமீபத்தில் இங்கு வந்திருந்தபொழுது காங்கிரஸ் மண்டபத்தில் பேசுகையில், இம்மாதிரி அரசியல் பச்சோந்திகள் பாஞ்சாலத்தில் பொது ஜனங்கள் முன்பு பேசி வெகு நாட்களாகிவிட்டது. பொது ஜனங்களின் முன்பு சென்றால் சிறிதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியும் என்ருர். சென்னைப் பொது ஜனங்களும் பாஞ்சாலத்தினரை விட பிற்போக்கானவர்கள் அல்ல என்பதை இம்மாதிரி அரசியல் வாதிகளுக்கு நிரூபிக்க வேண்டுவதாகும்.

விடுதலை யில்லையா?

ஸ்ரீமதி கமலா நேருவின் நிலைமைப் பரிதாபகாமா யிருக்கிறது. சிறந்த தேசபக்தாகிய அவர் நெடுநாளாக இந்த நிலைமையிலிருப்பதையும் அவரது ஆருயிர்க் கணவர் அதே பொழுது சிறைவாச மனுபவித்து வருவதையும் நினைக்க நினைக்கத் தேசமக்கள் உள்ள முருகுகின்றனர். குணமடைந்திருந்த ஸ்ரீமதி நேருவின் நோய் திடீரென அதிகரிப்பதற்கு ஓர் காரணம் தம் காதலர் சிறையிலுறைவதுதான் என்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையில் பலர் ஸ்ரீ ஜவஹர் விடுதலைபெற்று மனைவி பக்கத்திலிருப்பதே சிறந்த ஔஷதமென்று அபிப்பிராயப்படுகின்றனர். சர்க்கார் இடையிடையே ஒரு நாளோ, இரண்டு நாளோ, மூன்று மணி நேரமே ஸ்ரீமதி நேருவின் பக்கத்தில் ஜவஹரைக் கொண்டுவந்து விடுவதைப் பார்த்தால், மறைமுகமாகச் சர்க்காரும் மேற்படி அபிப்பிராயத்தை ஒத்துக் கொள்கின்றன ரென்றே ஏற்படுகின்றது. காதலரை திடீரென்று காண்பிப்பதும் திடீரென்று மறைப்பதும், நோயை அதிகப்படுத்துமே யன்றி சாந்தப்படுத்தாது என்பதை வைத்திய அனுபவமுடைய எவரும் அறிவர். ஆதலால், ஸ்ரீ நேருவின் பரிதாபகாமான இந்த நிலைமையில், ஸ்ரீ ஜவஹரை விடுதலை செய்து ஓர் உயிரைக் காப்பதே சர்க்காரின் சிறந்த கடமையாக இருக்கும்.

கிறிஸ்தவக் கலாசாலை :: :: மான்மியம்

மாஜி வைஸ்ராய்களுக்கு இங்கிலாந்தின் சீதோஷ்ண ஸ்திதி ஓர் அபூர்வமான மூளை வளர்ச்சியைக் கொடுத்து விடுமோ என்ற சந்தேகம் நமக்கு எழுகிறது. மாஜி வைஸ்ராயான ஹாலிபாக்ஸ் பிரபு (லார்டு இர்வின்) கிறிஸ்தவ மதத்தினல் இந்தியாவிற்கு ஏற்பட்ட நன்மைகளை ஓர் மான்மியமாக எடுத்துப் பாடும் பொழுது, பின்வருமாறு கூறினர். "பொதுஜன வாழ்வில் இருக்கவேண்டிய பொறுப் புணர்ச்சி, நீதி, நேர்மை, சகிப்புத் தன்மை, பெருந்தன்மை, தீரம் இவையெல்லாம் கிறிஸ்தவமதத்தின் விளைவு என்று சொன்னல் மிகையாகாது." 1930 வருஷத்தில், அவர் இந்தியாவில் இருந்த சமயத்தில், இந்தக் குணங்கள் அபரிமிதமாக பாரதகண்டத்தில் காணப்பட்டன. அவை அவர் கூறும் கிறிஸ்தவக் கலாசாலைகளில் உற்பத்தி செய்யப் படவில்லை. அரைமுழத் துண்டு பக்கிரி என்று அவருடைய தேசத்தினர் சொல்லிக் கொண்டிருந்த கிழவரின் ஆச்ரமத்திலிருந்துதான் எழுந்தன. இது பிரபுவுக்குத் தெரியும். ஒருகால் மறக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்திக்கொண்டால், எதை வேண்டுமென்றாலும் புகழலாம். அவர் கூறும் கிறிஸ்தவக் கலாசாலைகள் உள்பட இந்தியக் கல்வியிலாகாப் பிடித்துவைத்த 'இடித்தபுளிகள்' இதற்கு நேர்மாறாகத்தான் இருந்து வருகின்றன என்பதை, வருஷா வருஷம் "உங்கள் விதியை அனுபவியுங்கள்" என்று வெளியே அனுப்பப்படும் கல்வியிலாகாவின் கைவேலைகளைப் பார்த்தால் போதும். கிறிஸ்தவ கலாசாலைகள், தன் மதிப்பற்ற தன்மையும் தனது பழைய மகத்தான வளர்ச்சியை ஒன்றுமில்லை என்று இகழுந் தன்மையையுந்தான் நமக்கு மனமுவந்து அளித்திருக்கின்றன. இவற்றை மாஜி வைஸ்ராய் அறிந்துக் கொள்ளட்டும்.

நிஜாம் சர்க்கார் உத்தரவு

ஹைதராபாத் நிஜாமின் சர்க்கார் தம் சமஸ்தானத்திற்குள் ஆரிய சமாஜிகள் வாலாகாதென்று சில நாட்களுக்கு முன்பு ஓர் உத்தரவு போட்டார்கள். அவ்வுத்தரவு அநீதமானதென்றும் அதனை மாற்ற வேண்டுமென்றும் ஆரிய சமாஜிகள் மனுச் செய்துக் கொண்டார்கள். அம்மனு விடுக்கப்பட்டு நெடு நாளாகியும் திருப்திகாமான பதில் எதுவும் கொடுக்கப்படவில்லை. அதன்மேல் ஆரிய சமாஜிகள் சத்தியாக்கிரகம் தொடங்குவதென முடிவு செய்திருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. பிற மதங்களில் வெறுப்புக்கொள்ளாதநிஜாம் குறிப்பிட்ட ஒரு மதக் கொள்கையாளரை மட்டும் தடை செய்வது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஒருகால் ஆரிய சமாஜிகள் மதப்பிரசாரம் செய்கின்றார்கள் என்பது கருத்தாக விருக்குமானல், பிரஸ்தாப உத்தரவை, எல்லா மதத்தினருக்கும் பொதுப்படையாக விடுத்து "மதப் பிரசாரம் செய்கின்ற எவரும் நாட்டுக்குள் வரக்கூடாது" என்று தடை செய்யலாம். சில விடங்களில் நடைபெறும் மதவாதிகள் செயலைப் பார்க்கும்போது, ஆரியசமாஜிகள் மட்டிலும் தகாத காரியங்கள் செய்துவிடுவார்கள் என்று சொல்வதற்கில்லை. எனவே நிஜாம் சர்க்கார் விஷயத்தைப் பெரிதாக்கிவிடாமல் உத்தரவை மாற்றி விடுவது பொருத்தமாயிருக்கும்.

மூட மதி யகற்று!

36-வது தமிழ் மாகாண மகாநாடு

நிகழ்ச்சிக் குறிப்பு விவரம்

இம்மாதம் 29, 30-ந் தேதிகளில் இங்கு நடைபெறப்போகும் தமிழ் மாகாண மகாநாட்டிற்குத் தமிழ் நாடெங்குமுள்ள காங்கிரஸ் வாதிகள் அனைவரும் விஜயம் செய்து மேற்படி மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைக்க வேண்டுமாய் வரவேற்புக் கமிட்டியினர் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

நிகழ்ச்சிக் குறிப்பு

செப்டம்பர்ஸ்ரீ 29-ந் தேதி சனிக்கிழமை காலை 7-40 மணி—காங்கிரஸ் தலைவருக்கும் பிரதிநிதிகளுக்கும் ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்பு.

7-45 மணி முதல் 9 மணி வரை தலைவர் ஊர்வலம்.

காலை 9 மணி:—ஒய். எம். ஸி. ஏ. காம்பவுண்டில் தேசியக் கொடியேற்று விழாவை ஸ்ரீமதி கஸின்ஸ் நடத்தி வைப்பார்.

மாலை 2 மணி முதல் 4-30 மணி வரை சுவாமி பிக்சர் பாலசில் காங்கிரஸ் மகாநாடு நடைபெறும். வரவேற்புக் கமிட்டித் தலைவர் பிரசங்கம், மகாநாடு ஆரம்பிக்கப்படல், தலைவர் தேர்தல், மகாநாட்டுத் தலைவரின் பிரசங்கம்.

விஷயாலோசனைக் கமிட்டிக்குத் தேர்தல்கள் டெலிகேட்டுகளின் ஜாகையில் நடைபெறும்.

இரவு 8-30 மணிக்கு மேல்:—ஒய். எம். ஸி. ஏ. ஹாலில் விஷயாலோசனைக் கமிட்டியார் கூட்டம்.

செப்டம்பர் 30உ ஞாயிற்றுக்கிழமை


காலை 8 மணி முதல் 11 மணி வரை சாமி பிக்சர் பாலசில் மகாநாடு கூடி தீர்மானங்களைப் பற்றி யோசித்தல்.

மாலை 2 மணி முதல் 4-30 மணி வரை மகாநாடு நடைபெறும்.

4-30—5 தலைவரின் முடிவுரை?

காந்தி ஜயந்தி.

அக்டோபர் 2-ந் தேதி காந்தி ஜயந்தி வருகிறது. அதனைச் சென்னையில் கொண்டாடப் போட்டிருக்கும் திட்டமாவது:—



(1) சென்னையில் 2-ந் தேதி காலையில் எல்லா டிவிஷன்களிலும் ஊர்வலம், பிரார்த்தனை.

(2) ஏழைகளுக்கு அன்னமளித்தல்.

(3) அக்டோபர் 1-ந் தேதி மாலை 6 மணியிலிருந்து 7 மணி வரையில் காங்கிரஸ் மண்டபத்தில் பாரதிக் கீதப் போட்டி. நன்றாகப் பாடுபவர்களுக்கு 4 பரிசுகள்.

(4) அரசியல் தியாகிகள் காங்கிரஸ் மண்டபத்தில் 2-ந் தேதி காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிக்குள் அங்கிருக்கும் ஒரு புஸ்தகத்தில் தங்கள் விலாஸத்துடன் கையெழுத்துச் செய்வது.

(5) மாலை 5 மணிக்கு (அக்டோபர் 2) காங்கிரஸ் மண்டபத்தில் கொடி வணக்கம்.

(6) காங்கிரஸ் மண்டபத்திலிருந்து திலகர் கட்டத்திற்கு ஊர்வலம்.

(7) மாலை 6 மணிக்குத் திலகர் கட்டத்தில் பொதுக்கூட்டம்.

ஜவஹர்லாலை சிறைப்படுத்தலாமா?

செப்டம்பர் 25ந் தேதி அலகபாத் ஹைகோர்ட் நீதிபதியான ஸ்ரீ கிஷ் முன்னிலையில் அட்வொகேட் ஸ்ரீவிரிஹாரிலால் அகர்வாலா கி. பி. கோ. 491 வது பிரிவின் கீழ் ஓர் மனுவைச் சமர்ப்பித்தார். சட்டப்படி பண்டித ஜவஹர்லால் நேருவை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்பதே அம்மனுவின் கோரிக்கையாகும். பண்டித ஜவஹர்லால் நேருவை தாற்காலிகமாக விடுதலை செய்தது பற்றி அம்மனுவில் குறிப்பிட்டிருப்பதுடன், மற்றும் அதில் ஸ்ரீ அகர்வாலா கூறியிருப்பதாவது:—ஓர் முறை பண்டித ஜவஹர்லால் நேருவை விடுதலை செய்தபின், பின்னர் அவரைக் கைது செய்து சிறைப்படுத்தச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. எனவே மீண்டும் புதிதாக அவர் மீது வழக்குத் தொடராமல் அவரைச் சிறைப்படுத்த முடியாது. எனவே, பண்டிதரை விடுதலை செய்யும்படிக் கோர்ட்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தவிர, அவருடைய மனைவியின் நிலைமை ஆபத்தாக இருந்து வருவதால், இம்மனு விசாரணை முடியும் வரை அவரை விடுதலை செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் அட்வொகேட் பிரசன்னமாகும்போது, அம்மனுவை விசாரணைக்குக் கொண்டுவரும்படி நீதிபதி உத்திரவிட்டார்.

காங்கிரஸ் கூடும் தேதி

பம்பாய்க் காங்கிரஸ் அக்டோபர்ஸ்ரீ 26-ந் தேதியிலிருந்து நடைபெறும். இதுவரையில் 17 மாகாண, காங்கிரஸ் கமிட்டிகள் பாபு ராஜேந்திர பிரசாத் பெயரைச் சிபார்சுச் செய்திருப்பதால், அவரே காங்கிரஸ் தலைவராய் இருப்பார் என்று தெரிகிறது.

மீராபென் பிரசாரம்

இங்கிலாந்திலுள்ள பிரமுகர்களும் இந்தியத் தலைவரான மகாத்மாவும் இன்னும் சில பிரமுகர்களும் சந்தித்து ஒரு முடிவிற்கு வந்தாலொழிய இரண்டு தேசத்திற்கிடையிலுள்ள மனக் கசப்பு நீங்காது என்று ஒரு அறிக்கை தயாரித்து அதில் பொது மக்களின் கையெழுத்துக்களை மீராபென் தன் பிரசங்கங்களின் பொழுது பெற்று வருகிறார்.

பேரிகை.

ராய. சொ.

19—8—32-ல் வேலூர்ச் சிறையிற் பாடியது.

(உரிமை ஆக்கியோனுடையது)



திசைகுலுங்க அலைபுலம்பச் சேர்ந்துகொட்டு பேரிகை
செகங்கலங்க மலையெழும்பச் சேர்ந்துகொட்டு பேரிகை

ஏழையில்லை கோழையில்லை என்றுகொட்டு பேரிகை
இந்தியா எழுந்துவிட்ட தென்றுகொட்டு பேரிகை

அடிமைவாழ்வு படியிலில்லை என்றுகொட்டு பேரிகை
மடிமையில்லை மிடிமையில்லை என்றுகொட்டு பேரிகை

எங்கள்நாட்டை நாங்கள்ஆள்வோம் என்றுகொட்டு பேரிகை
பங்கவாழ்வு வாழமாட்டோம் என்றுகொட்டு பேரிகை

விடுதலைக்கு உயிருமீவோம் என்றுகொட்டு பேரிகை
விடுதலையைப் பெற்றேதீர்வோம் என்றுகொட்டு பேரிகை

என்றைக்கேனும் இறப்பதுறுதி என்றுகொட்டுபேரிகை[ரிகை
வென்றிகொள்வோம் மெய்ம்மைமெய்ம்மை என்றுகொட்டுபே

அச்சமென்ப தணுவுமில்லை என்றுகொட்டு பேரிகை
இச்செகத்தில் எவர்க்குமஞ்சோம் என்றுகொட்டு பேரிகை

கொடுமையான சட்டமஞ்சோம் என்றுகொட்டு பேரிகை
தடியுமஞ்சோம் அடியுமஞ்சோம் என்றுகொட்டு பேரிகை

எந்திரபீ ரங்கியஞ்சோம் என்றுகொட்டு பேரிகை
தந்திரப்பேச் சினிப்பலிக்கா தென்றுகொட்டு பேரிகை

உரிமைதடுக்கும் எதையுமழிப்போம் என்றுகொட்டு பேரிகை
உரிமையில்லா வாழ்வுவேண்டோம் என்றுகொட்டு பேரிகை

காந்தி--ஆனே ஒப்பந்தம்

மாளவ்யாஜீ அபிப்பிராயம்

காந்திஜீயும் ஆனேயும் தனித்த முறையில் சமரசம் ஏற்படுத்திக்கொள்வதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதன் கருத்து எந்தெந்த விடங்களில் தேசியக் கட்சியாருக்கு ஆதரவு அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த விடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களை எடுத்துவிடுவது என்பதுதான். இது பற்றி மாளவ்யாஜியிடம் நிருபர்கள் கேட்ட போது அடியில் வருமாறு பதில் கூறினார்:—

தற்சமயம் எந்தெந்த அபேட்சகர்களை நிறுத்துவதென்று சொல்லுவது கஷ்டம். அபேக்ஷகர்களின் அந்தஸ்து உரிமை முதலியன கவனிக்கப்படவேண்டும். இதுவரை வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம், மத்திய மாகாணம், சிந்து, அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களிலேயே அபேட்சகர்களை நிறுத்துவதென்று நிச்சயித்திருக்கிறோம். இதுவரை நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் தேசியவாதிகள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்களே. ஆனால் வெள்ளைக் காகிதம், வகுப்புத் தீர்ப்பு ஆகிய இரண்டையும் எதிர்க்கவும் காங்கிரசை ஆதரிக்கவும் செய்யும் ஒன்றிரண்டு காங்கிரஸ்வாதிகளல்லாதாரை எங்கள் கட்சி ஆதரிக்கும். எங்கள் கட்சி அபேட்சகர் ஜாபிதா வெளி வந்ததும் காங்கிரசுடன் கலந்துகொள்வோம்.

தனவந்தர் :—நான் ஏன் உனக்கு 100 ரூபாய் கொடுக்கவேண்டும்.

வாங்குகிறவன் :—நான் 150 ரூபாய் கேளாததால்.

—எம். ரங்கநாதம் எம். ஏ.



குருடாக்கும் ஒளி ரேகை

கில் ஹாஸ் என்ற ஜெர்மானியர் கண்ணைக் குருடாக்கும் ஒளிரேகையைக் கண்டுபிடித்துப் பிரஞ்சு அரசாங்கத்திற்குக் கொடுத்திருப்பதாகப் பாரிஸ்மிடி என்ற பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. அந்த யந்திரம் கைத்துப்பாக்கி மாதிரிதான் இருக்கும். சுட்டவுடனே ஓர் பிரகாசமான வெளிச்சம் உண்டாகி அரை மைல் தூரம் வரைக்கும் இருக்கும் பிராணிகளைக் குருடாக்கி விடும். இதை யுத்தத்தில் உபயோகித்தால் எதிரிகள் முன்னின்று தங்கள் ஆயுதத்தை உபயோகிக்க முடியாது. இதைப் பரீட்சை செய்து பார்த்ததில் 150000 மெழுகுவர்த்திகளின் பிரகாசத்தைக் கொடுக்க கூடியது என்றும் அதன் முன்னின்ற உயிர் பிராணிகள் குருடாகி மயங்கி விழுந்து விடுகின்றன என்றும் தெரிய வருகிறது.

உலகத்தில் உயரமான கட்டிடம்

ஸோவியத் ரஷ்யா, உலகத்திலேயே மிகவும் உயரமான கட்டிடம் ஒன்றை மாஸ்கோ நகரத்தில் கட்ட உத்தேசித்திருக்கிறது. அதனை, நகரத்தின் கிராமின் மேற்குச் சுவருகில் கட்டுவதாகவும் 1937-ம் வருஷத்தில் முடித்துவிடக் கூடும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அதன் உச்சியில் அலுமினியத்தினாலாவது குரோம் ஸ்டீலினாலாவது 260 அடி உயரமுள்ள லெனின் சிலை ஒன்றை வைக்கப் போகிறார்கள். கட்டிடத்தின் மொத்த உயரம் 1361 அடி. அஸ்திவாரம் பளிங்குக் கற்களினாலும் கருங்கற்களினாலும் போடப்படும்.

வயர்லெஸ் நாய்

கம்பியில்லாத மின்சாரச் சக்தியின் உதவியால் குலைக்கும் நாயைப் போன்ற வயர்லெஸ் ஸெட்டு தயாரித்து லண்டன் ஒலிம்பியாக் கண்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அறைகளில் இருக்கும் ஏதாவது ஒரு வஸ்துவைத் தொட்டால் உடனே ஒரு சிறு கிரணம் வேலை செய்ய ஆரம்பித்து நாய் போல் பலத்த சத்தத்தில் குரைக்க வாரம்பிக்கிறது. பிறகு மனிதக் குரல் ஒன்று கேட்பதுபோல் தொனிக்கும்படி அந்த யந்திரம் செய்யப்பட்டிருக்கிறது.

கடல் ஜலத்திலிருந்து பெட்ரோல்

ஆல்டோர் சாஹெர்ஸ் என்ற பிரஞ்சு மெக்கானிக் கடல் நீரிலிருந்து பெட்ரோல் உற்பத்தி செய்ய ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார். இந்த மாதிரி எடுக்கப்பட்ட பெட்ரோலுக்குக் காலன் 0—0—6 வீதந்தான் கிரயமாகும் என்று சொல்லுகிறார். இம்மாதிரி செய்வதற்கு ஸஹரால் என்ற பொருள் அவசியமாகிறது. அதைத் தயாரிக்கும் முறையை 2½க் கோடிப் பவுனுக்கு விற்றுவிடத் தயாராக இருக்கிறார்.

திராக்ஷை புளித்துவிட்டது

பிரஞ்சு தேசத்தைச் சார்ந்த பிளூரிக் கிராமத்துத் திராக்ஷை விவசாயிகள் தார் போடப்பட்ட ரோட்டுத் தூசியினால் பழங்கள் புளித்துவிட்டன என்று கவர்ன்மெண்டிடம் நஷ்ட ஈடு கேட்கிறார்கள். அரசாங்கம் நிபுணர்களிடம் இதை ஆராய்ச்சிக்கு விட்டிருக்கிறது. ரோட்டின் பக்கத்திலுள்ள கொடிகளில் பழங்கள் புளிப்பாகத்தான் இருக்கின்றனவாம்.

ரேடியம் உற்பத்தி

பல்கேரியாவில் ரேடியம் கிடைக்கும் பிரதேசம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ரேடியம் 83% விகிதம் வெகு எளிதாக எடுக்கக்கூடும் என்று அமெரிக்க ரஸாயன சங்கம் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறது.

11 மைல் பாலம்

ஜீலந்து தீவிற்கும் பூனன் தீவிற்கும் இடையில் ஒரு பெரிய பாலம் கட்டுவதாக டென்மார்க்கு தீர்மானித்திருக்கிறது. இதுதான் உலகத்திலேயே பெரிய பாலமாக இருக்கும். அது பதினோரு மைல் நீளமிருக்கும். இடையில் அதைத் தாங்குவதற்கு 164 தூண்கள் நிறுத்தப்படும். இதற்குச் செலவு 62,50,000 பவுன்கள் ஆகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

ஆகாயத்தின் இரகஸியங்கள்

நட்சத்திர வெளிகளில் இருந்துவரும் ஒளி ரேகைகளைப் புகைப்படம் பிடிப்பதற்குப் புரொபெஸர் ரால்ப்பெனட் என்ற அமெரிக்க விஞ்ஞானி யந்திர மனிதனை (Robots) கொலராடோவிலிருக்கும் எவான்ஸ் மலைச் சிகரத்தில் சமுத்திர மட்டத்திலிருந்து 14,120 உயரத்தில் வைத்திருக்கிறார். இது விசை கொடுத்து வைத்துவிட்டால் ஐந்து வருஷங்களுக்குத்தானே புகைப் படங்களை எடுத்துக்கொண்டிருக்கும். இதன் கனம் 3,200 பவுண்டுகள். இதைப்போல் இன்னும் ஆறு யந்திரங்களை ஆறிடங்களில் வைக்கப்போகிறார்.

புதுவிதமான பிளாட்டினம்

ருஷ்ய தேசத்து புரொபெஸர் ஜ்விய கின்ட்ஸெவ் என்பவர் புதுவிதமான பிளாட்டினம் பண்படுத்தாத நிலையில் கண்டு பிடித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அந்த உலோகத்தில், இரிடியம், ஆஸ்மியம், தங்கம், ருதேனியம் என்ற பொருட்கள் இருக்கின்றன. ரசாயன X-ரே பரீட்சைகளில் தங்கம், ஆஸ்மியம், ருதேனியம் என்பவைகள் பாகுஆன இரிடியத்தில் கலந்து

கெட்டியாகச் சேர்ந்திருக்கிறது என்று அவர் கண்டு பிடித்திருக்கிறார்.

கன்னப் புற்றிற்குக் காய்கறி மருந்து

டாக்டர் நீல்வீட்ச் என்பவர் கன்னப் புற்று என்ற வியாதி பச்சைக் காய்கறிகளைத் தின்பதினால் குணமாகி விடுகிறது என்று பிரசங்கம் செய்தார். பொட்டாஸியம் என்ற தாது குறைவதினால்தான் கன்னப்புற்று வியாதி வருகிறது. ஆனால் பொடாஸியத்தைக் கொடுத்துக் குணப்படுத்திவிட முடியாது. இதுவரை கன்னப் புற்றை ஆப்பரேஷன் செய்தே குணப்படுத்தி வந்திருக்கிறார்கள். தாது உப்புக்கள் கொடுப்பதினால் தான் குணப்படும் என்று தெரிகிறது. இதற்குப் பச்சைக்காய்கறிகளை உண்பது தான் சரியான முறை. காபேஜ், டர்னிப் என்ற சீமைக் காய்கறிக் கிழங்கு வகைகள் இந்தத் தாதுவை விருத்திப் படுத்திவிடுகின்றன. இவைகளைப்பிஞ்சுப் பருவத்தில் குறுக அறுத்து உண்ண வேண்டும்.

பைத்தியத்தைப் போக்க நூதன முறைகள்

இங்கிலாந்தில் மானத ° வைத்திய நிபுணர்கள் பைத்தியத்தைக் குணப்படுத்த நூதன முறைகளைக் கையாள உத்தேசித்திருக்கிறார்கள். நோயாளிகளைத் (பைத்தியம் பிடித்தவர்களை) தனியாக அறையில் போட்டுப் பூட்டி வைப்பதினால்தான் அவர்களுடைய பைத்தியம் வெகு நாட்கள்வரை குணமடைவதில்லை என்று கூறுகிறார்கள். இதனால் அவர்களுக்கு நடனம், சங்கீதம் முதலிய பொழுது போக்கு வசதிகளையளித்தால் சீக்கிரம் வியாதி குணப்பட்டுவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

லண்டன் கௌண்டி கௌன்ஸில் இதற்கு ஏற்ற வசதிகளை யளிப்பதற்கு உத்தேசித்திருக்கிறது.

நாகரிக மாதர்களில் பலர் இந்தத் தொண்டைத் தாங்களாகவே ஏற்றுக் கொண்டு பைத்தியக்காரர்களைக் களிப்பூட்டும் இம்மாதிரியான உல்லாசப் பொழுது போக்கு வசதிகளைக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள்.

செல்வவதியான வாலிப மங்கையொருத்தி தன் வாழ்க்கையை இந்தத் தொண்டிலேயே செலவிட உத்தேசித்துதான் எண்ணியிருந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டாள். இம்மாதிரியாக எத்தனையோ பெயர்கள் இதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

இதுவுமல்லாமல், டென்னிஸ், நீந்தல் முதலிய தேகப் பயிற்சி வசதிகளையும் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். இம்மாதிரி செய்வதில் வெகு நன்மையிருக்கிறதென்றும், இந்த வேலையை யேற்றுக் கொள்ளுபவர்கள் சற்று மானத வைத்திய முறைகளையும் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு வைத்திய நிபுணர் கூறுகிறார்.



காரைக்குடி சுகாதாரவாரக் கொண்டாட்டத்தின் போது ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தனவணிக மாணவி அ. சீதை. இச் சிறுமி ஸ்ரீமீனாக்ஷி பெண் பாடசாலையில் படிக்கிறாள். பரிசிலுக்குரிய வெள்ளி டம்ளர் பக்கத்தில் காணப்படுகிறது.

2000 வருஷ விளக்கு

ருஷ்யாவையடுத்த டாகன்டாக்என்ற பிரதேசத்து பால்டிக் மணற் கரையில் தொன்மையாராய்ச்சியாளர்கள் 2000 வருஷங்களுக்கு முன் புதைபட்ட ஒரு தூபத்தைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். அதில் காய்ந்து ஒட்டிக் கொண்டிருந்த வாசனை எண்ணெய் தூபத்தை ஏற்றிய பொழுது இன்னும் நறுமணங் கமழ்ந்தது.

தேம்ஸ் நதிக்கு அணைக்கட்டு

தேம்ஸ் நதியின் குறுக்கே ஒரு பெரிய அணைகட்டுவதற்கு திரு எச். ஓ. பன்ஜ் என்ற லண்டன் என்ஜினியர் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார். அதற்குப் பத்து லக்ஷம் பவுன்கள் செலவாகும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

புதைபட்ட நகரம்

ஸான்மிகல் என்ற மலையை யடுத்த வலென்ஷியா என்ற ஸ்பானியப் பிரதேசத்தில் ஒரு புதைபட்ட பூர்வீக நகரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதில் பழைய காலத்தில் உபயோகப்பட்ட பாத்திரங்களும் அந்தப் பூர்வீக ஜாதியார் வரைந்த படங்களும் கிடைத்திருக்கின்றன. அத்துடன் அவர்கள் பாஷையின் எழுத்துக்கள் பூராவும் கிடைத்திருக்கின்றன. அது கிரேக்க நாகரிகத்தின் சின்னங்களைத் தழுவி யிருக்கின்றன என்று அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சூரிய கிரணத்தினால் ஓடும் மோட்டார்

பெட்ரோலுக்குப் பதிலாக, சூரிய கிரணத்தின் சக்தியை, போட்டோ எலெக்டிரிக் யந்திரத்தினால் பல மடங்கு அதிகமாக்கி அந்தச் சக்தியால் மோட்டார்களை ஓட்டலாம் என்று இரண்டு டச்சுக்காரர்கள் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் ஒரு யந்திரம் தயாரித்திருக்கிறார்களாம். இது உண்மையானால் தொழில் முறையில் பலத்த மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். இதே மாதிரி எகிப்தியர்கள் பழைய காலத்தில் சூர்ய கிரணங்களை வெந்நீர் கொப்பரைகளில் பாய்ச்சி அதனால் நீராவியை உண்டு பண்ணி சில யந்திரங்களை ஓட்டினார்கள் என்று எகிப்திய நாகரிக ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள்.

100 வருஷப் புகைப்பட வளர்ச்சி

புகைப் படம் எடுக்கும் கருவிகளின் நூறு வருஷ வளர்ச்சியைக் காண்பிக்



புராண விநோதம்

(வைசம்பாயனன்)

கிருஷ்ணன் இடையர் வீட்டிலே வளர்ந்து வரும்போது, குழந்தைப் பருவத்திலே மண்ணை அள்ளிச் சாப்பிட்டானாம். அதைக் கவனித்த தாயாராகிய, யசோதை, மண்ணை ஏன் தின்கிறாய் என்று குழந்தையை அடித்தாளாம். உடனே குழந்தையாகிய கிருஷ்ணன் வாயைத் திறந்தானாம். வாய்க்குள்ளே உலகம் முழுமையும் தெரிந்ததாம். எப்படி மனுஷன் வாய்க்குள்ளே உலகம் முழுமையும் தெரியும்? அப்படித் தெரிந்திருந்தால் அதிலே பெரிய பெரிய பட்டணங்களெல்லாம் தெரிந்திருக்குமே. அதிலே வண்டிகளெல்லாம் ஓடுமே. சமுத்திரக் கரையிலே பெரிய பெரிய கப்பலெல்லாம் நின்றிருக்குமே. இன்னும் கடைத் தெருக்களும் மனுஷாள் போக்கு வரத்தும் எல்லாந்தானேயிருந்திருக்கும் என்று நினைத்தால் சிரிப்புவந்து விடுகிறது. அதோடு கிருஷ்ணனும் யசோதையும் தங்கிய ஆயர்பாடியும்கூடக் காணப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் அதில் (கிருஷ்ணன் யசோதையாகிய) அவர்களும், கிருஷ்ணனின் திறந்த வாயும், அதற்குள் சகல உலகமும் காணப்பட்டனவோ என்னவோ? கதையோடு கதையாய் அந்தக் 'கப்பை'யும் அடித்தாரில்லை பௌராணிகர்.

* * *

இன்னும், மேற்படிக் கதையில் கிருஷ்ணன் வாயில் பதினாலு உலகமும்—அதாவது அதல விதல சுதல ரசாதல மகாதல பாதாள என்று தொடங்குகின்ற பீரங்கிக் குண்டுகள் 14-ம் தோற்றியதாகக் கூறப்படுகிறது. ஐயோ! நரகலும் இதர ஆபாசங்களும் அடங்கிய நரகலோகம் கூடவா கிருஷ்ணனின் வாயில் இருந்தது? என்ன ஆபாசம்!

* * *

கிருஷ்ணன் மாடு மேய்க்கும்போது ஒருநாள் மழை வந்து விட்டதாம். கோவர்த்தனகிரி என்ற மலையை அடியோடு பெயர்த்துக் குடையாக ஒரு கையிலே பிடித்துக்கொண்டு, மாடு ஆடு மேய்த்தவர்கள் எல்லாரையும் அந்தக் குடையின்கீழ் தங்கச் செய்தானாம். மழை நின்ற பிறகு மறுபடி கீழே வைத்து விட்டானாம். இவ்வளவு சுலபமாக மலையைப் பெயர்த்துக் குடை பிடித்ததாகக் கதை வேண்டுமானால் அழகாகச் சொல்லலாமே தவிர இதெல்லாம் நடக்கிற காரியமா? மலையென்ன மசால் வடையா?

* * *

இன்னும் கிருஷ்ணன் பதினாயிரம் கோபிகா ஸ்திரீகளோடு கலந்து ஸ்திரீலோலனாக இருந்தானென்று சொல்லுகிறார்கள். கிருஷ்ணன் அவதார புருஷன் என்று சொல்லும்போது அவன் ஊரிலுள்ள பெண்களையெல்லாம் தனக்குப் பெண்டாட்டிகளாக ஆக்கிக்கொண்டான் என்று சொன்னால் அது நிரம்பக் கேவலமான சங்கதியாக அல்லவா இருக்கிறது? இத்தோடு விட்டார்களா? கிருஷ்ணன் ஆற்றங் கரையிலே குளிக்கப்போன பெண்களுடைய சேலைகளையெல்லாம் திருடிச் சுருட்டி எடுத்துக்கொண்டு ஒரு மரத்தின்மேல் ஏறி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானாம். பெண்களெல்லாம் நிருவாணமாக நின்று தன்னை வணங்கிக் கெஞ்சிக் கேட்டால்தான் சேலைகளைக் கொடுப்பேனென்று சொல்ல, அவ்விதமே அந்தப் பெண்களெல்லாம் செய்த பிறகு, சேலைகளைக் கொடுத்தானாம். இப்படிப்பட்ட மானங்கெட்ட ஒழுக்கக் கேடான கதைகளைச் சொல்லிக் கிருஷ்ணனைப் பெரியவனாக எண்ணுவதைக் காட்டிலும் கிருஷ்ணனை ஆண் பெண் சகலரும் தங்களுடைய கடவுளாக எண்ணி அன்போடு சதா த்யானித்தார்கள் என்று சொன்னால் உள்ளபடியே பெருமையாக இராதா? இதை விட்டுவிட்டு ஒழுக்கக் கேடான சங்கதிகளைக் கூட்டிப் பெருமை கொடுக்க நினைக்கிறார்கள். ஊரிலுள்ள பெண்கள் சேலைகளைப் பிடுங்கினானென்றால், அவர்கள் வீட்டு ஆண்கள் என்ன செய்யப் போனார்கள்?

* * *

இராமனைப்பற்றி இராமாயணம் படித்தவர்களுக்கெல்லாம் தெரியும். சமுத்திரத்திலே அணைகட்ட ஏற்பாடு செய்யும்போது சமுத்திரம் பெருங் கொந்தளிப்பாக இருந்ததாம். உடனே ஒரு பாணம் போட்டானாம் இராமன். சமுத்திர ராஜன் பயந்து தன் பெண் ஜாதியோடு பறந்துவந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அணைகட்ட வழி விட்டானாம். ஆனால் சமுத்திரத்துக்குள் ஒரு அரசன் பட்டம் கட்டிக் கொண்டிருக்கிற சங்கதி கதையில்தானிருக்கிறது. அந்த அரசனுக்குக் கோட்டை, படை முதலியனவும் ஒரு வேளை சமுத்திரத்துக்குள்ளேயே இருக்கலாம். நாம் எத்தனையோ முறை கப்பலில் பிரயாணம் செய்கிறோம். நமக்குக் கடலுக்குள், சமுத்திர ராஜன் பட்டணம் இருக்கிற இடம் முதலியன ஒருவராவது சொல்லமாட்டேனென்கிறார்கள். யாராவது சொன்னால் அதையும் போய்ப்பார்த்து வரலாமென்று ஒரு ஆசையிருக்கிறது.

லண்டன் இன்ஸ்டிட்யூட் காலரிகளில் ஒரு கண்காட்சி விழா நடந்தது. அதில் பல புகைப்படச் சங்கங்கள் கலந்துக் கொண்டன. 1834 வருஷம் முதல் முதலாகப் புகைப்படம் கண்டுபிடித்த பாக்ஸ் டால்பட் என்ற அறிஞர் உபயோகித்த காமிரா கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் செகண்டிற்கு 2,500 புகைப்படங்கள் எடுக்கக்கூடிய நூதன சினிமாக் காமிராவும் இருந்தது. இவை இரண்டும் நூற் வருஷவளர்ச்சியைத் தெரிவிக்கின்றன.

கொடை வள்ளல்

அல்லது

கற்பின் உறைவிடம்

(திரு. கே. வி. எஸ். வாஸ்)

[இது தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வரும் ஓர் பழங் கதை. பழைய மூளையின் தன்மையை விளக்கும் நிலைமையில் எழுதப்பட்டிருக்கிறது. பண்டைய புராணங்களோடு இதனைக் கொள்வதில் ஆட்சேபமில்லை.]

வள்ளாள மன்னன் ஏற்பவர்களுக்கில்லையெனாது இட்டுவரும் கொடையாளிகளிற் தலைசிறந்து விளங்கிய உத்தமனவர். வீரர்கள் வாழ்ந்துவந்த விஜப நகர்ப் பூபதிகளுள் ஒருவர். கற்றறிந்த அறிஞர். குடிகளின் குறைகளையறிந்து, நாடு செழித்தோங்க, நலத்தையே நாடி நாணயமாய்ச் செங்கோல் செலுத்தி வந்த வேந்தர். ஆனால், அரண்மனையில் அவருக்கு எவ்வளவு சுகமிருந்தும், அன்னியர்களின் புகழ்ச்சிக்கு எவ்வளவு பாத்திரனாகவிருந்தும் அவன் உள்ளக் களிப்பற்று உயிரற்றவரைப் போல் தனது வாழ்நாளைக் கடத்தி வலானர். எவ்வளவு சுகம் வெளியிலிருந்தும் உள்ளத்திற் சுகமில்லாதவர்களுக்கு உண்மைச் சுகமேது?

வள்ளாள மன்னரை வருத்தி வந்த துன்பம் யாது? மணமாகிப் பல ஆண்டுகளாகியும் தனக்குப் புத்திரப் பேறுண்டாகவில்லையே யென்ற ஒரே துக்கமே அவர் மனதை மாளாத் துயரத்திலாழ்த்தியது. பாலகனைப் பெற்றெடுத்து அவனது மழலை யமுதம் செவிகளிற் பாய்ந்து இன்புறும் காலம் நமக்குக் கிட்டும் நாள் எந்நாளோவென ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார்.

பொன்னுடையரேனும் புகழுடைய
ரேனும் மற்
றென்னுடையரேனும் உடையரோ—
இன்னடிசில்
புக்களையும் தாமரைக் கைப்பூநாறும்
செய்யவாய்
மக்களைஇங் கில்லாத வர்.

என்றபடி எவ்வித ஐசுவர்யங்களிருப்பினும், அதிகாரங்களிருப்பினும், புகழிருப்பினும், புத்திரனில்லாதோர்க்கு ஒன்றுமில்லாததைப் போன்றன்றோ? மனம் வருந்திய மன்னன் புத்திரப் பேறை நாடித் தன் ராஜ்யத்திற்குவரும் சைவ சந்நியாசிகள் ஒவ்வொருவரையும் வணங்கி ஆசிபெற்று வந்ததுமன்றி தர்மங்களைக் குறைவிலாது செய்துவந்தான்.



ஆஸ்திரேலியாவிலுள்ள 'கம்' மரங்கள். மற்ற மரங்கள் பனிக்கட்டியில் வளர்ந்து நிற்கச் சக்தியற்ற காலையிலும், இவை தழைத்து நிற்பதைப் படத்தில் காணலாம்.

N. I. A.

அவனது வாக்குறுதியைப் பரிசோதிக்க வெண்ணிய பரமசிவன் ஓர் சமயம் ஆண்டியைப்போன்று வேடம் புனைந்து அரசனை நாடி "வேந்தே! இரங்குபவர்களுக்கில்லையெனாது அளிக்கும் உன் புகழ் என் செவிகளிற்பட்டு நானிங்கு வந்தேன். நான் கேட்பதைத் தருவாயா?" என்றார்.

"சித்தரே! தாங்கள் எதைக் கேட்பினும் தடையின்றித் தருவேன். தாமதமின்றித் தயங்காது கேளுங்கள்!" என்றுரைத்தான் வல்லாள மன்னன்.

"மன்ன! வாக்குறுதி செய்துவிட்டுப் பின்னால் மனம்நொந்து கொள்வதிற் பயனில்லை. ஆண்டவன் சாட்சியாய், உன் மாதாபிதாக்களின் சாட்சியாய், வானம் பூமி சாட்சியாய் நான் கேட்பதைக் கொடுப்பதாக உறுதி கூறினாலன்றி நான் வாய் திறந்து கேளேன்" என்றார் ஆண்டி வேடம்பூண்ட ஆதி முதல்வன்.

"அப்படியே பிரதிக்ஞை செய்கின்றேன்! நீங்கள் வேண்டுவதைக் கேட்கலாம்!" என்று தயங்காது கூறினான் கொடை வள்ளல். சித்தர் சற்று ஆலோசித்தார்.

"மன்ன! எனக்குப் பெண் போகம் வேண்டும்!" என்றார் சித்தர். அரசன் திகைத்து நின்றான். "சித்தரே! தங்கள் போன்ற ஞானிகள் ஸ்திரீ போகத்தை இச்சிப்பது தர்மமா? உலகைத் துறந்த உத்தமர்களே சிற்றின்பப் பற்றுகளைக் கொண்டிருப்பின் அற்ப அறிவுடையோர்களை நாம் என்னவென்றுரைப்பது?" என்று மனவருத்தத்துடனுரைத்தான் மன்னன். சித்தரின் முகத்தில் கோபக் குறிகள் தோன்றின.

"அரசே! அந்தப் புராண நீதிகளையெல்லாம் கேட்க நான் உன்னிடம் வரவில்லை; பெண் கேட்கவே வந்தேன். இல்லையெனக் கூறிவிடின் இதோ சென்றுவிடுகின்றேன்!" என்றார் சித்தர்.

"சித்தரே! தாங்கள் எதைக் கேட்பினும் இல்லையெனாது கொடுப்பதாய் வாக்களித்த என் வார்த்தையை யொருகாலும் தவறி நடவேன். இன்றிரவு தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்விக்கப் பூவை யொருவளை யனுப்புவேன்!" எனக் கூறிவிட்டுத் தனது அமைச்சனை யழைப்பித்து நகரிலுள்ள தாசிகளிலொருவளை யிட்டு வரும்வண்ணம் ஆக்ஞாபித்தான் மன்னன். அமைச்சன் ஊர் முழுதும் அலைந்து திரிந்துவிட்டு திரும்பி வந்துவிட்டதாகக் கூறவும் அரசன் யாது செய்வதெனத் தெரி

யாது கவலையுடன் அந்தப்புரத்தை நாடிச்சென்றான்.

அவனது முதல் மனைவி மன்னன் முகம்வாடி யிருப்பதைக் கண்ணுற்றுக் கலவரத்துடன் "நாதா! தங்கள் மனதிலிருக்கும் வருத்தம் யாதோ? என்னிடம்கூட கூறக் கூடாதா?" என்று பணிவுடன் பண்பாய் வினவ அரசன் சற்று ஆலோசித்துவிட்டு "கண்மணி! என்னை நாடியோர் சித்தர் பெண் போகம் வேண்டினார். நானும் அளிப்பதாக வாக்களித்து விட்டேன். ஆனால் ஊரில் எந்தத் தாஸியும் கிடைக்கவில்லை. என்ன செய்வதென விளங்கவில்லை. தன்னிடமுள்ள நாயகனை விட்டுச் சித்தருடன் கூடுமாறு நான் தாஸிகளைக் கட்டளையிடக் கூடுமாயினும் அவ்வண்ணம் செய்வதற்கு என் மனம் இடந்தாவில்லை. ஏனெனில் இன்பக் கனவு கண்டுகொண்டு இல்லம் நாடிவந்த நாயகன் தாஸி தன்னை விட்டுச் சென்றுவிட்டால் எவ்வளவு கஷ்டப்பட்டு வருந்துவான். அவன் சாபத்திற்கு நான் ஆளாக வேண்டுமல்லவா? என் வார்த்தையை எப்படிப் பூர்த்தி செய்து வைப்பேன்!" எனக் கூறி வருந்தினான் மன்னன். அதைச் செவியுற்ற அரசியும் ஒன்றும் பதில் கூறாமல் வாளாவிருப்பதைக் கண்ட மன்னன் "கண்மணி! என்னைப் பொய்யனாக்காது நீதான் காப்பாற்ற வேண்டும்! அது உன்னால் தான் முடியும்; நீ என் பொருட்டுச் சித்தருடன் கூடி அவர் மனதைக் களிப்பித்து என் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்!" என்று வாய் குழறக் கூறினான் வேந்தன்.

அரசன் இவ்வாறு கூறக் கேட்டதும் அரசி பெண் புலியைப்போல் மூர்க்காவேசத்துடன் "அரசே! போதும் போதும்!! நீங்கள் இப்படிப்பட்ட குணமுடையவரெனத் தெரிந்திருப்பின் நான் ஒருக்காலும் உங்களை மணந்திரேன்! ஐயோ! தொட்டுத் தாலி கட்டிய மனைவியைப் பிறர்...அரசே! நான் தங்கள் பொருட்டு என் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கச் சித்தமாகவிருக்கிறேன். ஆனால் என் கற்பைப் பறிகொடுக்க முடியாது!" என்று கூறினாள். அரசன் ஒன்றும் பதில் பேசவியலாது தனது இளைய மனைவியை நாடி அவளிடமும் தன் மனத் துயரத்தை வெளியிட்டான். அதற்கு அவள் "என் அன்பே! இதுதானா பிரமாதம்? ஏன் இதற்கு வருந்த வேண்டும்! நான் போய் வருகிறேன்!" என்றாள்.

"சீ! கள்ளி! கேவலம் ஓர் சந்நியாசியுடன் கூடியா இன்பம் பெறத் துணிந்தாய்! துரோகி! விளையாட்டாக உன் உள்ளத்தைப் பரிசோதிக்க எண்ணி நான் கூறினால் நீ அவனுடன் கூடுகிறேனென்று கூற உனக்கு என்ன தைரியமடி!" என்று சினந்து கொள்பவனைப் போல் பாவனை செய்தான் மன்னன்.



ஆஸ்திரேயாவிலுள்ள 'கம்' என்ற மரச் சோலை. இம்மரம் தரை முழுதும் பனிக் கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் குளிர் காலத்திலும்கூட இதர மரங்களைப்போல் அழிந்துபடுவதில்லை. இவை இலைகளை உதிர்ப்பதற்குப் பதிலாகப் பட்டைகளை உதிர்த்துக் கொள்கின்றன.

—N. I. A.

"அரசே! நீங்கள் விளையாட்டாகக் கூறினாலும் சரி, வினையாயினும் சரி, கவலையில்லை! பர்த்தா மனம் கோணாது நடக்கவேண்டுவது பார்யையின் கடன். அவர் வருந்தாமலிருப்பதற்கு வேண்டியவைகளைச் செய்வதே மனைவியின் கடமையாகும். நல்லது தீயது என்பது மனைவியர்களுக்கு வேறில்லை. கணவன் விரும்புவதையெல்லாம் விரும்பி அவன் தீயதெனக் கருதுவதையெல்லாம் வெறுப்பதே யவர்கள் கடமை. நான் சித்தனுடன் கூடுவதாகக் கூறியது மிருகச் செயலல்ல. தங்கள் வாக்கைக் காப்பாற்றவே யாகும். தங்கள் மனத் துயரத்தைப் போக்குவதற்கே யாகும். உங்களுடைய புகழ் என் புகழ். உங்களை உலகம் இகழ்ந்தால் அது என்னையும் இகழ்வது போலாகும். இதுவே என் கொள்கை. கற்பரசிகளின் கொள்கை. சித்தருடன் கூடுவதால் என்னை விபசாரத் தோஷம் பின்பற்றாது. என் கற்பே முன்னிலும் பன்மடங்கு அதிகரிக்கும். நான் என் கணவன் கவலையைப் போக்கப் பிற புருடனுடன் கூடுகிறேன். என் கணவன் கட்டளைப்படி நடக்கிறேன். கணவனைக் கடவுளாய்க் கருதி அவன் சொற்படி நடப்பதில் கற்பு நிலைத்திருக்கிறது அன்றி ஆடம்பரத்திலல்ல. மன்ன, என்னைக் கொலை செய்தாலும் செய்யுங்கள். என் உடலும் உயிரும் உங்களுடையது. அது உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்விக்கவே என்றும் தயாராகவிருக்கும். உங்களுக்கு விருப்பமானால் எந்நேரத்திலும் எதை வேண்டுமானாலும் செய்யலாம்!" எனக் கூறிப் பணிந்து நின்றாள் பெண்ணரசி.

மன்னனின் மனம் கலங்கியது. அவளை வாரியெடுத்து ஆலிங்கனம் செய்து அதரத்தில் முத்தமிட்டு "என் அன்பின் உருவே! நீயே என் மனைவி! நீயே கற்பரசி!" எனக் கொண்டாடித் தன் வாக்கைப் பூர்த்தி செய்து வைக்குமாறு கூறினான்.

அன்றிரவு அம்மாதரசி புஷ்பம் பழம் தாம்பூலங்களுடன் சித்தருக்கெனப் பிரத்தியேகமாய் விடப்பட்டுள்ள மஞ்சத்தை நாடி இனிய கீதங்கள் பாடிச் சித்தரைப் பரவசம் செய்வித்து அவரையாலிங்கனம் செய்து கொள்ள அணுகினாள். மறுநிமிடம் சித்தர் அந்தர்யாமியாகி விட்டார். அங்கு அவர் இருந்த விடத்தில் ஓர் சிறு குழந்தை யிருந்தது. அரசி உடனே தன் நாதனை யழைத்து நடந்த விபரத்தைக் கூறலும் பரமசிவன் இவ்வண்ணம் தங்களைப் பரிசோதிக்கச் சித்தரைப் போல் வேடம் புனைந்து வந்திருக்கிறார் என்ற உண்மையையுணர்ந்து ஆண்டவனைத் துதித்து அந்த ஆண் மகவைப் பாலூட்டித் தாலட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர்.

நன்மை கடைப்பிடி!

ஹிட்லர்கள் ஏன் வரவேண்டும்?

—(●)—

தேசியப் பிரமைகளின் தண்டனை

—(●)—

(எச். என். பிரெயில்ஸ்போர்ட் எழுதுவது)


ஜெர்மனியில் சமீபத்தில் நடந்த தேர்தலில் நூற்றுக்குப் பத்துப் பெயருக்குத் தான் ஹிட்லர் பிரஸிடென்டாவதைக் கண்டிக்கத் தைரியம் இருந்தது. வோட்டுப் போடாதவர்களையும், பாலட் பேப்பரில் தவறு செய்து வோட்டை யிழந்தவர்களின் தொகையையும் சேர்த்துக் கூட்டினாலும் மொத்தம் மிகவும் சிறியதாகத் தான் இருக்கிறது.

இருந்தாலும், இது ஹிட்லருக்குப் பெரிய ஏமாற்றத்தையும், பயத்தையும் உண்டுபண்ணியிருக்கும் என்பது நிச்சயம். தேர்தல் பிரசாரம் வோட்டு எடுக்குமுன் அதிகத் தீவிரமாக நடந்தது. அதற்குப் பிறகு இந்த 10%டையும் தனது கொள்கைக்குக் கொண்டுவர உத்தேசித்திருப்பதாகவும் பிறகு கூறினார்.

இதைக் கேட்டவுடன் நாம் எல்லோரும் பயந்தோம். ஏனெனில் ஏதேச்சாதிகார அரசியலில் தம் கொள்கைக்குக் கொண்டுவருவதற்குக் கையாளப்படும் முறைகள் வேறு. நாகரிகமானதல்ல. இதற்கு இரண்டு மூன்று நாட்கள் கழித்து பெர்லினில் 1100 முக்கியமான பிரஜைகள் திடீரென்று காணாமற் போய் விட்டார்கள்.

பிளிபிஸைட்டின் இம் மாதிரியான முடிவு ஒரு புதிய உண்மையைக் காட்டுகிறது. பூஹீருக்கு (Fuhere) எதிர்த்து வோட்டுச் செய்வற்கு எவ்வளவு தைரியம் வேண்டியிருக்கிறது என்று காண்பிக்கிறது.

இதைவிட முக்கியமான செய்தி, சிறையிலிருக்கும், ஹிட்டலர் கட்சியின் எதிரிகள் எல்லோரும் ஒரு முகமாக, ஹிட்லருக்குச் சாதகமாகத் தங்கள் வோட்டுக்களைத் தந்தார்கள் என்பது தான். பாதகமான வோட்டுக்கள் என்றால், மோசமான உணவு, உதைகள், இரண்டு மூன்று கொலைகள் இவைகள் எல்லாம் சிறைக்குள் சாதாரணம். இது அவர்களுக்குத் தெரியும். அந்தக் கூட்டத்தி லிருப்பவர்கள் எல்லோரும் அபேத வாதக்கட்சியினரும், பொதுவுடைமைக் கட்சியினரும் தான். அவர்கள் ஹிட்லரின் மீதிருந்த அத்யந்தப் பிரீதியினால் வோட்டுக் கொடுத்து விடவில்லை. பாதகமான வோட்டினால் என்ன ஏற்படும் என்பது திட்டமான விஷயம். மற்ற இடங்களில் இதற்கு வேறுவிதமான மரியாதை கிடைக்கும்.



கிரேக்க தேசத்திலிருக்கும் மெகோஸ்பிலியான் என்ற சந்யாசி மடம். மனிதர்கள் செல்ல முடியாதவாறு செங்குத்தான பாறைகளில் கட்டப்பட்டிருப்பது. இப்பயங்கர மடங்கட்குச் சமமாகத் திபேத் லாமா மடங்களைத்தான் கூறலாம். சமீபத்தில் மெகோஸ்பிலியான் நெருப்பினால் பாழ்பட்டுப் போயிற்று.

—S. P. B.

நாட்டிலுள்ள பெரிய பட்டணங்களில் தான் சிற்சில விவசாயிகள் தேர்தல் நேர்மையாக நடக்கிறது என்று நம்பியிருந்தார்கள். அதனால் ஹிட்லருக்குப் பாதகமாக 20% வோட்டுக்கள் பட்டணங்களில் கிடைத்தன. இத்துடன் போடாதவர்களையும் தவறாக வோட்டுச் செய்தது உரிமையை இழந்தவர்களையும் கணக்கிட்டால் 25% ஆகும். ஹிட்லர் தேர்தலுக்கு முன் அதிவிரமாக மூன்று முறை பேசிய ஹாம்பர்க்கில் தான் இம்மாதிரியான பாதகமான வோட்டுக்களின் தொகை அதிகமாக இருந்தது.

எதிர்ப்பின் கரு

இம்மாதிரியாக எதிர்த்துக் கொண்டிருப்பவர்களின் தொகை மிகச் சிறியதாக இருந்தாலும் அவர்கள் எதிர்ப்பில் ஒரு அர்த்தமிருக்கவேண்டும். அதற்குக் காரணங்கள் இருக்க வேண்டும். நூற்றிற்கு இருபத்தைந்து பேர் ஏதேச் சாதிகாரத் தலைவர்க்குப் பாதகமாக வோட்டுப் போடும் பெரிய பட்டணங்களில், தங்களுக்கு எவ்வளவு கொடூரமான சிறைவாசம் கிடைக்கும் என்பதை அறிந்து தான் போடுகிறார்கள். இவர்கள் தான் ஹிட்லர் ஆட்சியின் எதிர்பிற்குக்கரு.

இவர்கள் இரண்டு கட்சியினராகப் பிரிந்திருக்கிறார்கள். அபேதவாதக்காரர்கள் என்றும் பொதுவுடைமைக்காரர்கள் என்றும் கூறிக் கொள்ளும் இவர்கள் பிரஞ்சு, இத்தாலிய உதாரணங்களைப் பின்பற்றி எல்லோரையும் ஒற்றுமைப் படுத்த இவர்கள் நினைக்க வில்லை. அதனால் தான் அவர்களுக்குச் சக்தி போதாது.

இப்பொழுது பிளிபிஸைட்டில் முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு பாதகமான வோட்டுக்கள் ஆயுதப்பரிஹாரஜ மகாநாட்டைப் பற்றிக் கொடுக்கப்பட்டது. சாதாரண காலங்களில் ஒரு ஜெர்மனியனும் அப்படிச் செய்ய மாட்டான். ஆனால் ஹிட்லரை எதிர்க்க என்றால் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனப்பான்மை ஏற்பட்டு விட்டது.

ஹிட்லர் சமீபத்தில் தனக்குச் சாதகமாக ஒன்றைப் பெற்றார். தனது கொள்கையையோ, அல்லது தன் கட்சியினரையோ பொருட்படுத்தாதபடி தனக்குச் சாதகமாகத் தன் நிலைமையைப் பொருத்து வோட்டைப் பெற்ளுர். இதிலிருந்து பொதுமக்களை ஹிட்லர் வசிகரிக்கிறார் என்று தெரிகிறது. தங்களைப்போன்ற ஒருவன், ஜூன் 25-ல் நடந்த கொடுமைகளைத் தாங்காது, அந்தக் கொடுமையின் காரண கர்த்தர்களைத் தொலைத்தான் என்பதில்தான் ஹிட்லரின் வசீகர சக்தியின் இரகஸியம். 1917 ருஷ்ய விவசாயின் மன நிலையும் ஏறக்குறைய இம்மாதிரியாகத்தான் இருந்தது. அவன் ஜார் அரசனின் ஆட்சி முறையையும் அதிகார வர்க்கத்தினரையும் எவ்வளவு திட்டினாலும், ஜார் அரசனின்மீது ஒரு பாசம் வைத்துத்தான் இருந்தான். அதே மாதிரித்தான் இங்கும்.

ஹிட்லரின் வாக்கு வன்மை

அரசன் தெய்வத்தின் அம்சம் என்ற கொள்கை தலைமுறை தலைமுறையாக இருந்த ஜெர்மனியில் இம்மாதிரி மனப்பான்மை இருப்பது ஒரு அதிசயமல்ல. ஜெர்மனியில் அபேதவாதக் கட்சியினர் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் தங்கள் பிரசாரங்களை நடத்தி வருகிறார்கள். வோட்டுக்களைப் பெறுவதற்கு எவ்வளவு கொடூரமான முறைகளைக் கையாளப் பெற்றாலும், எவ்வளவு ஏதேச்சாதிகாரத்தைச் செலுத்தினாலும் மெஜாரிட்டி ஹிட்லரை ஆதரிக்கத்தான் செய்கிறது. ஏன்?

ஹிட்லரின் வாக்கு வன்மைதான் காரணம். அதிலே பிரசங்கியின் கலையில்லை, ஆற்றல் இல்லை, குரலோ கர்ணகடூரமானது. ஆனால் பொது மக்களை வசீகரிக்க உள்ளத்திலிருந்து வருகிறது அவர் வார்த்தைகள். சண்டையில் தனது அனுபவங்களைக் கூறுவதிலே ஒரு புதிய தொனி, உள்ளத்திலிருந்து வந்தது. அதுதான் ஹிட்லரின் வெற்றியின் ரகசியம்.

ஜெர்மெனியின் நெருக்கடியான நிலைமைக்கு இம்மாதிரியான ஒரு ஆள்தான் தேவை. அவன்தான் மக்களை வசீகரிக்க முடியும். அபேதவாதக்கட்சியினர் தேசியம் என்ற பிரமையை எதிர்த்துப் போராடியும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வகுப்புப் பிரிவினைகளும், அதன் போராட்டங்களும் தான் சண்டைக்குக் காரணம் என்று பொது மக்களுக்குத் தெரியாதவரை ஹிட்லரைப் போன்ற ஏதேச்சாதிகாரிகள், உலக சமாதானத்தைக் கெடுத்து உலகத்தை யுத்தத்தின் அடிமையாக்க வந்துகொண்டுதான் இருப்பார்கள்.

பத்திரிகைத் தந்திக்கட்டண உயர்வு

பத்திரிகைக்குத் தந்தியனுப்புவதற்கு உரிய கட்டண விகிதத்தை உயர்த்துவதனல் அனுவசியத் தந்திப் போக்குவரத்துக்கள் நின்று அரசாங்கத்தில் இந்த இலாகாவில் அதிகமாக உழைப்பவர்களின் தொகையைக் குறைக்கலாம் என்று கவர்மெண்டு தந்தி விகிதத்தை உயர்த்த உத்தேசித்திருக்கிறது. இதை யொட்டிப் பிரபலப் பத்திரிகை அரசாங்கத்தை ஒன்று எச்சரிக்கை செய்திருப்பதாகத் தெரிகிறது. அதைப் பல பத்திரிகைகள் ஆமோதிக்கின்றன. இதன் முடிவு இன்னும் 6 வாரங்கழித்தே தெரியும்.

ஒரு பையன் ஆற்றங்கரையில் பாசி படர்ந்த படித்துறையொன்றில் வேஷ்டி துவைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தண்ணீர் எடுத்துக்கொண்டு போகவந்த ஒரு பெண் படியில் வழுக்கி விழுந்து விட்டாள்.

பையன்:—ஜாக்கிரதையாய் போயிருந்தால் "செருக்கி" விழாமல் இருக்கலாமே.

பெண்:—அயோக்கிய நாயே! யாரையோ "செருக்கி" கிருக்கி யென்று பேசுரே; உஷார்; பல்லை உடைத்துடுவேன்.

—யே. வள்ளியப்பன்.

இங்கிலாந்தில் ஆண்கள் பெருகுகின்றனர்

இங்கிலாந்தில் 1934-ம் வருடத்தின் இரண்டாவது மூன்று மாதத்தில் சென்ற வருடத்தை விட 2580 ஜனனம் அதிகம். 1000 பெண்கட்கு 1057 ஆண்கள் விகிதம் பிறந்தன. சிசு மரணம் குறைவு.

தொடர் கதை

கடுவழியில் காதலி

(Eesy)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அன்புள்ள நேயர்களே! நான் என் அழகிய மங்கையர்க்கரசியின் கடிதத்தைப் பன்முறை படித்தேன். பக்கம் பக்கமாக, பாரா பாராவாக, வாக்கியம் வாக்கியமாகக் கிண்டிக் கிளறி குத்திக் துளைத்து பார்த்தேன். அவ்வாறு செய்யச் செய்ய சாதுரியமென்னும் மின்சாரச் செழுஞ்சுடர் ஒவ்வொரு பதத்தின் கீழுமிருந்து பிரகாசித்து என் கண்களை மழுக்கின. ஆ! என்ன 'பாக்கியம்' எனக்கு! கடிதத்தின் செவ்வி நினைக்க நினைக்க இன்பம் தருவதாகும். மங்கையர்க்கரசி பன்முறை என்னிடம் காண்பித்துக்கொண்ட சாதுரியக் குறும்பு (தீமையற்றக் குறும்பு அல்லது வேடிக்கை காண்பிக்கும் தெளிந்த மனப்பான்மை என்று சொல்லல் வேண்டும்) ஏராளமாக மலிந்திருக்கிறது. முதலில் அவள், தான் ஒரு கடிதம் விடுப்பது தகுதிதானா என்று ஆராய்கின்றாள். அவ்வாராய்ச்சி 'கடிதம் விடுப்பது தகுதியே' என்ற முடிவைத் தருகின்றது. அப்பால் எங்களுக்குள் பொதுவாக நிகழ்ந்த சில விஷயங்களைக் கூறுகின்றாள். இதன் உத்தேசம், தாம் கடிதம் விடுப்பதாக முடிவு செய்துகொண்டதற்கு ஆதாரம் அந்நிகழ்ச்சியே என்று காண்பிப்பதாக இருக்கலாம். பிறகு, அம்மின்னனையாள் எங்களுக்குள் நடந்த நிகழ்ச்சிகள் எவ்வெவை என்று விவரம் சொல்கின்றாள். அவ்வாறு சொல்லும்போது, தான் காண்பித்த காதற் குறிகளை முதலில் சொல்லிவிடாது, நான்தெரிவித்த காதற் குறிகளை எடுத்து உத்தமமான பாஷையில் சொல்லி, எனக்கு அவற்றை ஞாபக மூட்டுகிறாள். அதன்மேல் அவள் காண்பித்த காதற் குறிகளை எடுத்துரைக்கின்றாள். அவ்வாறு செய்கையில் அன்பு கலந்த பதங்களை ஏராளமாகவும் தாராளமாகவும் வாரிக் கொழிப்பதோடு, அடிக்கடி நான் மன்னிக்கவேண்டு மென்றும், தன் உளத்தைத் துளைத்து எழுந்த காதலுணர்ச்சியாலேயே யாவும் செய்ய நேரிட்டனவென்றும் சொல்கின்றாள். அதோடு தவறுகளிருப்பின் மன்னித்து விட வேண்டுமென்றும் நொடிக் கொரு முறை வேண்டுகின்றாள். அவ்வாறு வேண்டுகையிலேயே விஷமிட்டவள் தான்தானென்று சொல்கின்ற விடம்—ஆம்! அன்பர்களே! உங்கள் உள்ளத்தைக்கூட அதிர வைக்கவில்லையா? அவள் அன்பின் மிகுதியால் செய்த ஓர் செய்கை அத்யாபத்தாய் முடிந்து விடுகின்றது! அதற்கு அவள் கடிதத்தில் வேண்டுகின்ற மன்னிப்பு ஒருவாறு குறைவு என்று சொல்லலாம்; எனினும், அன்று, அவள் வீட்டில், மல்லிகை நிலயத்தில், காண்பித்த பரிதாபமும், வெளியிட்ட அன்பும், சிந்திய கண்ணீரும், கலங்கிய கலக்கமும் வான் முகட்டில் பல்கோடி சந்திரர்களால் எழுதி அன்றோ உலகிற்குக் காண்பிக்க வேண்டும்? இன்றேல் எனக்குப் பிரமனென்கின்ற கயவன் தலையிலெழுத்தென்று ஒன்றை எழுதியிருந்தானானால் அதனைச் சுதேசி ரப்பரால் துடைத்து விட்டு மங்கையர்க்கரசி காண்பித்த அம் மங்காத அன்பு உபசார அருங்கதையை அன்றோ அவ்விடத்தில் எழுத வேண்டும்? ஆ! அன்று அவள்—என் கண்களை தன் முன்றானையால் துடைத்தாளே அக்காட்சி, என் இறக்கும் காங்கட்கு முத்தமளித்து, தன் உலகவாம் மார்போடணைத்தாளே அம்மாட்சி, அன்பீர்! கூறுவீர் எதற்கு சாட்சி! அன்று நான் இறவாது பிழைத்தேனே, அதற்கு, அம் மங்கையர்க்கரசி, இடம் பார்த்துக் காண்பித்த உபசாரமும் அன்பும் ஆதரவும் காதலும்தான் காரணம் என்று கூறினால் நேயர்காள்! யாரேனும் என்னை இகழ்வீர்களோ?

போகட்டும். நான் மங்கையர்க்கரசியின் கடிதத்தின் இயல்பைக்கூற வந்தது போக, என்னென்னமோ சொல்லிவிட்டேன்.

அவள் மேலும் தம் காதல் முளை வளர்ந்தோங்கித் திடீரெனப் பெருமரமாகி என்னை அணைத்து நிழல் தந்தருள்வதற்குக் காரணமென்னவென்று சொல்லு முகத்தான், தாம் வைக்கப்பட்டிருந்த சுற்றுச் சார்புகளை சவிஸ்தாரமாக விளக்குகின்றாள். இதுவும் தன் கக்ஷியைக் கெட்டிப்படுத்திக் கொள்வதற் கேற்றவோர் தந்திர முறையன்றோ? இந்த விடத்தில் தந்திரத்தைச் சூழ்ச்சி என்ற முறையில் எந்த வாசகரேனும் பொருள்படுத்தி விடலாகாது என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஒருகால் இவ்வேண்டுகோளைப் புறக்கணித்து எந்த அன்பரேனும் பொருள் கொண்டார்களானால்—என் மங்கையர்க்கரசியை இழிவு படுத்துகின்றார்களென்ற முறையில்—அவர்களை இலேசில் விட்டு விடமாட்டேன்.


அன்புடையீர்! அப்பால் என் உயிராகவிருக்கும் கரும்பு (மங்கையர்க்கரசி—ஏன்? எனக்கரசி என்று சொல்லிக்கொண்டால் என்ன? அதிகமான உரிமையைக் காண்பிக்குமன்றோ அது?) அவள் தாம் முழுவிதவைகூட இல்லை என்று காண்பித்துக்கொள்ளும் தம் நிர்ப்பாக்கியத்தை, கலப்பில்லாத உளத் தூய்மையோடு, ஓதுகின்றாள். இந்த விடத்தில் முக்கியமாக அவள் காண்பிக்கும் இருதய சுத்தமும், அதற் கடிப்படையாகவிருந்த என்பால் வைக்கப்பெற்ற காதலும் கவனிக்கப்பட வேண்டுவதாகும். இதனை நன்றாக—நீளமாகத் தன் செந்தமிழ்ப் பரிஞானம் நன்கு விளங்கும்படியாக—விவரித்து விட்டு, இறுதியில், ஏமாற்ற சாகரத்தில் துன்ப அலைகட் கிடையில் கிடந்து, தத்தளித்துக் கொண்டிருக்கையில் ஓர், பிரசங்கப் பாய்கட்டிய சீர்திருத்த இளைஞனெனும் படகை எதிர்ப்பட்டு, அதனைப் பிடித்தாளென்றும், எந்த மானுடமும் கடலில் காணப்பட்டானைக் கரையேற்றிக் காப்பாற்ற வேண்டுவது கடமையென்றும், ஆகவே நான் காப்பாற்ற வேண்டுவது நிலைநாட்டப்பெற்ற பொறுப்பு என்றும், அவ்வாறு காப்பாற்று தொழிந்தால் திடீரென அக்கடலிலேயே அமிழ்ந்து இறந்து போவாளென்றும் சித்திரிக்கின்றாள். இதனைப் பெரும்பெரும் புலவர்களும் கண்டு வியப்புறுவார்களென்று நான் நம்பினால் என்ன தவறு? அவ்வாறு சித்திரிக்கையில் அந்தோ! அவள் மனம் நான் தள்ளிவிடக் கூடுமோவென்று எவ்வாறு துடிதுடித்ததோ!—அன்பு வார்த்தைகளினிடையே என்னை மறைமுகமாக ஏசுகின்றாள். அவ்வேசும் மேகக் கூட்டம் நிமிஷ நேரமே அவள் மனதில் நிற்கின்றது. அது மாய்ந்ததும் மீண்டும் ஆகாயம் தெளிவடைய அவள்

அன்பெனும் சூரியன் கதிர் வீசுகின்றான். அக்கதிரொளியில் என்னை எப்படியும் ஒருமுறை பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாள். அதோடு இலௌகிக பாஷையும் அவள் பேனாமுனையினின்றும் வழிகின்றது. எனவே தன் நிருபத்தைச் சாதாரணமான ஓர் கடிதமாக முடிக்கின்றாள். அப்படி முடித்தாலும்கூட இறுதியில் வேண்டும், வேண்டுமென்று நிற்கும் சொற்றொடர்கள் உணர்ச்சியையும் ஆர்வத்தையும் காண்பிக்கின்றன வன்றோ? இவற்றிற் கிடையில் ஓர் விஷயம். அன்பீர்! என் தாயை அழைத்துக் கொண்டுபோக வேண்டுமென்று விரும்புகின்ற இடத்தில் என்...........ரை என்றெழுதி யிருக்கின்றாளே; அது மாமியாரை என்பதை யன்றி வேறென்ன பதமாயிருக்கக் கூடும்? துணிந்து மாமியார் என்று என் தாயாரையும் அழைக்கத் தொடங்கி விட்டாளென்றால் நான் அப்‘பெண்கள் ராணி’யை இலேசாக நினைத்தால் உலகம் இலேசாகவிடுமா என்னை? நானும் வேறு ஜாதியைச் சேர்ந்த பாதி விதவையாகிய என் காதலியும் இணைந்து வாழவேண்டுமென்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?........ இவ்வளவு சொந்தம் பாராட்டி—ஆசை வைத்து—ஏற்கெனவே கல்யாணம் நடைபெற்று விட்டமாதிரி நடந்து கொள்கின்ற இவளை நான் கைவிட்டு விடுவதென்றால் ஆ! ஆ! என்ன முறையில் மனிதத் தன்மையாகும் அது? ஒரு தமிழனுக்குக் காதல் காண்பித்த பிறகு ஓடிவிடுதலென்பது அழகாமா?

எந்த வைதிகனாயினும் சரி, சனாதன சிகாமணியாயினும் சரி, எந்த முனிவனாயினும் சரி, இந்த மங்கையர்க்கரசியைக் கண்டால் கணமேனும் தம் வேதாந்தத்தை வைத்திருப்பானா? உலகறிய நான் இவளை மணந்து கொள்வதில் தடையென்ன விருக்கிறது? எவரேனும் ஆக்ஷேபம் கூறினால் ‘அவள் நெறி தவறியவள்’ என்று தானே கூறலாம்—யோசித்துப் பார்த்தால் மங்கையர்க்கரசி என்ன நெறியைத் தவறி யிருக்கின்றாள்? காசிநாதனோடு காதல் கொண்டாளென்றால் அது ஓர் இயல்பான விஷயமே. எந்தப் பெண்ணுக்கும் மணமாகாத நிலைமையில் ஒரு வாலிபனிடத்தில் காதல் காண்பிக்க உரிமையுண்டு. அன்றி மங்கையர்க்கரசி விஷயத்தில் அவள் தாயாரே காதலை வளர்க்கக் காரணமா யிருந்துகொண்டு மறைமுகமாகக் காசிநாதனோடு சேர ‘லைசென்ஸும்’ கொடுக்கிறாள். அந்தக் காதல்—அல்லது காசிநாதன்—மங்கையர்க்கரசி கூட்டுறவு—நேர்மையானதாய் முடிந்திருக்கும் அந்த அயோக்கியன் மனிதத் தன்மையோடு நடந்து கொண்டானென்றால். போகட்டும். அவள் அவனுடன் உலகறிய உறவாடினாளென்றே வைத்துக் கொண்டாலும், இப்போது அவனைவிட்டு நீங்கியதனால் ஒரு விதவையென்றாவது கொள்ளலா மல்லவா? அவ்வித விதவையை மணந்தாலென்ன? மேலும் இவ்வழகு உருவுக்கு உவமை எங்குண்டு?

எனவே நான் கடித ரசத்தில் கழுத்தளவு புதைந்து போக, அவ் ரசத்தில் ஓங்கி எழும்பிய திரை மாலைகள் அவ்வப்போது என் வாயில் புக, அவற்றை உண்டு, மதிமறந்து, என் மேஜையினண்டை ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். என் மனவெளியில் எழும்பிய விசாரப் புயலின் தொகையைக் கூறமுடியுமா?

நெடுநேரம் அப்படியே இருந்ததும் என் மருமகன் (தங்கையின் புதல்வன்) மெதுவாகப் பின்னால் வந்து “என்ன மாமா! இப்படியே இருக்கிறாய்? ஏன் பேச மாட்டாயோ! இதோ பார் உன்னை இழுத்துவிடுகிறேன்” என்று குதலை மொழிகளால் கூறி என் கையை அவனது சிறிய அழகிய அன்புக் கரங்களால் பிடித்து இழுத்தான். உடன் சமாதியிலிருந்து கலைந்தவன் போல் விழித்து, அவனைத் திரும்பி நோக்கினேன். அவனது முகத்தில் புன்முறுவல் காந்தியும், நிஷ்களங்கமான அன்பும் இலங்கின. அவனது “மாமா” வென்ற வார்த்தை என்னை இழுத்து விட்டது. ஆதலால் அவன் கையைப் பிடித்து இழுத்த வாக்கிலேயே அவனைப் பின் தொடர்ந்து போனேன். அவன் என்னை இழுத்துவிட்டதாக நினைத்துச் சந்தோஷம் கொண்டு சாய்ந்து முக்கித் தேரிழுத்தமாதிரி முன் நடந்து கொண்டே, “பாரு மாமா! உன்னை இழுத்துவிட்டேன். என்னை இனி சின்னப்பிள்ளை யென்று சொல்லாதே” என்று தன் சுயமரியாதையையும் வெற்றியையும் விளம்பரம் செய்தான். எனக்கு அச்சிறுவனின் பாசத்தைக் காணக் காண மனம் சாலவும் குதூகலித்து விட்டது. அவனைப் பின்னாடிப் போ



“பாரு மாமா—உன்னை இழுத்துவிட்டேன்” என்று என்னை இழுத்துக்கொண்டே முன் நடந்தான்.

னேன். சமையல்கட்டை நாடியதும் "பாட்டி பாட்டி" என்று என் தாயை அழைத்தான். அவர் நகைத்துக் கொண்டே வந்து, 'என்ன தம்பி' என்று கேட்க, "மாமாவுக்குச் சாதம் போடு பாட்டி! என்னவோ படித்துக் கொண்டிருந்தான். நான் பிடித்திழுத்துக் கொண்டு வந்துவிட்டேன்" என்று கூறிக் கொண்டே இரு அழகிய கைகளினாலும் தாளம்போட்டுக் குதிக்கலானான். தாயாரும் நானும் எல்லோரும் சிரித்துவிட்டு, "தம்பி வா; ஸ்நானம் செய்துவிட்டு வாலாம்" என்று கூறி அவனையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றேன்.

அதற்குள் என்ன நடந்தது தெரியுமா? என் சகோதரி திறந்திருந்த மேஜையை அடைக்கப் போயிருக்கிறாள் போலிருக்கிறது; அவள் கண்களுக்குக் காதல் கடிதம் தட்டுப்பட்டிருக்கிறது. உடனே அதனை எடுத்து, "அம்மா! அம்மா! அண்ணா சில நாளாக உற்சாகமில்லாமல் கவலையுடன் இருக்கிறாரே; அதன் காரணம் தெரியுமா?........இதோ பார் ஒரு கடிதத்தை!" என்று கூறி அதனைப் பூராவும் தாயாருக்குப் படித்துக் காட்டியிருக்கிறாள். தயாருக்குக் கடிதத்தைப் பார்த்ததில் கொஞ்சம் மயக்கம்தான்; ஆனாலும் ஒரு தடவை ஒரு புருஷனை மணந்த பெண் என்றதும் அருவருப்பு. அப்புறம் ஜாதி தெரியாதல்லவா? அது பற்றி யொரு எரிச்சல். அதன்மேல் நானாக ஒருத்தியை நாடியிருக்கின்றேனே? அதுபற்றி யொரு கோபம். பிறகு அப்பெண்ணே கடிதம் எழுதியிருக்கின்றாளல்லவா? அதுபற்றி ஒரு ஆக்ஷேபம். பின்பு அவள் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டிருக்கின்றாளே? அதுபற்றி யொரு வெறுப்பு. இந்த உணர்ச்சிகளால் அவர் என் செயலை நினைந்து வருந்திக் கொண்டிருந்தார். அந்தத் தருணத்தில் வந்தேன் நான் என் மருமகனோடு. வந்த நான் சாதத்தின் முன்பு உட்கார்ந்தேனானாலும், தாயார் முகத்தில் வெளிச்சத்தைக் காணவில்லை. நீண்ட நாள் வெளியே இருந்து விட்டு எப்போதாவது ஒரு வாரம் இரண்டு வாரம் வீட்டுக்குச் சென்று தங்குகின்ற என் மீது தாயார் அளவிட முடியாத சிநேகம் காண்பிப்பது வழக்கம். அப்படியிருக்க, அன்று திடீரென்று முக மாறுபாடு காண்பிக்கப்பட்டதும் எனக்கு என்னென்னவோ வருத்தம் வந்து விட்டது. ஆகவே நான் சாப்பிட்டுக் கொண்டே, "ஏன் அம்மா இப்படியிருக்கிறீர்கள்?" என்றேன். நாங்கள் சாப்பிடும் போது பலபல பேசிப் பொழுது போக்குவது வழக்கம். சிலர் சாப்பிடும்போது பேசக்கூடாது என்பார்கள். இது, சுவை, சூடு, எச்சில், காலதாமதம், கோபாவேசம், வெறுப்பு முதலியவற்றை நோக்கிச் சொல்லப்பட்டிருக்கலாம்—ஆனால் நாங்கள் அப்படிக் கருதுவதில்லை. பெரும்பாலாக ஏதாவது நல்ல விஷயங்களைப் பேசிச் சிரித்து மகிழ்ந்தால் தான் சாப்பாடு சாப்பாடாகத்தோன்றும். அப்படியே பழகிப் போய் விட்ட நான் மீண்டும் "ஏன் அம்மா ஒரு நாளுமில்லாதவாறு இப்படி இருக்கிறீர்கள்?" என்று வற்புறுத்தினேன்.

அதற்கு அவர்:—சாப்பிடு; பிறகு பேசிக்கொள்வோம்.

நான்:—சொன்னாலென்ன? ஒரு விஷயத்தைக் கண்டவுடன் (அறிய வேண்டுமென்று ஆசைப்பட்டவுடன்) கூறாது, பத்து நாள் பொறுத்திருவென்றால் எப்படி மனம் சம்மதிக்கும்? ஆசை வந்த விடத்தில் சாதிப்பதுதான் இன்பமே தவிர, பல நாட்களுக்குப் பின்பு, அவ் ஆசை போனபிறகு, சாதிப்பதென்றால் சுவாரஸ்ய மிருக்குமா? ....சரி; ஏன் இப்படி நான் வெளியே போய் வருவதற்குள் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது?

தாயார்:—(கோபத்தோடு) சரி. உனக்குக் கடிதமெழுதியது யார்? இதற்காகத்தான் திருநெல்வேலிக்குச் சென்று படிக்கின்றாயோ? படிக்கிறபடிப்பின் லட்சணமா இது? எதோ ஒரு நெறிகெட்ட கழுதை! அதற்கொரு வண்ணான் — (கிழவி)...........சிபார்சு! என்ன சாதியோ சனமோ சங்கதியோ?........

என்று 5 நிமிஷ நேரம் திருவண்ணாமலைக் குமாரசாமிப் பிள்ளை மாதிரி கொட்டி விட்டார். அப்பால் காரியம் சாதிக்க வேண்டுமல்லவா?....

நான்:—சரி பேசி முடிந்ததா? விஷயம் என்னவென்று தெரியாமல் பேசிக்கொண்டே இருந்தால் என்னென்று சொல்வது? கடிதம் விடுத்தவர் யார், எப்படிப்பட்டவர் என்று நேரில் அனுபவம் உண்டா? நன்கு தெரியாத நிலைமையில் ஒரு விஷயத்தைப்பற்றிக் குறை கூறினால் தவறுதானா இல்லையா?

என்று சிற்சில புகார்களைக் கூறி அவர் வேகத்தை அடக்கினேன். உண்மையில் பூனைபோலவே ஆகி விட்டார். அதன் மேல் நான்:—முதலாவது பெண்ணின் அழகை நீங்கள் பார்க்க வேண்டும்...........நமது பத்மா இருக்கிறாளே அவளைப் போல் கோடிப் பத்மாக்களைப் பிழிந்தெடுத்து, சாறைச் சுத்தம் செய்து, ஒரு தனி உருவமாகப் படைத்தால் அது எப்படியிருக்குமோ அதைவிட ஒரு நூறு பங்கு மேல் இந்தப் பெண். (என் தாயார் முகத்தில் ஒரு வெளிச்சம் ஏற்பட்டது.) இப்போது வயது இருபது. இளமை மாறவே யில்லை...........அது போகட்டும். ஜாதி என்ன தெரியுமா?

தாயார்:—அதுதான் கடிதத்திலிருக்கிறதே.

நான்:—கடிதத்தில் முதலியாரென்றிருக்கிறது. முதலியா ரென்றால் அதில் 50 ஆயிரம் பிரிவு. இந்தியாவில் ஜாதிக்கு அளவு முண்டா? நமது ஊரில் கைக்கோளர்கள் முதலியா ரென்கின்றார்கள்; செட்டிகள் முதலியா ரென்கின்றார்கள்; துளுவ முதலியார்களும் முதலியாரென்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள். அடவியார்களில் சிலர் முதலியாரென்கிறார்கள். நம் தாத்தாவும் முதலியாரென்றுதான் கூறினார். அந்த இனத்தைச் சேர்ந்தவர்களல்ல இக்கடித மெழுதியவர்கள். அவர்கள் தொண்டை மண்டல முதலியார்களாவர். அதாவது

நம்மால் எனி வைத்தேற்றினும் தொட்டு விட முடியாத பெரிய ஜாதி.

இந்த விடத்தில் என் தாயார் முகத்தில் ஒரு புன்சிரிப்பு வந்தது. சிரித்துக் கொண்டே அவர்:—அப்பால்?

நான் :—அவர்களது குடும்பம் மருந்துவாழும் மலைதான். தாசில் வம்சம் என்றால் கையெடுத்துத் தொழுவார்கள் திருநெல்வேலியார் அனைவரும்.

தாயார்:—...........பணம்?

நான் :—சில லட்சங்கள் அந்தக் குடும்பத்திற்கு இருக்கிறது.

தாயார்:—படிப்பு?

நான்:—கடிதத்தைப் பார்த்தீர்களல்லவா? பெரிய பெரிய பாவலர்கள்—என் சதாவதானம் கே. பி. பாலவர் அவர்கள் கூட—கண்டால் சுற்று முற்றும் பார்ப்பார்கள்.

தாயார்:—ஆமாம், இருந்தாலும் நெறி தவறிப் போய் விட்டவள்தானே?

நான்:—என்ன நெறி; என்ன தவறிப் போய் விட்டாள்? காசிநாதன் அயோக்கியப் பயல் என்பதைத் தவிர வேறென்ன விருக்கிறது?

தாயார்:—ஆனாலும் கெட்டுப் போனவள் தானே.


நான்:—ஒருபடி அதிகமாக வைத்துக்கொள்வோம். விதவை யென்றே எடுத்துக் கொள்வோமே!

தாயார்:—அடே! அறுதலியையா கட்டிக்கொள்ள வேண்டும்? அப்படி என்ன வந்தது என் மகனுக்கு? என்னடா அதிகமாகப் பேசுகிறாய்? விதவையையா என் மகனுக்குக் கட்டுவது?

நான்:—தன்னை மறந்து விடாதீர்கள். உங்கள் மகன்தான் பேசுகிறான். அவன் தானே மூன்று வருடமாகச் சீர்திருத்தம் பேசி வருகிறான்? அவன் பேசும் போது உங்கட்கு இனிக்கிறதா? அன்று ஆற்றங்கரையில் மணலில் 3000 ஜனக்கும்பலில் பேசினானே; அன்று எவ்வளவு மகிழ்ச்சி வந்தது உங்கட்கு? பக்கத்திலிருந்த பெண்கள் முகத்தைப் பார்த்துப் பார்த்து இறுமாப்புக் கொண்டீர்களே. அந்தப் பிரசங்கத்தை நடை முறையில் காண்பித்தால் கசந்து விடுகிறதே! என்னவானாலும் பேசவேண்டும்; செய்யலாகாது! இதுதான் உங்கள் முறையோ? உலகத்தை வெறும் களிமண் என்று கருதினீர்களல்லவா? போகட்டும். விதவை விதவையாக இருக்க வேண்டுமென்பது தான் உங்கள் எண்ணமா? செட்டிமார் நாட்டில் இந்த எண்ணமிருந்ததினால் தான் இன்று இருந்த மாப்பிள்ளைகளெல்லாம் வேறு ஜாதிக்குக் கொள்ளை போகிறார்கள்; தெரியுமா? இன்னும் சில வருடங்கள் போனால் என்ன ஆகும்? இருக்கும் ஆச்சிகள் பாடெல்லாம் திண்டாட்டம். அவர்கள் வீடுகளில் வேறு ஜாதிப் பெண்கள் வந்து இடம் பெற்று விடுவார்கள். சரி; சில விதவைகள் கதையைக் கேளுங்கள்.

அம்மா! வேளாளத் தெருவில் கோமதி விதவையாக இருந்தாளே; அவள் கதை என்னவாயிற்று? ரங்கமிருந்தாளே; அவள்பாடு என்ன? ஜானகி இருந்தாளே; அவளைக் காணவும் முடியுமா? விசாலாட்சி இருக்கிறாளே, அவள் கதி யென்ன? இப்படி ஆயிரம் விதவைகளை எடுத்துப் பாருங்கள்; ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு தனி ஸ்தலபுராணமில்லையா? இவற்றையெல்லாம் ஆபாசமென்று கருதிக் கூட்டங்களில் கௌரவமாக விட்டு விடுகிறோம்........அதோடு சனாதனம் வைதிகம் பேசுகிறார்களே சில பதர்கள்; அவர்கள் விதவைகளைக் காப்பாற்றுவது தானே எளிது என்று கருதுகிறார்கள்? நீங்கள்கூட ரங்கம் குழந்தை பெற்று ஆற்றில் விழுந்த போது 'பாழும் சமூகம்! ஒருவனைக் கட்டிக் கொண்டிருக்க விட்டிருந்தால் சொர்ண விக்ரகம் போன்ற இந்தப் பெண் இப்படி அழியுமா?' என்றீர்களே? மேலும் விதவைகளா யிருப்பதில் சங்கடமேற்படுவதைத் தவிர வேறெந்தச் சாதகமேனு முண்டா? கடவுள் தான் கோபித்துக் கொள்வார் என்று சொல்ல ஆதாரமுண்டா? சுந்தரமூர்த்தி நாயனார்—சமய குரவர்—விதவையை மணந்து கொண்டார்; அப்படிப் பட்டவருக்குத் தூதுப் போனார் பரமசிவன் என்று தமிழ் மறை கூறினால், அதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? மேலும் விதவைகள் கல்யாணம் செய்யக்கூடாதென்றால் கடவுள் அவர்கட்கு ஏன் உணர்ச்சியைக் கொடுக்கிறார்? ஆடவர்கட்கேன் அவர்களை மணக்கும் எண்ணத்தைக் கொடுக்கிறார்? எல்லாம் சுத்த ஹம்பக். கடவுள் பெயரைக் கூறி ஏமாற்றுகிறார்கள் சில புரட்டர்கள்..........

தாயார் :—சரி;போதும்........நீ விதவையை மணக்கப் போகிறாய் என்று



பெசண்டம்மையார் காலஞ்சென்று ஒரு வருடமாகிறபடியால், சென்ற வாரம் அடையார் பிரம்மஞான சங்கத்தில் ஓர் ஊர்வலம் நடத்தினர். படத்தில் ஒரு ஹிந்து ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பிப்பதைக் காண்க.

—P. P. B,

தெரிந்தால் போதும்; ஊர்க்கூட்டம் போட்டுத் தள்ளி வைத்துவிடுவார்கள்.

நான்:—அப்படியானால் சரி, ஊர்க் கூட்டத்திற்கு நானும் போவேன். என் கட்சியையும் எடுத்துச்சொல்வேன். தலைவனாக விருக்கும் ராமலிங்க மிருக்கிறாரே அவர் ரங்கசாமிநாயக்கர் வீட்டு விதவை செங்கன்னியை வைப்பு வைத்திருக்கிறார். பதிலுக்கு அவருடைய சகோதரி (விதவை) கோபால்சாமியின் ஆசைக் கிழத்தியா யிருக்கிறாள்.

இப்படி சிலரைப் பற்றிப் பிராணி நூல் வரலாறு படித்தேன். என் தாயார் "போதும் போதும்" என்று கூறிவிட்டார். அவருக்கு நான் கொஞ்சம் திறந்து பேசத் தொடங்கியதும், தத்துவங்கள் வேண்டுமென்று தோற்றவில்லை. விதவாக் கல்யாணமா 'சரி' என்றுகூறி விட்டார். சாதாரணமாக விதவா மணத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் கொஞ்சம் நா கூசுவதாலேயே வழவழா வென்று தத்துவம் பேசுகிறார்கள். வெளிப்படையாகச் சிலவற்றைக் கூறிவிட்டால் ஜனங்கட்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டு விடும்........

மேற்கூறியவாறு இரண்டு நாள் சென்றதும், நானும் தாயாரும் திருநெல்வேலி வழியாகக் கூனியூருக்குப் போனோம். கூனியூரை அடைந்தபோது சுமார் 7 மணி இருக்கலாம். நான் நேராகக் கதலீ நிலையத்திற்கே தாயாரை அழைத்துக் கொண்டு போனேன். அங்கு வீட்டு வாயிலில் நாங்கள் சென்றபோது, பாட்டி அடுப்படியில் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார். என் இன்தேன்—மங்கையர்க்கரசி பக்கத்து அறையொன்றில்,ஒரு மேஜைமீது விளக்கொன்றை வைத்து, அதன்பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து என்னமோ பத்திரிகை படித்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் உடம்பின் ஒரு பாகத்திலும் விளக்கொளி "பளீர்" என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அப்போது அவள் இலங்கிய காட்சி!-விளக்கொளி படரத் தம் காதலிகளுருவம் கண்டாருக்கே தெரியும்! என் மனம் வெற்றிச் சர்டிபிக்கெட்டைக் காணும் மாணவனின் இருதயம் போல் கூத்தாடிற்று. அந்த வேகத்தில், வாயிற்படியில் நின்றவாறே "அம்மா அதோ இருப்பவள் தான் உங்கள் மருமகள்" என்று கூறினேன். மருமகள் என்று சொல்லிவிட்ட சங்கதி அரை மணி நேரத்திற்குப் பிறகுதான் எனக்குத் தெரியும்.

நான் வாய் மூடியதும் தாயார்:—இவளா விதவை? இவளா மங்கையர்க்கரசி? இவளா கடிதம் அனுப்பியவள்? இவளையா விழிகெட்ட காசிநாதன் விட்டுப் போனான்? இவளையா இதுவரை விதவையாக வைத்திருந்தார்கள்? இவளா இறக்கப் போகிறேனென்றவள்? இவளையா நான் கழுதையென்றேன்? என்று ஓராயிரம் கேள்விகளை ஒன்றாக மொழிந்து, ஒன்றும் விளங்காது கல்லாக நின்றார் சுமார் மூன்று நிமிஷ நேரம். அதனைக் கண்டால், என் மனம் ஏன் ரப்பர் பந்தாகக் குதித்திராது? நான் என் தாயார் முகத்தையும் மங்கையர்க்கரசியின் விளக்கொளி விளையாடும் திருமுகப் பொலிவையும் பார்த்துப் பார்த்துக் கூத்தாடினேன்.

பின்பு, ஒரு வேடிக்கை செய்யக்கருதி தாயாரிடம் "நீங்கள் மெதுவாகச் செல்லுங்கள். நான் வந்ததாகக் கூறவேண்டாம். பின்னாடி வருகிறேன்" என்றேன். அதோடு சற்று அகன்றும் நின்று கொண்டேன். தாயார் உள்ளே சென்றார். சென்று ஒரு நிமிஷ நேரமான போது மங்கையர்க்கரசி அவரைக் கண்டுவிட்டாள். உடன் எழுந்து வந்து "என்ன அம்மா? நீங்கள் யாரைப் பார்க்க வந்தீர்கள்?" என்றாள்.

தாயார்:—கனகலட்சுமி அம்மாள், மங்கையர்க்கரசி யென்பவர்கள் வீடு—கதலி நிலையம்—இதுதானே?

மங்கை:—ஆமாம்;(ஆச்சரியத்தோடு) உங்களுக்கு எந்த வூர்?

தாயார்:—நாகர்கோவில்........

இதற்குள் பாட்டி வந்துவிட்டார்.

நாகர்கோவில் என்றதும் தாயாரை உட்காரவைத்து, புன்னகையை மழையாய்ப் பெய்த முகத்தோடு இருவரும் உபசரித்து "நாகர்கோவிலில் எப்படி?" என்று மெதுவாய்க் கேட்டனர்.

தாயார்:—என் மகன் கோவிந்தராஜு இங்கு வந்தானாவென்று பார்க்க வந்தேன்.

என்றதும், ஆ! ஆ! பாட்டியும் பேத்தியும் காண்பித்த உபசாரங்களின் அளவுக்கு, காந்திஜீயின் புகழின் அளவைக் கூறினால்தான் போதுமா? சுருங்கச் சொன்னால் பாட்டி தாயார் பக்கத்தை விட்டுப் போகவே இல்லை. அடுப்பில் சட்டியில் போட்டிருந்த காய்கறிகளெல்லாம் சாம்பலாய்ப் போயின. மங்கையர்க்கரசி என் பெயரைக் கூறியதும் திடீரென்று எழுந்து ஒரு வாயிலோரம் ஒதுங்கி நின்று நாணம் அடக்கமென்ற போர்வையைப் போர்த்தி அன்பெனும் அணியை அணிந்து நிலத்தை நோக்கியும் என் தாயாரைப் பார்த்து ஏதேதோ யோசித்தும் நிற்கலானாள்.

முதற்பாகம்
முற்றுப்பெற்றது.

ஜப்பானியப் போட்டி

ஜாம்ஷெட்பூர் டாடா தொழிற்சாலையில் சம்பந்தமுள்ள இந்திய முதலாளி ஒருவர் ஜப்பானிய உதவியைக்கொண்டு எஃகு உற்பத்தித் தொழில்சாலை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறார். அதில் சுமார் 1 கோடி ரூ. வரை ஜப்பானியர் முதல் போடுவார்கள் என்று தெரிகிறது. அடுத்தவருஷம் வேலை துவங்கும்.

அரசியல் சிறுத்தை புள்ளியை உதிர்த்த கதை

('அரசியலும் அரசியல் வாதிகளும்' என்ற தலைப்பில் 'பீட்டர் ஹௌவார்ட் சன்டே எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் எழுதுவது.)

ஓர் அரசியல் கானகம்.

அதில் பெரியதும் சிறியதுமாய் பல மிருகங்கள் எதேச்சையாக உலாவிக் கொண்டிருக்கின்றன.

சிங்கங்கள் புலிகள் உண்டு. சில சமயம் ஒட்டகைச் சிவிங்கிகள்—கழுத்தை நீட்டிய ஒட்டகைச் சிவிங்கள்—ஆமாம் அவைகளுமுண்டு—ஆனால் குள்ளநரிகள்தான் ஏராளம்.

நோவாவின் கப்பலுக்குச் சரியான கூட்டம்.

அந்தக் கப்பலில் இந்தப் பிராணிகள் சென்று விட்டால் வேறு என்னவேண்டும் இரைச்சலுக்கு. உறுமலும், ஊளையிடலும், கதறலும்,—இவைதான் காதையடைக்கும்.

அது நோவாவிற்குச் சரியான வீடு.

ஆனால் அவன் இந்த ஸெயின்ட் ஸ்டீபனின் கப்பலிருக்கும் அந்தக் குரலைக் கேட்க முடியுமா?

அந்தச் சிறுத்தையின் சப்தம்.

தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் மிருகத்தைத் தவிர மற்றவைக்கு அரசியல் கானகத்தில் இடம் கிடையாது.

திரு. வின்ஸெண்ட் சர்ச்சில் இந்தக் கானகத்தில் சக்தி வாய்ந்த ஓர் பிராணி.

அவர் சிறுத்தைகூட அல்ல. ரஷ்யக் காடியைப் பார்க்கும்பொழுது அந்தச் சிறுத்தையின் புள்ளிகள் உதிர்ந்து மறைகின்றன!

நாட்டின் சார்பாக ரஷ்யாவைச் சர்வதேசச் சங்கத்தில் சேரும்படியாக கூப்பிடுகிறார்.

ரஷ்யா சமாதானத்தை நிலைநிறுத்த ஆசைப்படுகிறது என்று கூறுகிறார்.

அது சமாதானத்தை நாடுகிறது என்று சொல்லுவதில் அர்த்தபுஷ்டி இல்லை என்று கூறுகிறார்.

அவருக்கே ஆச்சரியமாக இருக்கிறதாம். தனது உள்ளத்தின் போக்கில் வார்த்தைகள் தடுமாறுகின்றனவாம், சோவியத்தின் குணசம்பத்தை விஸ்தரிக்கும் பொழுது.

ஆனால் கொஞ்சக்காலத்திற்கு முன் அவர் ரஷ்யாவைப் பற்றிப் பேசும் பொழுது வார்த்தைகள் தடுமாறவில்லை.

"ரஷ்யாவில்தான் கொடுமையான நடைமுறை. அதைப்போன்ற கொடிய ஆட்சி உலகத்தில் இருந்ததே இல்லை. நெறிகெட்ட அரசியல் கொள்ளைக் கூட்டம் நாட்டில் பிணந் தின்னும் கழுகுகள் மாதிரி இருந்து அதைச் சின்னபின்னப் படுத்துகின்றன."

"ரஷ்ய ஓநாய்கள் பணம் கேட்கின்றன."

"மாஸ்கோவின் அரசில் கொலைஞர்கள், வெறுக்கத்தக்க கொலைஞர்கள்."

இதெல்லாம் திரு. சர்ச்சில். இதெல்லாம் ரஷ்யாவைப்பற்றி.

காலம் மாறுகிறது. புள்ளிகளும் மாறுகிறது.

பொதுஜன வாழ்க்கையில் ஆச்சரியகரமான நட்பு திரும்பவும் ஏற்படுகிறது.

நிரந்தரமான பகை கிடையாது. மாரி காலத்தில் சாபம், வஸந்த காலத்தில் முறையீடு, வேனிற் காலத்தில் முகஸ்துதி.

ஆனால், சில சாபங்கள் இருக்கின்றன, செல்லாக்காசு மாதிரித் திரும்பவும் வீடுவந்து சேருவதற்கு.

வாந்திபேதிக்குப் புதிய மருந்து

டாக்டர் எச். கோஷ் வாந்திபேதிக்குப் புதிய மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார் என்று இந்திய வைத்திய சங்கக் காரியதரிசி ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நஞ்சேய் நிலங்கள்

பிரிட்டிஷ் இந்தியாவில் பயிர் செய்யப்படும் மொத்த நிலம் சற்றேறக் குறைய 4 கோடி 88 லட்சம் ஏக்கர். இவற்றில் 1 கோடி 88 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது.



பெசண்டம்மையார் காலஞ்சென்ற முதல் வருட இறுதியாகிய சென்றவாரம் அடையாற்றில் நடைபெற்ற பஜனைக் கோஷ்டியின் மற்றொரு தோற்றம்.

—P. P. B.

திருமண நிபந்தனை

ராய. சோ.

(உரிமை ஆக்கியோனுடையது)

ஒன்றுரைப் பேன்;காந்தி உண்மை
அறத்தை உலகறியச்
சென்று பரப்பும் செயலுடை
யேன்;இதில் சேர்ந்துழைப்பல்
என்றவன் மீதினில் ஆணை
யிடுவாய்! எனில்உனைநான்
மன்றல் புரிவன்! விரும்பிடின்
வேறு வழியிலையே!

—"காந்தி கலித்துறை யந்தாதி"

இளைஞன் தன்னை மணஞ் செய்து கொள்ளும் படி இவ் எழில் மாதை வேண்டுகின்றான். அதற்கு ஒரு நிபந்தனையை விதிக்கின்றாள் மங்கை. "காந்தியின் கொள்கையை உலகெலாம் பரப்புவதே என் தொழில். அக்காரியத்தில் என்னோடு ஒத்துழைப்பதாக நீ அப்பெரியோன் மீது ஆணையிடுவாயானால் உன்னை மணப்பேன். நீ என் மீது மெய்க் காதல் கொண்டது உண்மையானால், நீ அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழியில்லை" என்கின்றாள் பூவை.





விகடத்திரள்

கமலம்:—என்னடீ, உன் புருஷன் ஜால வித்தையினால், செம்பையும் பொன் னாக்குகிறாராமே?

ரங்கம் :—ஆமாண்டீ, சில சமயத்தில் வேலைக்காரி பொன்னியையும் மனைவி யாக்கி விடுகிறார்.

—K. P. சாரதி.

* * *



ஒரு நாட்டுப்புறத்தான் புதிதாய்ப் பள்ளிக்கூடத்திற் கனுப்பவேண்டிய தன் சிறுவனை ஒரு வாத்தியாரிடம் அழைத்து வந்தான்.

நாட்டுப்புறத்தான் :—என்ன சார்! பையனைப் பள்ளியில் வைக்கவேண்டும். சம்பளம் எவ்வளவு?

உபாத்தியாயர்:—முதல் மாதத்திற்கு மூன்று ரூபாய். இரண்டாம் மாதம் முதல் ஒரு ரூபாய்.

நாட்டுப்புறத்தான் :—அப்படியானால் இரண்டாம் மாதம் முதல் சேர்த்துக் கொள்ளுங்கள்.

—R. ராஜகோபாலன்.

* * *

குரு :—சிஷ்யர்காள்! உலகில் பல பொருட்கள் நிஜமெனத் தோன்றும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுங்கள்.

ஒரு சீடன் :—எலக்ஷன் காலத்துத் தேசாபிமானம்.

—T. N. மாணிக்கம்.

* * *

'ஜீவகாருண்யம்' என்ற தலைப்புள்ள பாடத்தைக் கற்பிக்கும் ஓர் ஆசிரியர்:—ஜீவகாருண்யப் பிரசாரம் செய்யவேண் டிய ஓர் இடத்தின் பெயர் சொல்.

ஒரு மாணவன் :—பள்ளிக்கூடம் சார்.

—T. கணேசன்.

* * *

மனைவி :—நான் பாடும்போது நீங் கள் என் வீட்டுக்கு வெளியே போய் உட்கார்ந்து கொள்ளுகிறீர்கள்?

கணவன் :—யாராவது நான் உன்னை அடிக்கிறேன் என்று நினைக்கக்கூடா தல்லவா?

—ஜி. ஆர். முருகேசன்.

* * *



வேலைக்காரி :—யாரோ ஒருவர் தங் களை ஒருமாதிரியாகப் பேர் சொல்லிக் கொண்டு விசாரிக்கிறார்.

வீட்டுக்காரர் :—அந்த நாயைத் தாத்து.

வேலைக்காரி :—ஆம்—ஆம்—ஆம். அவ ரும் தங்களை அந்தப் பேரினால்தான் விசாரித்தார்.

—எஸ். மணி பி.ஏ.

* * *



மகன் :—அப்பா 'கூந்தல் வளரும் தைலத்தால்' மயிர் நன்று வளருமின்னு விளம்பரம் செய்கிறீயே.

தந்தை :—ஆம்; அதற்கென்ன?

மகன் :—அப்படீன்னு இந்த டுத் பிரஷில் மயிரே யில்லையே. கொஞ்சம் எண்ணெய் தடவேன்.

—மிஸ். S. ராஜம்.

* * *

பேரன் :—தாத்தா! ஒரு காலணாக் காசு கொடுங்கள்.

தாத்தா :—நீ பெரியவனாகியும் காலணா கேட்கிறாயே?

பேரன் :—அப்படியானால் கால் ரூபாய் கொடுங்கள்!

—ஜீ. ஆர். எம். கேசன்.

* * *

டாக்டர் :—ஜுரம் வந்த முதல்நாள் எப்படி யிருந்தது?

சிறுவன் :—பள்ளிக்கூடம் போக வேண்டியதில்லை என்று சந்தோஷமாக இருந்தது.


—ஜி. ஆர். முருகேசம்.

* * *

செக்குப்போல் பருத்த ஒரு பெண்:—டாக்டர் ஐயா, நான் மெலிந்து போவ தற்கு முதலில் என்ன மருந்து சொல் கிறீர்கள்?

டாக்டர் :—இப்போது மருந்துவேண் டாம். சிலநாள் சாப்பாட்டில் மூன்று வேளையைக் குறைத்து விடுங்கள். அப்பால் மருந்து தருகிறேன்.

—ஆர். கமலம்.



மெல்போர்ன் நகரத்தில் கோலின்ஸ் என்று அழைக்கப்படும் ஒரு தெருவின் தோற்றம். இந்நகரத்தின் நூறாவதாண்டு விழாவை கிளஸ்டர் கோமகன் திறந்துவைப்பார்.


—N. I. A.




ஆக்ஸ்போர்டு ஷயரில் விதம் ஆபி என்றழைக்கப்படுகின்ற தேவாலயம். இதில் ஐவி என்ற கொடிகள் ஏராளமாக வளர்ந்து மூடியிருக்கின்றன. பூர்வீக கிராமங்களுள் விதம் ஆபி யொன்று. —N. I. A.




மெல்பேர்ன் நகர நூற்றாண்டு விழா நடைபெறும்போது ஊர்வலங்களில் துணை புரிவதற்காக ஏராளமான சிறுவர்களும் சிறுமிகளும் போலீஸ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர். —N. I. A.



ஹெரன் ஹாசன் என்ற அரண்மனை. இங்குதான் டோராத்தா சோபி என்ற இராஜகுமாரி கொலை செய்யப்பட்டாள். —N. I. A.



மங்களூரில் பிரபல அட்வோகேட்டான திரு. சி. லோபோ, சமீபத்தில் பெரும் ஆபத்தான நிலைமையில் 8 அடி நீளமுள்ள ஒரு சிறுத்தையைச் சுட்டுக் கொன்றார். படத்தில் அவரைச் சிறுத்தையுடன் காணலாம். —P. P. B



ஜெர்மனியிலுள்ள டிரயர் மாதாக் கோவில். 12-வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஜெர்மனியிலுள்ள பழைய கட்டிடங்களுள் இது ஒன்றும். —N. I. A.



சர்தார் வல்லபாய் படேல், அப்துல் காபர் நகரத்தின் கல் நாட்டு விழா ஆற்றியபோது ஓர் பிரசங்கம் செய்த காட்சி. அப்துல் காபர் நகரத்தில்தான் காங்கிரஸ் மகாசபை நடைபெறப் போகிறது. —S. P. B.

மூர்த்தியின் கீர்த்தி

(கே. ஸ்ரீநிவாஸ் பீ. ஏ.)

எங்கள் உபாத்தியாயர் நீலகண்டப் பட்டரைக் கண்டால் எங்களுக்குச் சிம்ம சொப்பனம்தான். அவர் பட், பட் என்று கொடுக்கும் ஒவ்வொரு தப்பலும் உலகத்தையே அதிரச் செய்யும். படமுடியாதினி துயரம். பட்டதெல்லாம் போதும் போதும்.

அவரை மட்டம் தட்டவேண்டுமென்ற தீவிரமான நோக்கத்துடன் நாங்கள் ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டினோம். பலர் பேசி முடிந்தவுடன் ஷோக் கிருஷ்ண மூர்த்தியின் அபார ஆலோசனையின் பேரில் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்தோம். ஏ, அப்பா! மூர்த்தி சிறிதாயினும், கீர்த்தி பெரிதன்றோ!

மறுநாள் பட்டரும் கிளாஸுக்குள் நுழைந்தார். நடந்துவந்த சிரமத்தில் சற்று நாசிகா கமனம் செய்யலானார்.

நான் பூட்ஸைக் கீழே வேகமாகத் தட்டி விட்டு "ஹெட் மாஸ்டர் ஸார்!" என்றேன். பட்டருக்குத் தூக்கிவாரிப் போட்டது. குபீர் என்று அவர் எழுந்து நின்று, கட்டம் விளையாடிக் கொண்டிருக்கும் மூர்த்தியைப் பார்த்து 'ஆறில் நாலு போனால் என்ன வாகும்?' என்றார்.

'ஆறு அதை அடித்துக் கொண்டு போகும், ஸார்' என்று ஒரு விகட 'பாம்' போட்டான் மூர்த்தி.

பட்டருக்குக் கோபம் பொங்கிற்று. 'ஏறு, பெஞ்சுமேல் ஏறு!' என்று கர்ஜித்தார்.

'மயக்கம் போட்டுக் கீழே விழுந்தால்...........' என்று மூர்த்தி குறும்பாகப் பதிலளிப்பதற்குள், அவருடைய பிரம்பு ஏதோ தன் கிரீடம் இறங்கிவிட்டது போல் சீறிற்று.

மூர்த்தி பெஞ்சுமேல் ஏறினான். கொஞ்ச நேரத்திற்குப் பின்னர், என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

மறுநிமிடம் கீழேசாய்ந்தான். சரேலென்று பாய்ந்து அவனைப் பிடித்தேன். என் நண்பர்கள் அவனைத் தூக்கினர்கள்.

"ஐயோ கிட்டு! கிட்டு!!" என்று அலறினோம், ஒரு நிமிடம்கூடத் தாமதியாமல் அவனைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினோம். போகும் சமயத்தில் பட்டரைப் பார்த்து, "அடே கிட்டு! உன்னைப் பாவி கொன்று விட்டாண்டா!" என்று கதறி விட்டு ஓடினோம்.

ஐயோ! பாவம்! பட்டருக்குக் கதி கலங்கி விட்டது. அழாத குறைதான்! தொந்தியைத் தூக்கிக் கொண்டு எங்களைத் தொடர்ந்து வந்ததை இப்பொழுதும் நினைத்தால் சிரிப்புப் பொங்குகிறது.

டாக்டரைக்கூட கேட்காமல் கிட்டுவை ஒரு அறையில் படுக்கவைத்து விட்டு வாசலில் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தோம். அலறிப் புடைத்துக்கொண்டு பட்டரும் வந்து சேர்ந்தார். எங்களுக்கு அழுவதா சிரிப்பதா என்று தோன்றவில்லை. சப்த நாடியும் நடுங்கி, கவலையே உருவெடுத்தாற்போல் நின்றார் பட்டர்.

"இப்பொழுது தேவல்லையா?" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

"ஐயோ! அம்மா! அம்மா!!" என்று பிரசவ வேதனைப் படுவதுபோல் கிட்டு உள்ளேயிருந்து அலறினான்.

"டாக்டர் நிரம்ப ஸீரியஸ் என்கிறார்," என்று பரிதாபமான குரலில் கூறினேன். அவருடைய எண்சாண் உடம்பும் சுருங்கிற்று. தொந்தி தற்கொலை செய்து கொள்வது போல் உள்ளே அமுங்கிற்று.

"உள்ளே போகலாமா?" என்றார்.

"இன்னமும் சீறுவதற்கா?" என்று கூறி 'பக்' என்று சிரித்துவிட்டோம்.

அன்று பட்டர் பையன்களை அடிப்பதை விட்டதுதான்! இன்னமும் கிட்டுவைக் கண்டால் அவருக்குப் பதட்டம்.

சென்னையில் மரண விகிதம் அதிகரிக்கிறது.

1932-ல் சென்னை நகரில் மரண விகிதம் ஆயிரத்துக்கு, 236½. 1933-ல் ஆயிரத்திற்கு 264¼.

லெக்ஸிகன் கமிட்டிக்கு

(தென்னலிராமன்)

வாய்தா :–காரியம் சாதியாது என்று சொல்வதற்கு ஓர் பிரதிப்பதம்.

பிரசங்கம் :–தன்னால் நடைமுறையில் காண்பிக்கப்படாத பலவற்றைக் கோர்வையாகச் சேர்த்துச் சொல்லுதல்.

வாக்குறுதி :—ஒருவன் எப்போதும் பொய்யே பேசுவது வழக்கம் என்பதை மெய்ப்பிப்பதற்காகச் சிலபோது செய்யும் பிரமாணம்.

தேர்தல் (எலக்ஷன்):–பணக்காரனைச் சோதிக்கும் வழி. அடிதடி; வீண் பகை; ஏமாற்றம்; பண நாசம்; உபசார விருந்து; ரயில் பிரயாணம்; கோர்ட்டுக்குப் போதல் என்றும் பொருள்படும்.

தரித்திரம் :–புத்தியின்மை; பேதமை. சிலகால் திருடத் தூண்டும் வழி என்றும் பொருள்படும்.

ரிக்ஷா :—மனிதனும் ஓர் மிருகந்தானென்பதனைக் காண்பிக்கும் ஒரு ஜப்பான் பதம். சென்னை முதலியவிடங்களில் தாராளமாய் உபயோகிக்கப்படுகிறது. சிலபோது யானை உருவங்கள் அதனை உபயோகிக்கும்போது ஏழைகள் ஏன் இந்த நாட்டில் இருக்கவேண்டுமென்ற வேதாந்தக் கருத்தை உற்பத்தி செய்யும்.

வக்கீல் :–ஒருவித ஈரமாமிச பக்ஷணி. இதற்கு வாலிராது, காலிரண்டே. மனிதரோடு மனிதராய்ச் சேர்ந்துவாழும். தொழில் குறைவாகும்போது இதற்கு தேசாபிமானம் எழும்பும். இவை பயிலுமிடத்திற்குக் கோர்ட் என்று பெயர்.

சைக்கிள் :–ஒருவித இருசக்கரமுள்ள வண்டி. இதில் ஏறிச் சவாரி செய்பவனைக் 'கீழே' தள்ளி விடுவதாலும் அப்போது அவனுக்குச் 'சை' என்று தோற்றுவதாலும் சைக்கிள் என்று சொல்லப்படுகிறது.

மோட்டார் :—இதுவும் ஒரு வண்டியே. உருவத்தில் மோட்டாவாக இருப்பதாலும் "இர்" என்று ஓடுவதாலும் (மோட்டாஇர்) மோட்டார் என்று சொல்லப்படும்.

சென்னை :—103 டிக்ரி சூடு; தாங்க முடியாத குடிக்கூலி; தடபுடல்; உத்யோகஸ்தர் நெருக்கடி; இரைச்சல். (அப்பதம் வினையாக வந்தால் மலேரியாவினால் வருந்து; இரைச்சலால் தொல்லைப்படு; தடபுடல் வாழ்க்கையிலாழ்ந்து தரித்திரமடை என்று பொருள்படும்.)

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிலை

சாம்ராஜ்ய வாதிகளின் மறைந்த கனவு

(இக்பால் சிங் எழுதுவது)

பூகோளப்படத்தைத் திருப்பிப் பார்க்கும் எந்த அன்னிய நாட்டினனுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சிகப்பு வர்ணத்தைக் காணும் பொழுது நாக்கில் ஜலம் சொட்டலாம். உண்மையில் இங்கிலாந்தின் நிலை அவ்வளவு பெருமைப்படக்கூடியதாக ஒன்றும் இல்லை.

19-தாம் நூற்றாண்டு சாம்ராஜ்ய வாதிகள், ஒரு பெரிய நன்மை பயக்கும் கூட்டு வியாபாரம் என்பது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்றால் மிகவும் கஷ்டமான ஒரு பொறுப்பாக இருந்து வருகிறது. வெகு காலத்திற்கு முன்பே, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா, நியூஜீலந்து என்ற சாம்ராஜ்யக் குடியேற்ற நாடுகள் வருமானமற்றவையாகி விட்டன. இந்தியா ஒரு நல்ல மூலதனந்தான். வருமான விகிதம் குறைந்து கொண்டே வரும் இந்த உலகப் போக்கில் அதுவும் மற்றவைகளைப் போலாகி விடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கிப்ளிங்கைப் போன்ற சாம்ராஜ்ய வாதிகள் மேற்கு ஆப்பிரிக்காவை வைத்துக் கொண்டு வெள்ளைக்காரரின் சுமை என்று பேசிச் சமாதானப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் அவை வெறும் ஆதாரமற்ற ஆறுதல் தான்.

ஐக்கியக் கொடியின் ஒற்றுமை என்ற வார்த்தைகளும் பீவர்ப்ருக்கின் அர்த்தமற்ற முழக்கத்திற்கு ஒப்பானதுதான். 1927-ம் வருஷம் தென்னாப்பிரிக்காவில் எழுந்த தேசியக் கொடிப் பிரச்னை குடியேற்ற நாடுகளின் நன்றியற்ற தன்மையைக் காட்டி விட்டது. அயர்லாந்தோ தனது பிரச்னைகளுக்குத் தானே முடிவு கட்டிக் கொள்ளவாரம்பித்து விட்டது. உணர்ச்சி பாவங்களை விட்டுவிட்டு அரசியல் பிரச்னையாகக் கவனிக்கும்பொழுது இரண்டு விதமான, ஆனால் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட வழிகளால் ஆராயலாம். ஒன்று பொருளாதார வழி; மற்றொன்று அரசியல் வழி.

ஒட்டாவா மகாநாடு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மிகவும் ஐக்கியப்பட்ட ஒரே நோக்கு உள்ள ஸ்தாபனம் அல்ல, என்பதை நிரூபித்து விட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒட்டவாச் சிக்கலிருந்து தப்பித்தால் வேறு எதிலிருந்தும் தப்பித்துக் கொள்ளச் சக்தியிருக்கிறது என்று யாரோ கூறினர். சமீபத்தில் அரசியல் பேரறிஞரான ஆல்பிரட் ஜிம்மர்மான், ஒரு பிரசங்கத்தில் அதற்குத் தக்க பதில் கூறினர். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒட்டவாச் சிக்கலிலிருந்து தப்பிக்கா விட்டால் வேறு ஒன்றிலிருந்தும் தப்பாது. அப்படியானால் அதை மூட்டைக் கட்டி வைத்து விடலாம்."

ஒன்றுபட்ட பொருளதாரத் திட்டம் முடியாது.

இம்மாதிரி ஒரே கொள்கையுள்ளதாகவும் ஐக்கியப்பட்டதாகவும் கூறிக் கொள்ளும் கிரிஸ்தவக் குடியாட்சிகள் ஒன்றையொன்று பிடுங்கித் தின்ன முயலும் காட்சி நாடகாசிரியன் ஷாவின் ஹாஸ்யங்கள் மாதிரித்தான் இருக்கிறது. சாம்ராஜ்ய அரசியல் வாதிகள் உள்நாட்டுப் பிரச்னைகளைத்தான் அகில சாம்ராஜ்யப் பிரச்னைகளை விட முக்கியமானதாக மதிக்கிறார்கள். இதை யெல்லாம் ஒன்று கூட்டிச் சாம்ராஜ்ய நெருக்கடியைப் போக்கப் பரந்த நோக்க முடைய ஒரு அரசியல் வாதியாவது கிடையாது. திரு. ஹாவெங்கா என்பவர் மனதிலிருப்பதை ஒளிக்காமல் கூறும் சுபாவ முடையவர். அரசர் சாம்ராஜ்யத்தை ஆசிர்வதித்து ஒரு செய்தி விடுத்தவுடன், "தென்னாப்பிரிக்கா, தனக்குள் அடங்கிய, தனிப்பட்ட சாம்ராஜ்யத் தத்துவத்திற்கு இணங்கவில்லை" என்று சொல்லி விட்டார். இதிலிருந்து சாம்ராஜ்யத்தின் பொது நன்மையைக்கோரும் பொருளாதாரத் திட்டம் ஒன்றும் செய்ய முடியாது என்று விளங்குகிறது.

குடியாட்சி நாடுகள் தங்கள் மாகாண நன்மையைக் கோரி சாம்ராஜ்யச் சலுகையை எதிர்க்கின்றன என்பதற்குக் கானடாத் தேர்தலில் நீயூஜிலந்து பசுப் பண்ணைக்குச் சலுகை காட்டுவது என்ற கொள்கையைத் தாங்கிய கட்சி தோற்று விட்டது என்ற உதாரணம் போதும். இம்மாதிரி தன்னலத்தைக் கோரும் உதாரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. சாம்ராஜ்ய வியாபாரத்திற்கு எதிரியான ஜப்பானைத் தடை செய்ய வியாபாரப் போரின் தலைவரான வால்டர் ரன்ஸிமான் எவ்வளவோ கூறிப்பார்த்தார். ஆனால் ஆஸ்திரேலியா தனது கம்பளி மயிரை ஜப்பானுக்கு விற்றுக் கொண்டுதான் இருந்தது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு தனிப்பட்ட பொருளாதார நன்மையை நாடும் ஸ்தாபனமுமல்ல, ஐக்கியப்பட்ட அரசியல் ஸ்தாபனமும் அல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள் ஒரு மகாநாடு டொரன்டோவில் போன வருஷம் செப்டம்பர் மாதம் கூடியது. அதன் நடவடிக்கைகளைக் கவனித்தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் போக்கு அதனுள் எதிர்த்துப் போராடும் சக்தி எத்தன்மைத்து என்பது நமக்குப் புலப்படும்.

அர்த்தமற்ற பேச்சுக்கள்

சாம்ராஜ்யத்திற்கு எல்லா மாகாணங்களின் நன்மையையும் பொதுவாக நோக்கும் ஒரு கொள்கை கிடையாது என்பது ஸ்பஷ்டமாகத் தெரியும். உலக சமாதானத்தையும் சர்வதேசச் சங்கத்தையும் ஆதரிக்கவேண்டும் என்ற கொள்

கை ஒன்று இவர்கள் ஒத்துக்கொண்டது என்று இவர்கள் அறிக்கையிலிருந்து தெரிந்துக் கொள்ளலாம். இது அர்த்தமற்ற பேச்சு. எந்த மாகாணப் பிரதிநிதியும் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்வதினால் மாகாண நன்மைப் பாதகமாகி விடாது. "ஜெர்மனி சர்வதேசச் சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுமுன் இந்த மகாநாடு கூடியது. அதற்குப் பின் கூடியிருந்தால் இதன் தீர்மானங்கள் வேறுவிதமாக இருக்கும்" என்று காதோர்ன்–ஹார்டி என்பவர் ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார். இவர் எழுதிய பிறகு எத்தனையோ அரசியல் விஷயங்கள் நடந்தேறிவிட்டன.

மகா நாட்டின் நடவடிக்கைகளிலிருந்து ஒன்று அறியலாம். குடியாட்சி மாகாணங்கள், தாய் நாட்டின் (இங்கிலாந்து) வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கக்கூடாது என்றும் மகாநாட்டின் நன்மையைக் கோரும் சுய உரிமை வேண்டும் என்றும் பாடுபட்டன. சில பிரதிநிதிகள், பால்பர் அறிக்கையைச் சற்று மாற்றி மாகாணங்களின் அன்னிய நாட்டு அரசியல் கொள்கைகளை வனைவதற்கு பிரிட்டனுக்கு அதிக உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டனர். வின்னிப் பெக் புரொபஸரான திரு. எ. ஆர். எம். லௌவர் தாம் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்.

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைபெற்று இருக்கவேண்டுமானால், மாகாணங்களின் அன்னிய நாட்டுக் கொள்கைகளை எல்லாம் பிரிட்டன் வனைவதற்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும். ஆனால் இதைப் பிரிட்டன் அமுலுக் கொண்டுவரத் தனது அதிகாரத்தைக் காண்பிக்கக் கூடாது. இப்படி நடைபெற்றால்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைபெற்று இருக்கும். சர்வதேசச் சட்டங்கள் நிரந்தரமாக ஏற்படும்வரை ஐரோப்பிய அரசியல் குழப்பங்களில் பிரிட்டன் கலந்துகொள்ளக் கூடாது. பிரிட்டன் தனது நோக்கு எப்படியிருந்தாலும் சமாதானத்தை ஒரு கொள்கையாக நடைமுறையில் ஆதரிக்க வேண்டும். அது பிரிட்டனின் நன்மைக்கு மட்டுமல்ல ; சாம்ராஜ்யத்தின் நன்மைக்காகவும்தான். 1914-லும் 1918லும் ஏற்பட்ட நெருக்கடிபோல இப்பொழுது ஏற்பட்டால் வேறு முறைகளைக் கையாளும்; பிரிட்டனுடன் குடியாட்சி மாகாணங்கள் ஒத்துழையாது. பிறகு சாம்ராஜ்யம் கலைந்துவிடும்."

லோதியன் பிரபுவும் இதே போக்கில்தான் டைம்ஸ் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இருவருடைய போக்கையும் கவனிக்கும் பொழுது கெல்லாக் ஒப்பந்தத்தை மறுமுறை கொள்ள வேண்டும் என்பதில் எவ்வளவு திட்டமான பொருளிருக்கிறது என்று தெரியவரும். குடியாட்சி நாடுகள் எல்லாம் கெல்லாக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவைகள். ஆனால் இதேமாதிரி எல்லா ஒப்பந்தங்களிலும் குடியாட்சி நாடுகள் எல்லாம் சேர்ந்துதான் இருக்கின்றன என்று நினைக்கக் கூடாது. 1924 ஜினிவாப் புரொடோக்கலில் ஆஸ்திரேலியாவும், நியூஜீலந்தும் கையெழுத்திடவில்லை.

டோரென்டோ மகாநாட்டில் கூடியிருந்த மாகாணங்கள் எல்லாம் தங்கள் உள்நாட்டு விஷயங்களுக்கு அதிக முக்கியம் கொடுக்கும் பொழுது, பிரிட்டனுக்கும் உள்நாட்டுக் கொள்கைகள் உண்டு என்பதை மறந்துவிட்டன. பஸிபிக் கடற்கரையிலிருந்து தனியுரிமை, தனியாட்சி என்று பேசிக்கொண்டிருக்கலாம். அது லண்டனில் நடைபெறக் கூடிய காரியமா? திடீரென்று ஜெர்மனி பெல்ஜியத்தை எதிர்க்கும்பொழுது இங்கிலாந்து சும்மா கையை கட்டிக்கொண்டு இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது அரசியல் குருட்டுத்தனந்தான்.

இதனால்தான் பிரிட்டிஷ் அரசியலின் அன்னியநாட்டுக் கொள்கைகள் சற்று விபரீதமாக இருந்து வந்தன. குடியாட்சி மாகாணத்தையும் தங்கள் நன்மையையும் பாதுகாக்கும் ஒரே கொள்கையை நடைமுறையில் ஆதரிக்க முடியவில்லை. மேலும் இப்பொழுது ஐரோப்பிய அரசியல் நெருக்கடிகளில் அவர்கள் சும்மா இருக்கவும் முடியாது. மேற்குக் கானடாவின் அறிக்கையில் பின் வருமாறு இருக்கிறது. "இந்தப் பிரிட்டிஷ் காமன்வெல்த் என்ற மகத்தான பரிட்சை வருங்காலத்தில் பிரிந்துவிடத்தான் போகிறது. உலக யுத்தம் வந்தால் சமீபத்தில் நடக்கும். அது இல்லாவிட்டால் கொஞ்ச நாட்கள் கழித்து நடந்தேறும்."

இந்த வார்த்தைகள் பிரிட்டனின் நெருக்கடியான நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காண்பிக்கின்றன. உலகப்போக்கு இந்த மாதிரியான நிலைமையை அதிகத் துரிதமாகக் கொண்டு வருகின்றது. சிம்மன்ட்ஸ் என்ற அறிஞர் தமது புத்தகத்தில், "இப்பொழுது உலகம் ஒரு பெரிய யுத்தத்தை எதிர்பார்த்திருக்கிறது. பழைய யுத்தத்தை மறந்துவிட்டது" என்று கூறுகிறார். ஐரிஷ் கிளர்ச்சி இதன் போக்கைத்தான் காண்பிக்கிறது. சாம்ராஜ்யத்தின் பிரிவு காலத்தின் போக்கில்தான். அதுவும் வெகு சீக்கிரத்தில். புரொபஸர் கோப்லந்து நான்கு வருஷங்களுக்கு முன் "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தடையின்றி வளர்ந்துக்கொண்டு போகக்கூடிய ஸ்தாபனம்" என்று ஒரு அழியாத நித்திய வஸ்துவைப் பற்றியதுபோல் பேசினார். 1934-ல் அவருடைய அபிப்பிராயம் என்னவாக இருக்குமோ?

பாகனேரி

தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கம்
திருவள்ளுவர் நூல் நிலையம்

செப். 17உ மாலை 5-க்கு ஷை சங்கத்தில் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவரின் முன்னுரைக்குப் பின் "நூல் நிலையத்தின் அவசியம்" என்பதுபற்றி திரு. வே. மாணிக்கம் அவர்களும், "சீர்திருத்தம்" என்பது பற்றி மதகுபட்டி திரு. சொ. கண. முத்தய்யா அவர்களும், "ஆரம்பக் கல்வி" என்பதுபற்றி திரு. சி. உ. சுப. உடையப்பா அவர்களும், "தமிழ் ஆக்கம்" என்பதுபற்றி திரு. செ. சின்னத்தம்பி அவர்களும், "கம்பர் கவிநயம்" என்பது பற்றி திரு. தே. வீரப்பன் அவர்களும், "முயலாது இயலாது" என்பதுபற்றி திரு. உ. மு. சோமசுந்தரன் அவர்களும் அழகாகவும் இனிமையுடனும் கேட்போர் மனம் இறும்பூதெய்தும் விதமும் சொற்பெருக்காற்றினார்கள். தலைவரால் அழகாக முடிவுரை கூறப்பட்ட பின், கூட்டத்திற்கு வந்திருந்தோருக்கு திரு. கண. மு. மு. சாத்தப்பன் அவர்கள் நன்றி கூறினார். இரவு 7–30 மணிக்குக் கூட்டம் நிறைவெய்தியது என்று காரியதரிசி திரு. ராம. ஆ. வி. ராமநாதன் அறிவிக்கிறார்.

சர்வம் சந்தேக மயம் ஜகத்

(ரங்கம்)

எங்கும் சந்தேகம் !

எதனினும் சந்தேகம்! அம்மம்மா! உலகில் என்னென்ன சந்தேகங்கள் காணப்படுகின்றன !

காந்திஜீ

காங்கிரசில் இருப்பதா அதனைவிட்டு நீங்குவதாவென்று சந்தேகப்படுகிறார். அவரது பக்தர்கட்கு, காந்திஜியின் ஆணை வழி ஒழுகுவதா அல்லது உதறித் தள்ளி விட்டுவிடுவதாவென்ற ஓர் சலிப்புச் சந்தேகம் !

சென்னை ஆங்கிலோ இந்தியர்கட்கு,

காங்கிரஸ் பிரதிநிதியாகிய திரு சத்தியமூர்த்திக்கு ஓட் போடுவதா அல்லது ஜஸ்டிஸ் கட்சி அபேக்ஷகரான திரு. எ. ராமசாமி முதலியாருக்கு வாக்களிப்பதா வென்பது போன்ற ஓர் பாசாங்குச் சந்தேகம். ஆதலால் சென்ற வாரம் ஒருநாள் இருவரையும் ஒரு மேடையில் பேசவிட்டு ஒரு நாடகம் கூடப் போட்டுப் பார்த்தார்கள் !

வர்த்தகத் தொகுதி

அபேக்ஷகராக நிற்கும் சர் ஆர். கே. ஷண்முகம்—சட்டசபையில் விருப்பவர்கள் தேர்தல் பிரசாரம் செய்யக் கூடாது என்றிருக்கும் சட்டத்தை எவரோ ஞாபகப்படுத்தி விட்டார்களாம். ஆதலால்—மாதா மாதம் 3000 ரூபாய் சம்பளத்தைக் கொடுக்கின்ற தலைவர் பதவியைக் கைவிட்டுத் தேர்தல் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது பிரசாரத்தை விட்டுவிட்டுச் சம்பளத்தைத் தொடர்ந்து நடப்பதாவென்று ....சந்தேகப்படுகிறாராம் !

சுயமரியாதைக்காரர்கட்கு,

காங்கிரஸ் அபேதவாதக் கட்சியில் சேர்ந்துவிடுவதா அல்லது முன்போலவே இயக்கத்தைத் தனியாக நடத்திக் கொண்டு செல்வதா வென்ற ஓர் பிளவு பட்ட சந்தேகம்.

சனாதனிகட்கு

தாங்கள் நினைப்பதுபோல் உலகம் பின்பார்த்து நடவாது முற்புறமே தலையை நீட்டிக் கொண்டே ஓடுவதைக் கண்டதும், பரிஹார முறையில் அகில இந்திய காங்கிரஸ் கூட்டப்படுவது போல, ஓர் அகில பாரத மகாவிஷ்ணு யாகம் அல்லது அகில இந்திய சனாதனிகள் வேள்வியென்ற ஒன்றை நடாத்தி ஹிமாலயம் முதலிய மலைகளில் வசிக்கும் தாடிவாலாக்களை அழைத்து வேள்விப் புகையைப் போட்டால் வால் தலையாகிவிடாதோ என்ற ஒரு இறுதிச் சந்தேகம்.

விருதுநகர் வாசிகட்கு,

சென்றவாரம் சர் ஆர். கே. எஸ்ஸின் பிரசங்கத்தைக் கேட்டது முதல் ஒட்டவா மகாநாடு இந்தியாவுக்கு நன்மை புரிந்ததா அல்லது கெடுதியைச் செய்ததா என்ற ஒரு விளங்காச் சந்தேகம்.

மாளவ்யாவுக்கு,

தம் தேசீயக் கட்சியைக் காங்கிரஸ் சார்பில்லாமல் நடத்திக்கொண்டு போகலாமா அல்லது காங்கிரசோடு வெளிப் படையாகச் சேர்ந்து நடத்துவதா வென்ற ஒரு இடைவிட்ட சந்தேகம் !

ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு

தோழர் ஈ. வே. ரா. பத்துக் கற்பனைகளைத் தம் மகாநாட்டுக் கனுப்பியிருப்பது, தம்மை ஏளனம் செய்வதற்கா அல்லது 'அவர் காங்கிரசில் சேரப் போகிறார்' என்பதைச் சொல்வதற்கா என்கின்ற! துணையற்ற சந்தேகம். அதோடு தகுந்த சமயத்தில் அந்த 'ஆசாமி' வந்து ஜீவநாடியில் கையை வைக்கின்றாரே என்ற ஓர் நடுநடுக்க சந்தேகம் !

ஜப்பானில்,

ஒரு பெரும் புயல் ஏற்பட்டு ஒஸாக்காவிலிருந்து மெதுவாக உருண்டு புரண்டு டோக்கியோ வரையிலும் சென்றதில் பல்லாயிரக்கணக்கான ஆடுமாடுகளும் தந்திக் கம்பங்களும் லைட் தூண்களும் நாசமடைந்ததோடு ஏராளமான வீடுகளும் சர்க்கார் கட்டிடங்களும் (மாணவர்களுடன்) அழிந்துபட்டன. பல ரயில் வண்டிகளும் தண்டவாளத்திலிருந்து வீழ்ந்து கொலை புரிந்தன. கடலும் கரையிலேறிவிட்டது. ஆதலால் ஜப்பானின் ஒரு பகுதிக்கு இருப்பதா கடலில் ஆழ்வதா என்ற ஒரு இயற்கைச் சந்தேகம்.

சர்வதேச சங்கத்திற்கு,

பணக்கார விரோதியான ருஷ்யாவுக்கே வரவேற்பளித்தாகி விட்டதே, இனி ஜெர்மனிக்கும் ஆயுத சமத்துவ நிலைமை அளிப்பதன் மூலம் அதனையும் தன் கோஷ்டிகளோடு ஏற்றுக்கொண்டு எல்லோரும் சேர்ந்து பஜனை பாடினாலென்ன வென்ற ஒரு வேலையற்ற சந்தேகம் !

இதற்கிடையில்

ஒரு கமலாபுரம் சாஸ்திரியாருக்கு "ஒருவர் தன் தகப்பனாருக்கு சபிண்டீகரணம் செய்து அதன் பிறகு மாஸாமாஸம் செய்ய வேண்டிய அனுமாஸிகங்களும் செய்துகொண்டு" வந்தால் தர்ம சாஸ்திரம் இடம் கொடுக்குமா அல்லது கொடுக்காது நரகத்தில் தூக்கிப் போட்டு விடுமா வென்ற ஒரு மலைச் சந்தேகம் !

இந்திய சர்க்கார் பிரிட்டனில் நோட்டிங்ஹாம் என்ற இடத்திலிருக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான கொசு வலைகள் அனுப்பும்படி உத்தரவு அனுப்பியிருப்பதாக ஒரு ஒரு லண்டன் நிருபர் எழுதுகிறார். இவ்வலைகள் ராணுவ வீரர்களுக்காம்.

அட வீரர்களே! கொசுக்களிடம் செல்லவில்லையே உங்கள் சாமர்த்தியம்.

* * *

நம் தேசத்திற்கு ஒற்றுமை உணர்ச்சி வர இன்னும் எத்தனை நாளாகுமோ?

—கட்டுரையாளர் ஏக்கம்

இந்தியா முழுதும் பீஹார் பூகம்பம் ஏற்படும் நாளைக் குறிப்பிட்டால் கணித்துச் சொல்லி விடுகிறேன்.



தேக்கங் கன்றுகள்

(சோ. வி.)

வில்லி ஸ்டேதம் ஆக்ஸ்போர்டை விட்டு வெளியேறியவுடன், இம்பீரியல் பாரஸ்ட் (Forest) ஸர்வீஸில் இரண்டு வருஷங்கள் தன்னை இந்தியக் காடுகளுக்காகத் தயாரித்துக் கொண்டதுவரை நமக்கு அவ்வளவு கவலையில்லை. இங்கிலாந்தின் மூடுபனிகளுக்கும், தனது உள்ளத்தைக் கவர்ந்த அந்த டைப்பிஸ்ட் நங்கைக்கும், விடைபெற்றுக்கொண்டு, 'ஜிஹாங்கிரில்' கால்வைக்கும் பொழுது, சிறுபையனின் களை சற்றுவது மாறவில்லை. சிரித்த கண்களும், நகைச்சுவை ஒளிந்த உதடுகளும், யாரையும் விரைவில் நண்பனுக்கிக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. பம்பாய் துறைமுகத்தில் கால்வைத்த ஐந்தாவது மாதத்திலேயே, D. F. O. ஆனதில் ஒரு ரகஸியம். இவர் தகப்பனரின் நண்பர் கர்னல் ரேளபாத்தத்தின்,—மூத்த ஸ்டேதமும், இவரும் போயர் யுத்தத்தில் தோளொடுதோள் நின்ற வீரர்கள்— உதவி கொஞ்சம் உண்டு. தனது ஆக்ஸ்போர்ட் நடைநொடி பாவனைகளை, விஷக்காய்ச்சல் பிடித்த மேற்குத் தொடர்ச்சி மலைகளில், ஊளையிடும் நரிகளுக்கும், புஸ்தகத்தை ஒப்பிப்பதுபோல் பேசும் இந்திய ரேஞ்சர்களிடத்தும் காண்பிக்க வேண்டும் என்று நினைக்கவேயில்லை.

முதல் முதலில் அவருக்கு மரங்களைச் சுற்றிப் பார்ப்பதும், வெட்டப்பட்ட மரங்களையும் ரேஞ்சர்களையும் தணிக்கை செய்வதும், அங்கு கிடைக்கும் பெரிய வேட்டைகளை ஆடுவதும் வெகு உத்ஸாகத்தைத் தந்தபோதிலும், கொஞ்ச நாட்களில் புளித்துப் போய்விட்டது. ஆனல் அங்கே தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் அந்தப்பெண், அவளில்லாவிட்டால், வில்லியின் ராஜினமா, முந்தியே கவர்மெண்டுக்குக் கிடைத்திருக்கும்.

இரண்டு வருஷங்கள் சிட்டாகப் பறந்தன. வருகிற கிரிஸ்மஸ் விடுமுறையில், 'ஹோமிற்கு'ப் போகவேண்டும். வரும்பொழுது அந்த டைப்பிஸ்ட் தன் பெயரை மாற்றிக்கொள்வாள். பிறகு கேட்பானேன்! குதூஹலந்தான்.

• • •

உலாந்திரேன்ச், மலேரியா, யானை, தேக்குமரம், இத்யாதி பொருள்கள் அபரிமிதமாகக் கிடைக்கும் ஸ்தலம், என்பது காட்டு இலாக்கா, மன்யுவலின் கொள்கை. மலேரியாவிற்குமட்டும் பணம் கொடுத்து வாங்கவேண்டாம். போக்குவதற்குத்தான் அதன் உதவி தேவை.

ரேஞ்ச் ஆபீஸ் என்ற தகரக் கொட்டகை ரேஞ்சர் பங்களா என்ற மூங்கில் வேய்ந்த மரக்குடிசை, தேக்கங் கட்டைகள் அடுக்கும் பெரிய கொட்டகை, மரங்களை இழுக்கும் யானைகளின் கொட்டாரம், பத்துப்பதினைந்து காடக்குடிசைகள், வெற்றிலை, சுருட்டு முதல், ஸெண்ட் சீப்பு வரை தேவைக்குரிய பண்டங்களை தன்னுள் அடக்கும் 'ஷாப்'—கேட்டவுடன் எப்பொழுதும் இல்லை என்ற பதில் கிடைக்கும்—, இதுதான் உலாந்திரேன்சின் கரு.

அப்பையா ரேன்சர், கவர்ன்மெண்டாரால் தனக்கு அருளப்பட்ட இருபத்தெட்டு வருஷ வனவாசத்தில் ஏறக்குறைய பாதியை காய்ச்சலாகப் படுப்பதிலும், காடை மான் முதலிய வேட்டையாடுவதிலும், தினம் இம்மாதிரி தனக்குக் கிடைக்கும் வனபோஜனத்துடன் இரண்டு கொய்னு மாத்திரை தின்பதுமாகக் காலந்தள்ளி வந்தார். ஆபீஸ் தபால்களுக்கு 'பதில்,'—ரிப்போர்டுகள் முதலியன—அவருடைய இலாக்கா எதிர்பார்த்தபடி துரிதமாகப் போவதில்லை. D. F. O. காம்ப் போட்டிருக்கும் தகவல் கிடைத்தவுடன் அவர் ஆச்சரியப்படவேயில்லை. ஒரு வனபோஜனத்தில் எல்லாரையும் 'ராஜா' செய்யும் அப்பையாவிற்கு இந்தக் கத்துக்குட்டியான ஸ்டேதமா ஒரு பெரிய காரியம்?

உலாந்தியில் ஒரு பெரிய பரபரப்பு,

முட்டைத் தூக்கும் யானைகளின் மேல், கூடாரம், பட்லர், துரையின் நாய் இத்யாதி, முதல்நாளே வந்து ஸ்டேதத்தின் வருகையை எதிர்பார்த்து நின்றன. உலாந்தியைச் சுற்றி பத்துமைல் வட்டாரத்திற்கு பெட்ரோல் நாகரிகத்தின் ஜம்பம் சாயாது.

இதனால் 10-வது மைலில் துரையின் மோட்டாருக்கு ஒரு ஷெட், காவல்காரன் வகையரா தயார் செய்துக் கொண்டு துரையவர்களின் வருகையை எதிர்பார்த்து வெகு காலையில் நிற்க வேண்டும் என்ற உத்திரவு.

அப்பையா ரேன்சர் ராஜதந்திரியாகப் பிறந்திருக்க வேண்டியவர். களைத்து வந்தவர்களுக்கு வயிற்றை நிறப்பி விடுவதைப் போல் எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்கு வேறு மோகனாஸ்திரம் கிடையாது என்று கண்டவர். துரையவர்களின் பாய் (Boy)—அறுபது வயதுக் கிழவனாகிலும், துரைகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் பாய் (Boy) தான்; மார்கண்டன் பிறந்த நாட்டு மண் விசேஷமாக இருக்கலாம்—அவனைக் கையில் போட்டுக் கொண்டார். காட்டில் கிடைக்கும் தீனி வகையரா, நாட்டிலிருந்து டின்களில் அடைத்த சீமைச் சாக்குகள், துரையவர்களின் கண்ணில் மண்ணைப் போட, அல்ல, புத்தியை மூடிவைக்க, சாம்பெயின் பிராந்தி' விஸ்கி இத்யாதி, இத்யாதி.

அப்பையா, ஒரு பாரெஸ்டர் (Forestar), இரண்டு கார்டுகள், இரண்டு பெரிய ரோஜா ஹாரங்களுடன் (இது இங்கு செலவில்லாமல் கிடைப்பது; ஹாரம் கார்டு கோபால நாயகரின் கைவேலை, சேணமிட்ட குதிரை சகிதம் வெகு காலையிலேயே வந்து குறிப்பிட்ட இடத்தில் எதிர்பார்த்து நின்றார்கள். பாய், துரைக்குத் தீனிகொண்டு வந்திருக்கிறான். 'ஸ்டேதம் மான்மியத்தை' எடுத்துச் சாடுவிட்டான்.

காலை எட்டு மணியிருக்கும். எங்கோ ஒரு மோட்டார் "ஹார்ன்' காற்றோடு கலந்தது.

"துரை வந்தாச்சசா. பூச்சிமேட்டுப் பக்கம் கேக்குது. டேய் 'ராமராவ்' நீ போய் பார்" என்று கட்டளையிட்டார் அப்பையா.

கோபால நாயகர் கைவேலையில் தேர்ச்சி என்றால், 'ராமராவ்' கால விஷயத்தில் 'எக்ஸ்பர்ட்'. 'ராமராவ்' ஜாதியில் காடன். அவனுக்குத் தந்தையிட்ட பெயர் தடாகன். காருண்ய கவர்மெண்டாரின் ரேன்சர்களாகத் திகழும் பிரதிநிதிகளின் வழியாக, மலைக்கேறிய ஆரிய நாகரிக வாசனையைப் பெற்ற தாடகன், நாஸூக்காக 'ராமராவ்' என்ற பெயர்ப்பதிவிலேயே சம்பளம் பெற்று வருகிறான். ராவ்ஜிகளுக்கு யக்யோக வீதம் உண்டு என்று தெரியாவிட்டால் அது அவன் குற்றமல்ல. அப்பையாவிற்கு முந்தியிருந்த ரேன்சர் இவனை எப்பொழுதும் "அடே காடப்பயலே" என்று கூப்பிட்டு வந்தின் அர்த்தம் அவனுக்குத் தெரியாது.

அப்பையாக் கோஷ்டி ஒரு அரை மணிசவகாசம் காத்துக் கொண்டிருந்த பிறகு ஒரு சிறிய இரண்டு பேர் இருக்கும் மோட்டார் வந்து நின்றது.

அப்பையா தன்னை யார் என்று தெரிவித்துக் கொண்டு மாலையைப் போட்டார்.

"ஒஹோ நீர்தான் ரேன்சரோ! அதிக நேரம் காத்திருந்தீரோ? கையிலிருக்கும் பெரிய புஸ்தகம்? அதற்கென்ன ஆபீஸில் ஆபீஸில் பார்த்துக் கொள்ளலாம்" என்று சிரித்துக் கொண்டே காரிலிருந்து இறங்கிப் புஷ்ப மாலையை முகர்ந்து கொண்டிருந்தார்.

"பாய்' உடனே காரில் துரையின் உணவை வைக்க அவர் சாப்பிட்டுக் கொண்டே ரேன்சைப்பற்றிப் பேசி அப்பையா மனதில் கத்துக்குட்டி என்ற எண்ணப்படும்படி செய்துவிட்டார்.

'காட்டைப் பார்த்துவிட்டே போகலாம்' என்று துரை குதிரைமேல் ஏறிக் கொண்டார்.

ராமராவையும்கூட வரும்படி அழைக்க 'நாம் இருவரும் மட்டும் போகலாம்' என்று துரை தடுத்தால் அப்பையா என்ன செய்ய முடியும்?

8 மணிக்குப் புறப்பட்டவர்கள் சாயங்காலம் 4 மணிவரை என்னதான் செய்தார்களோ? வரும்பொழுது துரையின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"இரவில் நான் கணக்கைச் செக் செய்து கொள்வேன். நீர் அனுப்பி வைத்தால் போதும். இம்மாதிரிக் கணக்குப் புத்தகமும் இருந்தால் என்னிடம் அதிக நாள் வேலை பார்க்க முடியாது" என்று சொல்லிக் கொண்டே கூடாரத்திற்குள் சென்றுவிட்டார்.

இந்த ஸ்டேதம் 'அப்பாவி' அல்ல என்று தெரித்து கொண்டாலும் தன் கையில் துருப்பு இருக்கும் வரையில்—'பிளான்' போட்ட விருந்து—கடைப்பிடி தனக்குத்தான் என்று நம்பினர்.

"பாத் ரெடி ஸார்" என்றான் பாய்.

ஸ்டேதம் குளித்துவிட்டு அதிக களைப்பாக இருந்ததினால் ஒரு பெக்(peg) பிராந்தி சாப்பிட்டு விட்டு, தனக்குக் கடைசியாக வந்த காதல் கடிதத்தை எடுத்துக் கொண்டு, ஒரு பெரிய சுருட்டைப் பற்ற வைத்த வண்ணம், அவருடைய நாய் முன்பு ஓட, உலாவப் புறப்பட்டார். இது இவருடைய வழக்கம்.

நினைவுகள் பல பலவாக ஓடின. வெகு தூரம் நடந்து விட்டார்.

ஒரு மேட்டில் வெளி. அதில் ஒரு சண்பக மரம். கீழ் திசையில் இருக்கும் பள்ளத்தாக்கை நோக்கி இருந்தது.

மேட்டில் ஏறி, ஒரு கல்லில் உட்கார்ந்து கொண்டு, கடிதத்தை மறுபடியும் படித்து உள்ளத்தில் பொங்கும் நினைவுகளில் திளைத்துக் கொண்டிருந்தார்.

சற்று இருட்ட வாரம்பித்தது. எழுத்துகள் தெரியவில்லை.

அதோ அந்த கீழ் திசையில் பூரண சந்திரன். அபபடியே கவனித்து மெய் மறந்தார்.

நாய் மெதுவாக, பரிதாபகரமாக, ஊளையிட்டுக்கொண்டு அவர் பக்கத்தில் ஒண்டியது. நேரமாகி விட்டது. எழுந்தார். அந்தச் சண்பக மரத்தடியிலே என்ன? காதலி லில்லி கார்ட்டர்! எப்படி வர முடியும்?

அவள் தான் விஷமக் குட்டியாச்சே!

வெள்ளுடை தரித்து சிரித்துக் கொண்டே கைகளை அசைக்கிறாள். முகம் மட்டும் சற்று வெளிறி இருக்கிறது.

கைகளை விரித்த வண்ணம் 'டார்லிங் லில்லி' என்று சொல்லிக்கொண்டு அவளை ஆரத்தழுவப் பாய்ந்து ஓடினர்.

யாராவது வெறும் வெளியை, நிலாக் கற்றையைத் தழுவ முடியுமா?

வேர்தான் கடிக்கிற்று.

"என்ன முட்டாள்த் தனம் அந்த பிராந்திதான்," என்று நினைத்துக் கொண்டு திரும்பினர்.

நாய் கிளைகளின் ஊடே பாய்ந்த நிலவொளியைப் பார்த்துக் குலைத்தது.

காற்று எங்கிருந்தோ அசைந்தது. சண்பகம் தனது கனவுகளைச் சொரிந்தது.

ஸ்டேதம் கூடாரத்திற்கு வந்த பொழுது மணி எட்டிருக்கும்.

"டின்னர் ரெடி சார்" என்றான் பாய்.

ளுகிறோம். எங்கள் மனமார்ந்த அனுதாபம்.

டாக்டர் பர்ன்"

"கண்ணு! லில்லி" உனக்கு யாருமில்லையே! அனாதையாகவா. ஐயோ! டார்லிங்! டார்லிங்!

கையிலிருந்த தந்தி, பிடித்த பிடியில் கசங்குகிறது.



அந்தச் சண்பக மரத்தடியிலே என்ன? காதலி லில்லி கார்ட்டர்.

மேஜையில் எல்லாம் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பிளேட்டில் ஒரு 'கேபிள்' (cable).

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சாவகாசமாய், அதை எடுத்துப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தார்.

"ஐயோ!"

நெஞ்சில் இரும்புச் சம்மட்டியைக் கொண்டு அடித்தது போல். மேஜை கூடாரம், எல்லாம் சுழலுகின்றன.

நிஜமா?

திரும்ப நடுங்கிக் கொண்டே வாசிக்கிறார்.

"மிஸ் லில்லி கார்ட்டர் நேற்று சாயங்காலம், பிக்காடில்லி மூலையில் மோட்டாரால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு, இன்று காலை உயிர் துறந்தாள். அவள் வேண்டுகோளின் படி தங்களுக்குத் தெரிவித்துக் கொள்

"பாய், போ! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்"

ஏக்கமும் பரிதாபமும் நிறைந்த உள்ளத்தின் துயரம் அந்தக் காட்டில் இரவு முழுவதும் கேட்டுக் கொண்டே இருந்தது.

அன்று இரவு முழுவதும் இருவர் தூங்க வில்லை.

பாட்டில்கள் கீழே உருண்டன. துயரம், அழியாத சோகம் கலந்த சிரிப்புகள்.

விடியற் காலத்திலேயே துரை கீழே இறங்கி விட்டார்.

அப்பையாவுக்கு நோட்டுப் புஸ்தகத்தைப்பார்த்ததும், என்னை மிறட்டினதும் ஸ்டேதம் கத்துக்குட்டிதான் என்பது உறுதியாயிற்று.

• • •

லில்லி ஸ்டேதத்தின் ராஜி நாமா இலாகாவில் சிறிது பரபரப்பு உண்டாக்கிறது. அது வெகு சிறிது. உடனே ஓய்ந்தது. என்னன்னமோ வதந்திகள் உலாவின. கர்னல் ரௌபாதத்திற்கு ஒன்றும் புரிய வில்லை.

சாதாரண லில்லி ஸ்டேதம் மறுபடியும் உலாத்திக்கு வந்தபொழுது ஒரு பரபரப்புமில்லை. கூட அந்த பாய், லில்லியின் தாயின் ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டான்.

சண்பகமேட்டில், அதே இடந்தான். ஒரு சிறு மரக்கட்டிடம். அதில் இருவர். ஒன்று துயரத்தின் உருவான நடைப் பித்து. மற்றொன்று அதன் தாய், பணியாள்.

சண்பக மரத்தைச்சுற்றி தேக்கங் கன்றுகள் நடுவதில் லில்லிக்கு என்ன ஆசை!

சண்பகந்தான், லில்லியாம்; தேக்கங் கன்றுகள்தான் அவர்களின் காதலின் இலக்ஷியங்களாம்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர். குவென்டலின், லில்லி, ஆலிவ், என்னென்ன அழகான பெயர்கள்.

கொஞ்சம் காற்று வலித்தால் ஸ்டேதத்திற்கு உயிர் புழுவாகத் துடிக்கும்.

எந்த நேரத்திலும் அதனுடன் கொஞ்சித் தழுவிப் பேசிக்கொண்டிருப்பதில் என்ன இன்பமோ?

அன்று வாயுசண்டனைத் தலைவிரித்தாடுகிறான். மேகம் கவிந்த இடைவிடாத பெருந்தாரை. ஊழிக்கூத்து.

ஸ்டேதம் அந்த இருளில் சண்பக மரத்தின் இடையைக் கையில் பிடித்துக் கொண்டு தன் தேக்கங் குழந்தைகளுக்கு அங்கலாய்க்கிறார்.

"குவென்டலீன், லில்லி," என்ற துயரக் குரல்கள் காற்றில் அமிழ்ந்து நசிந்தன.

"ஐயோ!"

என்ற துயரத்தின் ஓலம்.

பாய் ஓடிவந்து பார்க்கிறான். துரைக்கு மூச்சுப் பேச்சில்லை.

உள்ளே தூக்கிச்சென்று கிடத்தி விட்டு முகத்தில் தண்ணீர் தெளித்து பிராந்தியைத் தடவி சூடு உண்டாக்குகிறான்.

ஒன்றுமில்லை.

சற்றுநேரம். ஒரு நூலிழைபோல் மூச்சு வருகிறது. பயமில்லை.

காடனுக்கு ஐந்து ரூபாய்; ரௌபாதத்திற்கு ஒரு தந்தி.

'வருவதற்கு எத்தனை நாள் சார்!'

வந்த ரௌபாதம் திடுக்கிட்டார். அறிந்த இளைஞனுக்குப் பதில் மெலிந்த துயரம் படுக்கையில் கிடந்தது. ஒருவாறு அறிந்து கொண்டார்.

மறுநாள் பிணியாளியுடன் உதகமண்டல ஆஸ்பத்திரிக்குப் பிரயாணம். ஒவ்வொரு பர்லாங்கும், மரணத்துடன் போராட்டம்.

* * *

ஆஸ்பத்திரியில்.

ஸ்டேதத்தின் சாயை; துயரத்தின் வடிவம்.

நியுமோனியா. பிழைப்பு கிடையாது; இறப்பும் வரமாட்டேன் என்கிறது.

ஒருமாத காலம்.

அன்று ராத்திரி.

ஸ்டேதம், கர்னல் ரௌபாதத்தைப் பார்க்கவேண்டுமாம்.

இரவில் கிழவர் வருகிறார்.

ஸ்டேதம் புன்சிரிப்புடன், 'முடிந்துவிடும்' என்கிறார்.

கிழவர் பேசாமல் அவன் கையைப் பிடித்து,—உயிரை நிறுத்த முயற்சிக்கிறாரோ? அப்பொழுதுதான் போயர் வீரனின் கண்களில் இரண்டு துளி.

"எனக்கு ஒரு ஆசை."

"உம்!" கிழவருக்குப் பேச முடியவில்லை.

"என்னை உலாந்தி"ச் சண்பக மரத்தடியில் புதைக்கவேண்டும். எனது சொத்துக்கள், அது கொஞ்சம்தான், அவை அந்த என்......தேக்கங் குழந்தைகளுக்கு............

சற்றுநேரம் ஒரு லிகிதம் எழுதும் சப்தம். ஸ்டேதமின் உயில்.

நடுங்கும் கைகள் கடைசிக் கையெழுத்தை இட்டன.

"லில்லி."

அவ்வளவுதான்.

• • •

உலாந்தியில் மறுபடியும் பரபரப்பு.

சண்பக மேட்டில், சண்பகத்தடியில் ஒரு குழி, தனது, காதலனை வரவேற்கிறது.

சற்று நேரத்தில் இரண்டு மோட்டார்கள்.

ஒன்றில் ஸ்டேதத்தின், என்ன? அதுதான்.

மற்றது அவனது நண்பர்கள், பரலோகத்திற்கு அனுப்பும் குரு.

ஸர்விஸ் முடிந்தது.

குழியும் தன் காதலனை வரவேற்றது. இனிமேல்?

ரௌபாதம் திரும்புகிறார். ரேன்சர் அப்பையா "அன்று காம்பில் குடிக்க ஆரம்பித்தார். அதன் கோளாறு. மலையில் செய்யலாமா?" என்றார்.

"அவனுடைய கனவை இழந்தான். காதலி இறந்தாள் அதுதான்" என்று சடக்கென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அப்பையாவிற்கு தன் துருப்பின் வேலை அல்ல என்று தெரிந்தது.

கொஞ்ச நேரத்தில்,...........காற்றும் தனிமையும்.

• • •

இரவு.

நல்ல பௌர்ணமி.

சண்பகக் கிளைகளின் ஊடே நிலாக் கற்றை சவக்குழியின் பேரில் விழுகிறது.

தூரத்திலே அந்த நாயின் ஏக்கமான ஊளை.

சிறிய காற்று.

சண்பகம் தனது கனவுகளைச் சொரிகிறது...........

இதனால்தான் அந்தப் பள்ளத் தாக்கிற்கு ஸ்டேதம் வாலி (பள்ளத்தாக்கு) என்று பெயர்.

ரயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35

கார்டு லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
„ எக்ஸ்பிரஸ்	மாலை 1 0	மாலை 2 10
„ பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
„ „	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
„	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்....	8 5	காலை 7 15
ப்ளூமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

சாவகத் தீவின் நாகரிகம்

(திரு. ஆர். ஸி. மஜும்தார், 'இந்தியன் ரிவ்யூ' பத்திரிகையில் எழுதியதின் சாரம்.)

சாவகத் தீவிற்கும் பாரத கண்டத்திற்கும் வெகு காலமாகத் தொடர்பு இருந்து வருகிறது என்பதை நம் பழந்தமிழ் நூல்களிலிருந்து அறியலாம். இப்பொழுது ஜாவா என்ற பெயரில் வழங்கிவரும் இத்தீவின் பண்டை நாகரிகத்தைப்பற்றி திரு. மஜும்தார் பின்வருமாறு எழுதுகிறார்.

சாவகத் தீவில் ஹிந்துக்கள் எப்பொழுது குடியேறினர்களோ அப்பொழுதிலிருந்துதான் அதன் பூர்வ சரித்திரம் ஆரம்பிக்கிறது என்று கருதலாம். ஆனால் அதைப்பற்றித் திட்டமான தகவல்கள் நமக்கு இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. அந்த ஜனங்களிடையே வழங்கிவரும் கர்ண பரம்பரையிலிருந்துதான் ஒருவாறு ஊகிக்க வேண்டி இருக்கிறது.


ஸர். ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் என்ற அறிஞர் தாம் எழுதிய சாவகத் தீவின் சரித்திரம் என்ற புத்தகத்தின் பத்தாவது அத்தியாயத்தில் இதைப்பற்றி விரிவாக எழுதுகிறார். இம்மாதிரியாகக் கர்ண பரம்பரையில் இருந்துவரும் பல கதைகள், ஆதியில் குடியேறிய மக்களின் தலைவனாகிய அஜி சாகாவை அஸ்தின என்ற ஹஸ்தினபுரத்தை யாண்டுவரும் மகா பாரத வீரர்களுடன் பிணித்துக் கூறுகிறது. மற்றொரு விதமான கர்ண பரம்பரை இந்த அரசர்கள் கூர்ஜாத்திலிருந்து வந்து குடியேறினர்கள் என்று கூறுகிறது.

குடியேறிவர் கலிங்கர்களா ?

இன்னும் ஒருவிதமான கதை, கலிங்க தேசத்து மக்கள் வந்து குடியேறியதாகக் கூறுகிறது. அந்தக் கதைகளில் ஒன்று, "கிளிங் தேசத்து அரசன் 20000 குடும்பங்களைச் சாவகத்தில் குடியேறும்படி அனுப்பினன். அவர்கள் அங்குவந்து குடியேறி வாழ்ந்து வந்தார்கள். சகம் 289 வரை அவர்கள் அநாகரிகர்களாக இருந்து வந்தனர். அதன் பிறகு காமோ என்ற இளவரசனைக் கடவுள் அவர்களுக்கு அருளினர்" என்று கூறுகிறது.

மூன்று தலைமுறையாக, அதாவது முன்னூறு வருஷங்களாக ஆண்டு வந்த அரசர்களைப் பற்றி வருணித்துவிட்டு அக்கதை கூறுவதாவது:—

"அஸ்தின என்ற புதிய ராஜ்யம் ஒன்று வளர்ந்தது. அதன் அரசனாகிய புலாசரனுக்கு பாண்டு தேவநாதன் என்ற புத்திரன் இருந்தான். கடைசியாக ஆண்டுவந்த மூன்று சிற்றரசர்களும் 100 வருஷம் ஆட்சி செலுத்தினர்கள். அதற்குப் பிறகு ஜயபயா என்ற அரசன் சிம்மாசனம் ஏறினன். அவன்தான் தனது தலைநகரத்தை அஸ்தினவிலிருந்து கேதிரிக்கு மாற்றினன்."



2000 வருடப் பழக்கமுள்ள ஆக்ஸ்பர்க்கிலுள்ள ஓர் ரஸ்தா. ஆக்ஸ்பர்க் ஜெர்மனியிலுள்ளது. ஒரு காலத்தில் பெவேரிய நாட்டில் மணிபோன்று மிளிர்ந்தது இந்நகரம். —N. I. A.

இந்த ஜயபயா என்பவன்தான் இந்தக் கதையை எழுதியதாகக் கூறப்படுகிறது. இந்தக் கதையில் வரும் பெயர்கள் நமது காப்பியங்களில் வருகின்றனவென்று தொனியிலிருந்தே எளிதில் அறிந்துக் கொள்ளலாம். புலாசரன் என்றால் பராசரன், அப்யஸா (வியாசன்), பிறகு பாண்டு. இம்மாதிரியாக இரண்டு வேறு வேறு காலத்துச் சரித்திரக் கதைகள் ஒன்றோடொன்று குழம்பி விட்டன. சரித்திர காலத்தில் அதாவது கி. பி. 12 நூற்றாண்டில் இருந்த ஜயபயன் என்ற அரசன் பாரத யுத்தம் என்ற காப்பியத்தை இயற்றிய புலவனை ஆதரித்தவன். இவனை இதிகாசகால வீரர்களுடன் சாவகத் தீவின் கர்ண பரம்பரை பிணித்து விட்டது.

அரக்கர் வாழிடம்

கர்ண பரம்பரைக் கதைகள் அஜிசாஹா என்ற வீரனுக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்கின்றன. அவன்தான் முதல்முதலாகச் சாவகத் தீவை நாகரிகப்படுத்தி யவத்விபா என்ற பெயரைக் கொடுத்தவன். அதற்குமுன் சாவகத்தை நியூஸாகேண்டாங் என்று அழைக்கப்பட்டு வந்தது. அதை அரக்கர் வாழ் இடமாகக் கருதி வந்தார்கள். சாவகத்தில் அவர்களுக்கு ரஸாக்ஸா என்று பெயர். அஸ்தின என்ற ஹஸ்தினபுரியில் ஆட்சிசெய்த பாண்டவ அரசனுக்கு முதன் மந்திரியாக அஜிசாவைக் கூறுகிறார்கள். அவன் சாவக ஆப்தம், (சக ஆப்தத்திற்குச் சரியானது) முதல் வருஷத்தில் சாவகத்திற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் சில கதைகள் "திரிதேஸ்தரா என்ற பிராம்மணன் சாவகத்தில் குடியேறி ஹிந்து மதத்தையும் நாகரிகத்தையும் பரப்பினன். அதற்காக அவனை அஜிசாகா என்று அழைத்தார்கள்" என்று வருணிக்கிறது.

"அஜிசாகாவைப்பற்றிப் பல கதைகள் இருந்து வருகின்றன" என்று ராபிள்ஸ் என்ற சரித்திர அறிஞர் முடிவு கட்டுகிறார்.

பலவிதமான வரலாறுகள்

அஜிசாஹாவைப்பற்றிப் பலவிதமான கர்ண பரம்பரைகள் வழங்கி வருகின்றன. சில அவனைப் பராக்கிரமமுள்ள சிற்றரசன் என்றும் அவன்தான் சாவகத்தில் முதல் முதலாகக் குடியேறினன் என்றும், பிறகு தொத்து வியாதிகளின் கொடுமையைத் தாங்க முடியாது திரும்பிவிட்டான் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது. இன்னொன்று கட

வுளின் அவதாரமான ஒரு பக்தன் என்றும் அவன் ஆகாய மார்க்கமாகச் சாவகத் தீவில் காடும், மலையும். கடலும் கடந்து வந்து குடியேறினன் என்றும் சொல்லுகிறது. அவன்தான் முதல் முதலாகப் பாஷை, அரசாங்கம், சமயம் முதலியவற்றைச் சிருஷ்டித்தான் என்றும் கூறுகிறது. இதைப் பலர் ஒத்துக் கொள்ளுகின்றனர். கர்ண பரம்பரையை வைத்துத்தான் இதற்கு முன் இருந்த நாகரிகத்தின் சின்னங்களை அறிய முடியும்; இவன் வருகைக்கு முன் சூர்ய சந்திரர்களின் சாஸ்திரம் என்று ஒரு தர்ம சாஸ்திரம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதை அஜி சாஹா திருத்தி யமைத்ததாகவும் அது ஜங்கலாவின் காலம் வரை அல்லது மஜாபஹிதனின் காலம் வரை வழங்கி வந்தது என்றும் சொல்லப்படுகிறது.

இவைகளிலிருந்து திட்டமாக ஒன்றை வரையறுத்து கூற வியலாததாயினும், ஹிந்துக்கள் சாவகத்தில் குடியேறியது உண்மைதான் என்று கொள்ளலாம்.

இதிகாச வீரர்களின் சாட்சியங்கள்.

கிடைக்கும் சாட்சியங்களிலிருந்து கூர்ஜரத்திலிருந்தும் கலிங்கத்திலிருந்தும்தான் சாவகத்திற்கு மக்கள் வந்து குடியேறினர்கள் என்று கூறிவிட முடியாது. ஆனல் கலிங்க ஹிந்துக்களும் கூர்ஜர முகமதியர்களும் தங்கள் நாகரிகத்தைப் பரப்புவதில் முதன்மை வகித்தார்கள் என்று கொள்ளலாம். கதைகளில் இந்த இரு இடங்களின் பெயர்களுடன் மகாபாரதக் கதையின் வீரர்கள் ஒன்றுசேர்த்துக் கூறப்படுவதால், மகாபாரதக் கதை சாவகத்தில் அதிகமாக வாசிக்கப்பட்டு வந்தது என்று கொள்ளல் வேண்டும்.

சாவகத் தீவுக்கும் இந்தியாவுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே தொடர்பு இருந்து வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ராமாயணத்திலேயே சாவகத் தீவைப்பற்றி கூறியிருப்பதிலிருந்து இதன் உண்மை தெரியவரும். தாலமி என்ற எகிப்து தேசத்துச் சரித்திராசிரியன்தான் சாவகத் தீவைப்பற்றி முதல் முதலாக அறிந்ததாகத் தெரிய வருகிறது. அயபாத்தியோ அல்லது சபாத்தியோ என்ற பெயரையிட்டு சாவகத் தீவைப்பற்றி எழுதியிருக்கிறார். பிறகு அதைப் பார்லித் தீவு என்று விளக்கிக் கூறுவதிலிருந்து அந்தப் பெயர் சமஸ்கிருதப் பெயரான யாவத்விபா என்ற சொல்லின் மரூவோ என்று ஐயுற வேண்டி இருக்கிறது. தாலமி அதைப் பற்றிப் பின் வருமாறு வருணிக்கிறார்.

'அது மிகவும் செழிப்புள்ள பிரதேசம். தங்கம் ஏராளமாகக் கிடக்கின்றது. அதன் தலைநகரான ஆர்க்கைரி என்ற பட்டிணம் அதன் மேற்குக் கோடியில் இருக்கிறது.'

அதன் ஹிந்துப் பெயர்

இரண்டாவது நூற்றாண்டிற்குப் பிறகு இந்தியாவிற்கும் ஜாவாவிற்கும் அதன் பக்கத்திலுள்ள மற்றத் தீவுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறதென்று கொள்ளலாம். இந்திய இலக்கியத்திலிருந்தோ, அல்லது தாலமியின் வாலாற்றிலிருந்தோ இந்திய மக்கள் இரண்டாவது நூற்றாண்டிற்கு முன்பே



திருச்சிக்கு விஜயம் செய்த கொச்சி ராஜா அவர்கட்கு 17-9-34-ல் ஸ்ரீரங்கம் முனிசிபாலிடி ஓர் உபசாரப் பத்திரம் அளித்தது. படத்தில் அரசரையும் முனிசிபல் மெம்பர்களையும் காண்க. —Pon.

குடியேறிவிட்டார்கள் என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஹிந்துக்கள் அதை அந்தப் பெயரிட்டு அழைப்பதிலிருந்துதான் முன்பே குடியிருந்திருக்கலாமோ என்று அனுமானிக்கவேண்டியிருக்கிறது. ஆனால், அந்தத் தீவிற்கு ஹிந்துக்கள் மட்டும் அப்படி அழைத்து வந்திருக்கலாம். அப்படித்தான் அதன் பெயர் இருந்தது என்று எவ்வாறு கூறுவது? தாலமியும் அதே பெயரிட்டழைக்கிறாரே என்று பலர் நினைக்கலாம். ஆனால் ஒரு வேளை இந்தக் குறிப்புக்களை ஹிந்துக்களிடமிருந்தே அவர் ஒருவேளை பெற்றிருக்கலாம்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்கச் சீன தேசச் சரித்திரம் இந்த விஷயங்களைப் பற்றிச் சில சரித்திரக் குறிப்புகளைத் தந்து உதவுகிறது. ஹ்யு-ஹான்-ஷூ என்ற கிரந்தத்தில் ஈ-தியே தேசத்தரசனை பையேப்-பியூ கி.பி. 132-ல் சீனத்திற்கு ஒரு தூது அனுப்பியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஈ-தியோ என்றால் யாவத்விபம் என்றும் அந்த அரசன் பெயர் தேவவர்மன் என்றும் சரித்திர அறிஞர் பேராண்டு விளக்கியிருக்கிறார். இந்த ஆராய்ச்சிக்காரரின் கூற்றுக்கள் உண்மையாக இருந்தால் இந்திய நாகரிகம் அப்பொழுதே பரவி ஒரு ஸ்திரமான நிலையில் இருந்தது என்று கொள்ளலாம்.

சீனத்துச் சரித்திரத்தின்படி தேவவர்மன் கப்பம் செலுத்துவதற்காகத்தான் சீனத்து அரசனுக்குத் தூதுவனை அனுப்பினானாம். சீன மகாராஜா அந்தத் தூதுவனை வரவேற்று, தங்க முத்திரையும் பட்டுகளும் பரிசிலாகச் சாவகத்தரசனுக்கு அனுப்பி வைத்தானாம். சீனத்துச் சரித்திரக்காரர்கள் தங்கள் அரசர்களை உலகத்தின் சாம்ராட் என்று எப்பொழுதும் கூறுவார்கள். சிநேகப் பான்மைக்கும் வியாபார சம்பந்தத்திற்கும் முன்னிட்டு அனுப்பிய பரிசில்களைக் கப்பமாக அவர்கள் மதிப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை. இதனால் நாம் சீன ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்தது சாவகத் தீவு என்று முடிவுக் கட்டிவிடக்கூடாது.

கிழக்குக் கோடியிலுள்ள ஹிந்து ராஜ்யங்களில் முதல் முதலாகச் சீன நட்பைப் பெற்றது சாகத் தீவுதான். சம்பாத் தீவும், காம்போஜமும் முதலாவதாகச் சீன நட்பைப் பெற்றதாகக் கூறும் சாசனங்கள் இதைவிடப் பிந்திய காலத்தவை.

பாஹியன் என்ற சீனப் பிரயாணியின் சரித்திரந்தான் சாவகத் தீவைப் பற்றிய திட்டமான சமாசாரங்களைக் கூறுகின்றது. அவன் திரும்பும் பொழுது இலங்கையிலிருந்து ஏறிய மரக்கலம் புயற் காற்றினால் யாவத் விபத்தில் (யோ-போ-தி) ஒதுக்கப்பட்டு அங்கு ஐந்து மாதங்கள் தங்க நேர்ந்தது. அது கி.பி. 414-15-ல் நடந்த சம்பவம். அங்கிருந்த மதங்களைப் பற்றிக் கூறும்பொழுது, "பிராமண தர்மம் தப்பும் தவறுமாக அனுசரிக்கப் பட்டு வருகிறது; அங்குள்ள புத்த மதத்தைப் பற்றி அதிகமாகக் கூறுவதற்கில்லை" என்று சொல்லுகிறார். இதிலிருந்து பலவிதமான பிராமண தர்மங்கள் ஒழுகப்பட்டு வந்தனவென்றும், புத்த மதம் அங்கு அவ்வளவாகப் பரவவில்லை என்றும், முக்கால்வாசி மக்களின் மதம் ஹிந்து தர்மமாகவே இருந்து வந்தது என்றும் அனுமானிக்கலாம்.

புத்த மதம்

ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த குணவர்மன் என்ற அரசன் காலத்தில்தான் புத்த மதம் சாவகத் தீவில் பரவியது என்று கூற இடமிருக்கிறது.

'அவனுடைய புகழ் எங்கும் பரவியது. கி.பி. 424-ல் சீனச் சன்னியாசிகள் குணவர்மனைச் சீனத்திற்கு அழைக்கும்படி தங்கள் அரசனிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். உடனே அரசனும் தன் தூதுவர் வசம் குணவர்மனுக்கும் சாவகத்தரசனாகிய போ-தி-கியா என்பவனுக்கும் அழைப்பு அனுப்பினான். குணவர்மனும் ஹிந்து வியாபாரியான நந்தி என்பவனுடைய மரக்கலத்தில் ஏறி சீனத்தின் தலை நகராகிய நான்கினை கி. பி. 431-ல் அடைந்தான்.' அங்குச் சென்ற சில மாதத்தில் குணவர்மன் தனது அறுபத்துஐந்தாவது வயதில் உயிர் நீத்ததாகத் தெரிகிறது.

பாஹியன் காலத்திற்குப் பிறகுதான் புத்த மதம் சாவகத்தில் பரவியது என்று நாம் கொள்ளவேண்டும். பௌத்த கிரந்தங்கள், 'சாவகம் முழுமையும் பௌத்த மதத்தைத் தழுவியது, ராஜ்யம் கொல்லாமை விரதத்தை யனுஷ்டித்தது' என்று எழுதும் பொழுது பௌத்த மதமும் அங்கு இருந்து வந்தது என்று தான் நாம் கொள்ளவேண்டும். இம்மாதிரி அதிகமாக எழுதிவைப்பது பிராமணப் பான்மையிலிருந்து உண்டானது. அதை முழுமையும் உண்மை என நம்பிவிடக்கூடாது. பாஹியனும், மத்ய தேசத்தைப் பற்றி வருணிக்கும் பொழுது, 'அந்தத் தேசத்தில் எங்கும், கொல்லாமையும் கள்ளுண்ணாமையும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது; ஜனங்கள் வெங்காயத்தையும் வெள்ளைப் பூண்டையும் புசிக்கமாட்டார்கள்' என்று எழுதிவைத்திருக்கிறார். மத்திய தேசம் முழுமையும் இவர் கூறியபடி இருந்தது

என்பது ஒருகாலும் கொள்ளமுடியாது. சமூகத்தின் சில பகுதிகள் இம்மாதிரி ஒழுகி வந்திருக்கலாம். இந்திய தேசத்தில் இவர் எழுதியவற்றிற்கு எப்படிப் பொருள் கொள்ளுகிறோமோ அப்படித்தான் இங்கும் கொள்ளவேண்டும்.

சிலாசாசனங்கள்

இதுவரை கிடைத்திருக்கும் சிலாசாசனங்களில் மிகப் பழமையானது மஜிலாங் பிரதேசத்திற்கு வடமேற்கிலிருக்கும் மேர்பபூ மலையில் துக்மாஸ் பாறையில் பொறிக்கப்பட்டவைதான். அது ஒரு சமஸ்கிருத ஸ்லோகம். அது சரித்திர சம்பந்தமாக ஒன்றும் கூறுவிட்டாலும் அதிலிருந்து வரும் நீரூற்று கங்கைக்குச் சமம் என்று வருணிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலாசாசனத்தின் எழுத்தின் உருவத்திலிருந்து காலத்தை ஒருவாறு கணிக்கமுடியும். பூரணவர்மன் உபயோகித்த எழுத்துக்களானதால் பூரணவர்மன் 7-வது நூற்றாண்டில் இருந்தவன் என்று கொள்ளலாம். இதற்கு மேல் 16 சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதன் மத்தியில் இருப்பது திரிசூலம், அது ஒரு மேடையில் நட்டிருப்பது போல் வரையப்பட்டிருக்கிறது. அதன் வலப்பக்கத்தில் சக்கரமும் சங்கும், கதையும் போன்ற ஆயுதங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இடப்பக்கத்தில் நான்கு தாமரை மலர்களும், சக்கரமும் பாசம், வேலும், கமண்டலமும் வரையப்பட்டிருக்கின்றன.

இவைகள் விஷ்ணு, சிவன் முதலியவர்களுடைய சின்னங்கள் என்று கண்டு பிடிப்பது வெகு கஷ்டமல்ல. கமண்டலத்தை பிரம்ம கமண்டலம் என்றாவது அகஸ்தியன் பிறப்பதற்கு இடமான கமண்டலம் என்றாவது கொள்ளலாம். பாசு பமனையாவது பாசுராமனையாவது குறிக்கலாம். பாசக்கயிறு வருணனுடைய ஆயுதம்.

இவைகள் எல்லாம் அங்கிருந்தவர்கள் வழிபட்ட தெய்வங்கள் என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

இந்தச் சிலாசாசனங்களிலிருந்து மேற்குச் சாவகம் பிரமாண தர்மத்தில் ஈடுபட்டிருந்தது என்று ஊகிக்கலாம். எழுத்துக்களுக்காக அங்குப் பழக்கத்திலிருந்து வந்தவைதான். இதிலிருந்து கிழக்குச் சாவகமும் மேற்குச் சாவகமும் தனிப்பட்ட, வேறு வேறான, இரண்டு நாகரிகங்களைத் தழுவியிருந்தன என்று அனுமானிக்கலாம். இதில் தமிழர் நாகரிகம் எவ்வளவு கலந்திருந்தது என்பதை அறிஞர்கள் ஆராய்ச்சி செய்வது அவசியம். நமது பண்டை நூல்கள் சில விஷயங்களைத் தெரிவிக்கின்றவாயினும், அவற்றைச் சாவகத் தீவில் கிடைக்கும் விபரங்களுடன் ஒத்திட்டு ஒரு முடிவிற்கு வர வேண்டும்.

வாக்குரிமை கிடையாது

பேராசிரியர் வேல்ஸின் அனுபவங்கள்

ரஷ்யாவிற்குச் சென்றிருந்தபொழுது எச். ஜி. வெல்ஸ் என்ற நாவலாசிரியர் புதிய விஷயங்களைக் கண்டார். ரஷ்யாவில் பொதுஜனங்களுக்குத் தங்கள் எண்ணங்களைக் கூறுவதற்கு வாக்குரிமை கிடையாது. ஆனால் ரஷ்யாவிலே ஸ்டாலினுக்கும் பயப்படாது பதில் பேசக்கூடிய 85 வயது முதிர்ந்த கிழவரைக் கண்டார். அவர்தான் மானத சாஸ்திரத்தில் ஆராய்ச்சிசெய்து புதிய விஷயங்களைக் கண்டு பிடித்த புரொபெஸர் பாவ்லாவ் என்பவர்.

"தங்கள் எண்ணங்களை வெளியிடுவதற்கு ஸோவியத்தில் பொதுஜனங்களுக்கு உரிமை கிடையாது. பாவ்லாவ் மட்டிற்கும் இம்மாதிரியான தடை ஒன்றும் கிடையாது. இவ்வளவு வயதாகியும் அவர் இன்னும் மிக ஊக்கமும் தேக வலிமையும் பொருந்தியவராகவே இருந்து வருகிறார். ரஷ்யர்கள் அவரை ஒரு தெய்வமாகக்கொண்டு வருகிறார்கள். ஸோவியத்தைப்பற்றி அவர் கூறும் கண்டனங்களை மரியாதையாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது."

வெல்ஸ் பிறகு ஸ்டாலினைக் கண்டார்.

"நான் அவருடன் மூன்று மணி நேரம் ஒரு துவிபாஷியின் உதவியால் சம்பாஷித்தேன். எனது வாழ்க்கையில் இம்மாதிரி ருஷ்ய பாஷை தெரியாமலிருப்பதற்கு இவ்வளவு வருந்தியது கிடையாது. பிறகு பிரக்யாதி பெற்ற ருஷ்ய நாவலாசிரியனை மாக்ஸிம் கார்க்கியைச் சந்தித்தேன்; அவர் எனது பழைய நண்பர். முன்பு அவரை அறிமுகமானபொழுது தீவிரவாதி என்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுது பிற்போக்காளராகி விட்டார். நான் அவருடன் வாக்கு உரிமையைப் பற்றிப் பேசினேன். அவர் அந்த உரிமையைக் காப்பதற்குத் தயாராக இல்லை என்று கண்டேன்."

பிறகு வெல்ஸ் ருஷ்ய ஞானி டால்ஸ்டாயின் வம்சத்தவரான அலெக்ஸி டால்ஸ்டாயையும் ருஷ்ய அன்னிய நாட்டு மந்திரியான லிட்வினாப்பையும் சந்தித்தார். அவர்களும் இதைப்பற்றி அதிக உற்சாகத்துடன் சம்பாஷிக்கவில்லையென்று தெரிய வருகிறது. வெல்ஸ் ருஷ்ய ஸோவியத்தின் நிலைமையைப் பற்றிப் பெரிதும் ஏமாற்றமடைந்தார் என்று தெரியவருகிறது.

ரஷ்யாவும் சர்வதேச சங்கமும்

ஜெனிவாவில் ரஷ்யா சர்வதேசச் சங்கத்தில் சேருவதைப்பற்றி விவாதிக்கப்பட்டபொழுது, அதை எதிர்த்தவர்களுக்கு மான். பார்த்து பின்வரும் பதில் கூறினர். "முக்கியப் பிரச்னை, உடன்படிக்கைக்கு ரஷ்யா ஒத்துக்கொண்டு, கொடுத்த நிபந்தனைகளுக்கு பூரண மனதுடனும் ஒத்துக்கொண்டு இருக்கிறது என்பதுதான். இப்பொழுது ரஷ்யாவை ஏற்றுக்கொள்ள மறுத்தால் அதன் நிரந்தர எதிர்ப்புப் பிரசாரத்தையும் பகைமையையும்தான் நாம் பெறுவோம். ரஷ்யாவின் அராஜக உணர்ச்சிகளைப்போக்க ரஷ்யா இங்கிருந்து உழைக்கலாம்."

பிரிட்டிஷ் பிரதிநிதியான காப்டன் பின்வருமாறு கூறினர். 'சர்வதேசச் சங்கத்திற்கு பூரண ஆதரவையளிக்கும் நான், அதில் ஒரு மகத்தான தேசம் சேருவதை வரவேற்கிறேன்.'

போர்த்துக்கல், ஸ்விட்ஸர்லாந்து, ஹாலந்து முதலிய தேசங்கள் ரஷ்யா அங்கத்தினராவதற்குப் பாதகமாக ஓட்டுக் கொடுத்தன. மறுநாள் கூடும் அகில அசம்பிளியின் வோட்டில் ரஷ்யா சர்வதேசச் சங்கத்தில் அங்கத்தினராகி விடும்.

தேடிப் பிடித்தவை

(கத்திரிக்கோல்)

"தான் மங்கைப்பருவம் எய்தியதற் கறிகுறியாக நஞ்செல்வி இவ்வாண்டு முதல் புதியதோர் மேலாடை புனைந்து வெளி வருவாள்; அறிவியற் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, இலக்கியப் பகுதி, சமயப் பகுதி, மாணவர் பகுதி, மாதர் பகுதி, உடல்நலப் பகுதி, புதுங்கவிப் பகுதி என்பனபோன்ற பல அணிகளை அணிந்து விளங்குவாள்........பல அறிஞர்களின் கையுறைகளையும் ஏற்றுப் போதருவாள்."

—மாதப் பத்திரிகைத் தலையங்கம்.

மங்கைப் பருவம் எய்திய செல்வி மேலாடை போடவேண்டியது சரிதான். மேற்சொன்ன பகுதிகளை அடைவதும் தகுதியே. ஆனால் மங்கைப் பருவத்தினளான அவளுக்கிருக்கவேண்டிய காதற் பகுதி அல்லது கண்ணோட்டப் பகுதி மட்டிலும் காணப்படவில்லை. அத்துடன் பலருடைய கையுறைகளை மங்கையாகிய அவள் ஏற்றுக்கொள்வது ஒழுக்கத்திற்கு அடுத்ததல்ல.

* * *

புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமை மூன்று சார்புகளால் ஆக்கப்பட்டது. அவை 1. உடல்தொடர்பு விழைவு 2. உள்ளத்தொடர்பு விழைவு 3. புணர்ச்சிப் பயன் விழைவு என்பன. தலைப்பட்ட புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையில் இவை மூன்றும் முழுதும் இயங்கி நிற்கும்.

—கட்டுரை நடை.

பத்திரிகை விற்பனையாக வேண்டுமென்ற நோக்கமா அல்லது பண்டிதத் தன்மை மட்டிலும் பிரகாசித்தால் போதுமென்ற கருத்தா?

* * *

புறப்பொறிகளால் அறியப்படும் சிலையுருவத் தெய்வத்திலே பல் பிறப்பும் பயின்ற பிறகே அகப்பொறியால் உணரப்படும் அமலனை அறிந்து அநுபவிக்கக்கூடும்.

—புதுக்கோட்டைப் பிரசங்கம்.

ஐயா! தமிழ்தானா இது?

* * *

"யுத்தத்தின் கொடுமையை அறியாமல் நீங்கள் இச்சபையில் இருந்துகொண்டு வேதாந்தம் பேசுகிறீர்கள்" என்று சொல்கின்றார் இந்தியத் தளபதி ராஜாங்கசபை அங்கத்தினர்கட்கு.

சட்டசபை அண்ணாத்தைகளே! நீங்கள் காந்திஜீ சத்தியாக்கிரக யுத்தத்தில் கூடச் சேர்ந்தவர்களல்லவென்பதை தளபதி தெரிந்திருக்கின்றாரென்பது தொனிப்பதைப் பார்த்தீர்களா?

* * *

"குருநாதக் கூறியிருப்பதாவது:—

பரம்பொருள் உன்னை எந்த ஜாதியைச் சேர்ந்தவனென்று கேட்கப்போவதில்லை. நீ யாது செய்திருக்கிறாய் என்ற கேள்வியே எழும். அகம்பாவத்தை விலக்கு. அடக்கமும் அநுதாபமுமே மதங்களின் உண்மை என ஞாபகத்தி லிருத்து"

என்றெழுகின்றது ஒரு சநாதனப் பத்திரிகை.

கட்டுரை யெழுதிய சநாதனியே! மேற்படி உபதேசத்தைச் சிறிது உன்னைப் பார்த்துத் திருப்பிப் படி.

* * *

மேற்படிப் பத்திரிகை மேலும் எழுதுவது:—

மன நிர்மலத்தை அடைந்த ஒருவனுக்கு ஹிந்துவும், முஸ்லீமும் சமமே.

அதனாலேதான் மகமதியர்களை மிலேச்சர் களென்று கூறுகிறீர்கள்; தொடமாட்டோமென்கிறீர்கள், அல்லவா?

* * *

கொலை, காமம், களவு முதலியவை மகாபாதகங்களாக நமது மத நூல்கள் நன்கு விளக்குகின்றன.

—ஓர் இந்து வாரப் பத்திரிகை குறிப்பு.

ஆமாம்; யாகசாலைகளையும், கோவில்களையும், சில சநாதனிகள் வீடுகளையும் பார்த்தால் மேற்படி மத நூல் உபதேசங்கள் மூன்றையும் காணலாம்.

* * *

செப்டம்பர் 23-ந் தேதி அட்வோகேட் திரு. பாஷ்யம் தலைமையில், படித்து வேலையில்லாமலிருக்கும் சிலர் சேர்ந்து கும்பகோணத்தில் ஒரு மகாநாடு கூட்டினார்கள்.

—செய்தி.

அதன் மூலம் தாற்காலிகமாக ஒரு வேலையை உண்டு பண்ணிக்கொண்டார்கள் போலும்.

* * *

உலகத்திலேயே வேலையில்லாத கஷ்டம் பெரிய மூலையுள்ளார்களையும் அலைத்து வருகிறது.

—உபசரணைத் தலைவர் பிரசங்கம்.

மூலையா? அதென்ன புதிய உறுப்பு?

* * *

பிரயாகையிலிருந்து காஞ்சிகாமக்கோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளால் அன்பு கூர்ந்து அனுப்பப்பெற்ற கங்கா தீர்த்தம் மாம்பலத்தில் 26-ந் தேதி புதன்கிழமை யன்று பக்தக் கோடிகட்கு விநியோகம் செய்யப்படும்.

—செய்தி

இந்து, முஸ்லிம், கிருஸ்துவ, பௌத்த, ஜயின, சீக்கியர்களே! அதை வாங்கியுண்டு மோக்ஷலோகம் செல்வதற்கு இப்பொழுதே பெண்டு பிள்ளைகளுடன் மூட்டைகட்டிக் கொள்வீர்களாக!

* * *

ஸ்ரீ சரத் சந்திரபோஸ் சிறையிலிருந்து ஒரு கடிதத்தில் எழுதுவதாவது:—

இந்நாட்டில் இப்போதுள்ள நிலைமையில் ஒருவருக்குச் சிறைவாழ்க்கை ஏற்படாவிட்டால் தாய் நாட்டுக்குச் சிறந்த ஊழியம் செய்ய அவருக்கு ஒரு குறையிருப்பதாகவே நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்த உபதேசத்தை அலசிப் பார்க்க வேண்டியது அரசாங்கமென்று சொல்ல விரும்புகிறேன்.

* * *

இப்பவும் மேலே கண்ட விஷயங்களைத் தயவு செய்து தங்கள் பத்திரிகையில் வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

முந்தியும் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதை ஒத்துக்கொள்கிறார் அன்பர். ஆகவே விளம்பரச் சார்ஜுக்குப் பாத்திரராகிறார்.

ஜஸ்டிஸ் கட்சி "எக்ஸாமிநேஷன்"

("லாமா" எழுதியது)

இம்மாதம் 29, 30-ந் தேதிகளில் சென்னையில் ஜெஸ்டிஸ் கக்ஷியின் வருடாந்தப் பரிட்சை நடை பெறப் போகிறது.

இப் பரிட்சை முந்திய வருடங்களில் நடை பெற்றது போன்றதல்ல. முந்திய வருடங்களில் எல்லாம் பரிட்சை சுலபமாக விருந்தது. வந்த கேள்விகட்கு விடையை ஒருவாறு கூறித்தப்பி விட்டார்கள் ஜஸ்டிஸ்காரர்கள். ஆனால் தஞ்சை செண்டரில் இரண்டு வருடங்கட்கு முன்பு நடை பெற்ற பரிட்சை மட்டிலும் கொஞ்சம் குழப்பமாகப் போய் விட்டது. போகட்டும்.

இப்போது வினாக்களைப் போட்டிருக்கும் பரிசோதகர் யார்? அவர்தான் தோழர் ஈ. வே. ராமசாமி என்ற பகுத்தறிவுப் பத்திராதிபர். இவர் இவ்வருடத்திய பரிட்சை வினாக்களை "செட்" செய்து (மேனாட்டுப் பரிட்சை முறைகளுக் கொப்ப) முன்னாடியே வெளியிட்டு விட்டார். ஜஸ்டிஸ் மாணவர்கள் எப்படி விடையளிக்கப் போகிறார்களோ?

வினாக்களோடு சேர்த்துத் தாம் அப்பாடசாலையைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தையும் எழுதியிருக்கிறார். அதனைப் பார்க்கும் போது பொதுவாக அவருக்கு ஸ்கூலின் நடைமுறைகள் பிடிக்க வில்லை என்று தெரிகிறது. அவர் பார்ப்பன மாணவர்கட்கு 'அட்மிஷன்' கொடுத்ததையும், பணக்கார ஆதிக்கமே (பாடசாலையில்) நிறைந்திருப்பதையும் கண்டு அருவருப்புக் கொள்கிறார். மேலும் பாடசாலை, உத்யோக வேட்டை, பதவிமோகம், சம்பள ஆசை முதலியவைகளிலேயே நாட்டம் கொண்டிருக்கிறதே யல்லாமல் தாழ்த்தப்பட்ட பார்ப்பனரல்லாதாரையும் பொதுஜன நன்மையையும் கவனிப்பதில்லை என்பதில் அவருக்கு அதிகமான வருத்தம்.

தோழர் ரா. இதர ஆசிரியர்களைப் போல அல்ல. அவரை மேற்படிப் பாடசாலையின் ஒரு மகாப் பெரிய தூண் என்று சொல்லலாம். இவரால் பாடசாலை அடைந்த நன்மைகள் ஏராளம். ஒரு பெரிய கட்டிடத்தைத் திரட்டி அதனால் இப்பாடசாலையையே தாங்கி இருக்கிறார். அப்பாடசாலையில் ஏதாவது மாணவர்க ளிருக்கின்றார்களென்றால் அவர்களெல்லோரும் இவ் ஆசிரியர் திரட்டியவர்கள் தாம். இவ்வாசிரியருக்கு உலக அனுபவமும் பொதுஜன சேவையின் ஆர்வமுமுண்டு. அதோடு மேற்படிப்புக்காகச் சமீபத்தில் மேனாடும் சென்று திரும்பி யிருக்கிறார்.

அவர் தாம் விடுத்திருக்கும் கேள்விகட்குச் சரியானபடி ஜஸ்டிஸ் காரர்கள் பதிலளிக்க வில்லை யானால் பாடசாலையைக் கைவிட்டு விடுவதாகவும், தம் சிடர்களில் பலர் காங்கிரசில் சேர வேண்டு மென்று ஆசைப்படுவது சாதித்து விடக் கூடுமென்பதாகவும் மறை முகமாகக் கூறுகிறார்.

அவர் வினாப் பத்திரத்தில் காணப் படுபவைகள்:—

(குறிப்பு.—'பகுத்தறிவு' இக்கேள்விகளை மகா நாட்டுக்கு அனுப்பிய தீர்மானங்கள் என்கின்றது.)

1. அரசாங்க உத்தியோக சம்பளங்கள் மக்களின் பரிசுத்தத் தன்மையைக் கெடுக்கக் கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக் கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிக மிகத் தாங்க முடியாததாகவும் இருப்பதால் அவைகளைக் குறைத்து உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும், மீத்துப் பெருக்கி வைப்பதற்கு லாயக்கில்லாததாகவும் இருக்கும்படிச் செய்யவேண்டும்.

2. பொதுஜன தேவைக்கும், சௌகரியத்துக்கும் நன்மைக்கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழில்சாலைகள், இயந்திரசாலைகள் போக்குவரவுச் சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படி செய்யவேண்டும்.

3. ஆகாரச் சாமான்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும் சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

4. விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் குறிப்பிட்ட ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும்படியாகவும், ஒரு அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா ஜாதிமதக் காரர்களுக்கும் சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடுகள் செய்வதுடன் இவை நடந்து வருகிறதா என்பதையும் அடிக்கடி கவனித்துத் தக்கது செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

6. மதங்கள் என்பவைகள் எல்லாம் அவரவர்களுடைய தனி எண்ணமாகவும் தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படி செய்வதுடன் அரசியலில்— அரசியல் நிர்வாகத்தில் அவை எவ்வித சம்பந்தமும், குறிப்பும் பெறாமல் இருக்கவேண்டும். ஜாதிக்கென்றோ,மதத்திற்கென்றோ எவ்விதச் சலுகையோ உயர்வு தாழ்வு அந்தஸ்தோ அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாடுவதோ ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது.

7. கூடியவரை ஒரு குறிப்பிட்ட ரொக்க வரும்படிக்காரருக்கோ, அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ வரிப்பளுவே இல்லாமலும் மனித வாழ்க்கைக்குச் சராசரி தேவையான அளவுக்குமேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன் மூலம் பயனடைபவர்களுக்கும் வருமான வரி முறை போல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

8. லோக்கல் போர்டு, முனிஸிபாலிட்டி, கோவாப்ரேட்டிவ் இலாகா ஆகியவைகளுக்கு இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இவற்றின் மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிர்வாகம்செய்ய வசதிகள் செய்து, தக்க பொறுப்பும் நாணயமும் உள்ள சம்பள அதிகாரிகளைக்

கொண்டு அவைகளை நிர்வாகம் செய்யச் செய்யவேண்டும்.

9. வியவகாரங்களையும் சட்ட சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவு வரி விதிக்கப்பட வேண்டும்.

10. மேலே கண்ட இந்தக் காரியங்கள் நடைபெறச் செய்வதில் நாமே சட்டங்கள் செய்து அச்சட்டங்களினுல் அமுலில் கொண்டுவரக் கூடியவைகளைச் சட்டசபைகள் மூலமும் அந்தப்படிச் சட்டங்கள் செய்து கொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளைக் கிளர்ச்சிசெய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இந்தக் கேள்விகள் ஜஸ்டிஸ்காரர்கட்கு ஒரு பெரிய சோதனையே யென்பதில் சந்தேகமில்லை. ஒருவராவது நெஞ்சில் கையை வைத்து இவைகட்குத் தகுந்த பதில் கூறமாட்டார்கள். பெரும்பாலானவர்கட்குப் பரீட்சையன்று ஏதாவது நோய் வந்து பாடசாலைக்குப் போகாமலாக்கி விட்டாலும் விடலாம். நன்ருக யோசித்தால் வாத்தியார் ராஜிநாமாச் செய்யவேண்டி வருமென்றுதான் தோற்றுகிறது. எப்படியும் சோதனை முடிவை எதிர்பார்ப்போம்.

நச்சுப்பொய்கைக்குத் தடை யுத்தரவு ரத்து

தோழர் ஸி. ஏ. அய்யாமுத்து எழுதிய நச்சுப்போய்கை என்னும் நாடகத்தை நடத்தக்கூடாதென்று தேவி பால விநோத சபையாருக்குச் சேலம் ஜில்லா கலெக்டாவர்கள் பிறப்பித்திருந்த தடையுத்தரவை ரத்து செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

செய்தித் திரட்டு

தனவணிகப்பெண் உயிர் தப்பிய விந்தை

அமராவதி புதூருக்கருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த லக்ஷ்மணன் செட்டியார் என்பவருடைய மனைவி பஸ்ஸில் தன் கைக்குழந்தையுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய புடவை சக்கரத்தில் மாட்டிக்கொண்டதால் குழந்தையுடன் அவர் கீழே இழுத்துத் தள்ளப்பட்டார். பஸ்ஸோடு அவர்கள் இழுத்துச் செல்லவும் பட்டனர். நல்ல வேளையாக பஸ் சீக்கிரத்தில் நிறுத்தப்பட்டு அந்த ஸ்திரி விடுவிக்கப் பட்டார். அவருக்குப் பலத்த காயமொன்று மேற்படவில்லை என்று தெரிகிறது.

காரைக்குடி

கூ. வி. பியாட்மிண்டன் கிளப்.

இக்கிளப் பவுனு புரட்டாசி 1௳ ஆரம்பித்து நடந்து வருகிறது. இதில் யாவரும் சேரலாம் என்று செக்ரட்ரி பி. ஆர். கே. ஆர். எம். மெய்யப்ப செட்டியார் அறிவிக்கிறார்.

தங்க ஏற்றுமதி

மீண்டும் இந்தியாவிலிருந்து தங்கம் கப்பலேறத் தொடங்கிவிட்டது. அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இவ்வாரம் பம்பாயிலிருந்து சுமார் 27 லட்சம் பெறுமான தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாரத்தோடு மொத்தம் வெளியேறின தங்கத்தின் மதிப்பு 197 கோடி.

காங்கிரஸ் பந்தலில் பல மகாநாடுகள்

பம்பாயில் காங்கிரஸ் நடைபெறு முன்பு காங்கிரஸ் பந்தலில் தங்கள் மகாநாடுகளை நடத்த அனுமதி கொடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் அபேதவாதிகளும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், தேசத்துக்காகத் துன்புற்றவர்களும், காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் தலைவருக்குக் கல்யாண் ஸ்டேஷனிலிருந்து தனி வண்டி திட்டம் செய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

சிறையில் சட்டமறுப்புக் கைதிகள்

சட்டமறுப்பு சம்பந்தமாக அவசரச் சட்டங்களின்கீழ் சிறை சென்று விடுதலையாகாதவர்கள் 147 பேர் இப்போ திருப்பதாக சர்க்கார் ஓர் கணக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

சென்னைக்கு 17-ல் புதிய கவர்னர்

சென்னைப் புதிய கவர்னரான எர்ஸ்கின் பிரபு நவம்பர் 17-ந் தேதி சென்னை வந்து சேர்வார். இப்போதிய கவர்னர் ஸ்டான்லி அவர்கள் 13-ந் தேதி சார்ஜ் விடுவார். 13 முதல் 17 வரையிலும் (மூன்று நாள்) சர். ஆர்ச்சிபால்டு காம்பெல் பதவி வகிப்பார்.

ருஷ்யாவின் கட்டணம்

சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருக்கும் ருஷ்யா வருடக் கட்டணமாக 225 ஆயிரம் பவுன் மேற்படி சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும்.

பூகம்ப நிதி

வைசிராயின் பூகம்ப நிதிக்கு இது வரையில் சுமார் 60 லட்சம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து அதனை நிறுத்தி விடுவார்களாம்.

இந்திய சட்டசபைத் தேர்தல்

இந்திய சட்டசபைத் தேர்தல் நவம்பர் 20-ந் தேதி நடைபெறும். அபேட்சகர்கள் நாமிநேஷன் பாரம் போட வேண்டிய நாள் அக்டோபர் 13. அவற்றைப் அக்டோபர் 15-ந் தேதி பரிசோதனை செய்து பார்ப்பார்கள்.

மெக்சிக்கோவில் பூகம்பம்

அமெரிக்காவிலிருக்கும் மெக்சிகோ வென்னும் பகுதியில் பெரிய பூகம்ப மேற்பட்டு 3 கிராமங்கள் மறைந்தன. ஏராளமான நஷ்டமேற்பட்டது. பலர் இறந்தனர்.

சீமைக்கு அன்னை கஸ்தூரிபாய்

ஸ்ரீ. கஸ்தூரிபாய் காந்தி இங்கிலாந்துக்குச் சென்று இந்திய நிலைமையைப் பற்றிப் பிரசாரம் செய்வாரென்றும் அவரது இந்திப் பிரசங்கங்களை மீராபென் மொழி பெயர்த்துக் கூறுவாரென்றும் தெரிகிறது.

ஜப்பான் நஷ்டம்

ஜப்பானில் ஏற்பட்ட பெரும்புயலினால் சுமார் 1000 பேர்கள் மாண்டுப் போனார்கள். 4000 பேர்கள் காயமடைந்தார்கள். 50000 வீடுகள் அழிந்து போயின. 200 படகுகள் மூழ்கிப் போயின. கடல் பொங்கி ஏற்பட்ட சேதம் அளவிட முடியாதது.

தர்மபுரம் மடவழக்கு

தர்மபுரம் மடாதிபதி பதவி தமக்கே உரியதென்று ஸ்ரீ ரத்ன சபாபதித் தம்பிரான் தொடுத்திருந்த வழக்கை ஹைக்கோர்ட்டார் தள்ளி விட்டார்கள் என்று தெரிகிறது.

இங்கிலாந்தில் சுரங்க விபத்து.

வேல்ஸிலிருக்கும் கிரெஸ்போர்ட் நிலக்கரிச் சுரங்கத்தில் வெடி விபத்து ஏற்பட்டுச் சுமார் 300 பேர் மாண்டனர். இது இரவு 2 மணிக்கு நடந்தது. விபத்தின் கடுமையால் தீப்பிடித்தது. அதை அவிக்க வெகு நேரம் சென்றது. காலையில்தான் பிரேதங்களை எடுக்கமுடிந்தது.

தாகூருக்கு அரை லக்ஷம் பணமுடிப்பு.

சென்னை தாகூர் வரவேற்புக் கமிட்டியின் தலைவரான முதல் மந்திரி பொப்பிலி ராஜா அவர்கள் ஸ்ரீ தாகூருக்கு ஒரு அரை லக்ஷம் பணம் முடிப்பாவது கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு தமிழ்நாட்டு ஜமீந்தார்களும் சிற்றரசர்களும் முன் வரவேண்டும் என்றும் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

லிதுவேனியாவில் நாஜிகளின் மீது நடவடிக்கை

லிதுவேனியாவில் ஜூன் மாதத்திலிருந்து 713 உத்தியோகஸ்தர்களை வேலையினின்று நீக்கி 135 பேர்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டதாகவும் இது நாஜிகளின் நடவடிக்கைக்கு எதிராக நடந்திருக்கிறதென்றும் லிதுவேனியா அரசாங்கம் ஓர் அறிக்கையை பிரிட்டன், இத்தாலியா, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு விட்டிருக்கிறது. இந்த நாடுகள் மேமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவை.

தான் மரணத்திற்குக் காரண'மென்கின்றார்கள்.



திருச்சி ஜங்ஷனில்

நின்றும் ஓர் பரிதாபகாமான செய்தி வருகின்றது. ஜங்ஷனுக்கு ஒரு மைலுக்குத் தெற்கே ரயில் பாதையில் 21ந் தேதி ஓர் கிழவன் மயங்கிக் கிடந்தானாம். அவனுக்கு வந்ததை மயக்கமென்று கூடக் கூறமுடியாது. கொஞ்சம் அதிகமாக பூலோகக் கற்பக தருவின் அமிர்தத்தை வயிற்றுக்குள் ஏற்றி விட்டதால் அவன் உலகை மறந்த ஓர் நித்திய சமாதியிலாழ்ந்து விட்டான் என்றுதான் குறிப்பிடவேண்டும். ஆகையால் லைனில் ஓடிக் கொண்டிருந்த ரயில் வண்டியைச் சிறிதும் பொருட்படுத்தினானில்லை. எனவே வண்டியின் கனத்திற்கும் அவன் சமாதியின் கனத்திற்கும் ஓர் பரீட்சை நடைபெற்றது. அதில் கிழவனே தோல்வியடைந்தான். தோல்வியும் "ஜீரோ மார்க்" காகி விட்டதால் அவனது தேகம் விதேகமாயிற்று. அப்பால் சுற்று முற்றும் பரிசோதித்தபோது, அந்த அமிர்த பக்ஷணியின் மனையாட்டியாகிய தேவியும் மேற்படி அமிர்தத்தில் மூழ்கி ஓர்பால் உலகை மறந்து கிடப்பது தெரிந்ததாம். கணவனும் மனைவியும் கள்ளருந்தும் கனத்த காரியத்தில் சமதர்மத்தைக் காண்பித்தார்கள் போலும். கட்குடியர் இக்கதையை தினசரி காலையில் எழுந்ததும் நூறுதரம் உரு ஜபிக்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

1934ம் வருடம்

ஓர் பஞ்ச காலமென்று இந்தியாராகிய நாம் கூச்சல் போடுகிறோம். நம்மோடு சேர்ந்து வெளி நாட்டார் சிலரும் புக்கப் பாட்டுப் பாடுகிறார்கள். அவர்கள் பாட்டை உற்றுப் பார்த்தால் நம்மை ஏமாற்றுகிறார்களோ என்ற ஐயமுண்டாகிறது. கானடா தேசம் 1934ம் வருடத்தில் ஆறுமாதங்களில் மட்டிலும் மோட்டார்கார்கள் 50351 வாங்கியிருக்கின்றதாம். இவைகளின் விலை மொத்தம் ஒரு கோடி 3 லட்சம் பொன் ஆகுமாம். இன்னும் அங்கு புதிய கார்கட்கு விலை கிராக்கிதானாம். இந்தச் சங்கதியைக் கொஞ்சம் மூளையிலேற்றி ஆலோசனை நெருப்பை ஏற்றிப் பார்த்தால் கானடா போடுகிற கூச்சல் புரட்டு என்ற வெளிச்ச முண்டாக்கிவிடும்.

ஏாகூரை யடுத்த

கபூர்தாலாவில் ஒரு பாம்பைக்கொல்ல சென்றுத் தம்மைக் கொன்று விட்டார்களாம் ஆறு பேர்கள். கபூர்தாலாக் காட்டில் ஏழு தொழிலாளிகள் வேலை செய்து கொண்டிருந்தபோது ஒரு புதரிலிருந்து திடீரென ஒரு நல்ல பாம்பு தோன்றி மற்றொரு புதருக்குள் மறைந்ததாம். அதனைக்கண்ட தொழிலாளிகள் தம்மைக் காத்துக்கொள்வதற்காக அப்பாம்பை வேட்டையாடக் கருதி, அது பதுங்கிக்கொண்ட புதருக்கு நெருப்பை அனுக்கிரகித்தார்கள். நெருப்பு அதனைச் சாப்பிட்டதும், அங்கிருந்து எழுந்த புகையால் ஆறுபேர் மயங்கி வீழ்ந்து இறந்து போனார்கள்; ஒருவன் கண்ணை இழந்தான். இதன் காரணம் திட்டமாகத் தெரியவில்லை. சநாதனிகளிடம் கேட்டால் 'அங்கு தோன்றியது சர்ப்பமல்ல, பகவானுடைய அற்புதம், அதனாலேதான் துஷ்டர்கள் மடிந்தார்கள்' என்று கூறிவிடலாம். ஆனால் பகுத்தறிவு வாதிகள் 'அந்தப் புதரிலிருந்து எழும்பியது விஷப்புகை, அதுதான் மரணத்திற்குக் காரண'மென்கின்றார்கள்.

ஏழு மாதமாகியும்

எண்ணி முடியவில்லையாம் நிஜாம் அரசரின் பொக்கிஷம். அப்பப்பா! எவ்வளவு வயிறு எரியுமோ தோழர் ராமசாமிக்கு இதனைக் கேட்டால்! ஹைதராபாத் கஜானா உத்யோகஸ்தர்கள் பலர் சொத்தைத் திட்டம் போடும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்களாம். இன்னும் எத்தனையோ மாதங்கள் வேண்டி வருமாம், அச்செல்வத்தை கணக்கிட்டுப் பார்க்க. அடுத்த வசந்தகாலத்தில் நிஜாம் மன்னர் சிங்காசன மேறிய 25ம் வருடம் நிறையப் போகிறது. அன்று தம் சொத்தின் அளவை வெளியிட்டு மகிழப் போகிறாராம். இரகசியம் தெரிந்தவர்கள் 'ஆண்களில் உலகிலேயே நிஜாம் தான் பெரிய தன வந்தர்' என்று பெரு மூச்சோடு கூறுகிறார்கள். கார்னேஜி, போர்டு, ராக்பெல்லர் இவர்களெல்லாம் நிஜாமை எறிட்டுப் பார்க்கக் கூட யோக்கியதை இல்லாதவராம். இப்படி ஆடவரில் பணக்காராக நிஜாமிருக்க, பெண்களில் பணக் காரியாக ஒரு சீன மாது இருக்கிறாளாம். ஆ! என்ன பொருத்தம்! நளன் காலமாக இருந்திருக்குமானால், (ஒரு தேசத்தில் ஒரு ஆடவனும் மற்றொரு தேசத்தில் ஒரு பெண்ணும் பணத்தால் உயர்ந்திருப்பதற்கு) நிச்சயமாக இருவரும் ஒன்று சேர்ந்திருப்பார்கள்!

ஒரு வருடமாக

பட்டினி கிடந்தாராம் திருவாங்கூரிலுள்ள ஒரு சப் ரஜிஸ்திரார். எனவே சம்பளம் கிடையாததாலென்று எவரும் நினைக்க வேண்டாம். அவர் கடவுளின் (மகாதேவியின்) நட்பைப் பூண்டு விட்டார்; ஆதலால் அத்தேவி 'சாப்பிடாதே' என்று சொல்லி ஒரு மந்திரத்தை உபதேசித்து விட்டாள்; அதுவே பட்டினிக்குக் காரணம். சநாதனிகள் எல்லா உண்மையும் எங்கள் வேதத்திலிருக்கிறதென்று பறை சாற்றிக் கொண்டாலும் பட்டினி கிடக்கும் மந்திரம் மகாதேவியிடம் தானிருக்கிறதென்பதைச் சப்ரஜிஸ்திரார் தம்பட்டினி மூலம் ரஜிஸ்தர் செய்து விட்டார். இவர் மட்டிலும் வயிற்றைப் பிரயோஜன மற்றதாக ஆக்கியதோடு நில்லாது தம்மிரு குழந்தைகளையும் பட்டினி

போட்டதாகச் செய்தி கிடைக்கிறது. ஆனால் மனைவியைப் பசி நோய்க்கு ஆளாக்கினரென்பதற்கு ஆதாரமில்லை. இங்ஙனம் மகாதேவி உண்ணாதிருக்கும் முறையைப் பயிற்றி விட்டதால் அவர் உத்யோகத்தைக் கை விட்டுவிட்டு, கடவுள் தியானத்தில் ஆழ்ந்து, மோக்ஷ லோகம் செல்லும் வழியைத் தேடித் திரியலாமல்லவா? அப்படிச் செய்யவில்லை அவர். தம் உத்யோகத்தைப் பார்த்தே வந்திருக்கிறார். அதோடு ஒரு வருடமானதும், மகாதேவி உபதேசத்தை மறந்து விட்டார். இப்படிச் செய்ய வேண்டிய தேவை என்னவோ தெரியவில்லை. உண்ணாவிரத காலத்தில் ஆறுதரம் நண்பர்கள் வற்புறுத்தலால் அன்னமுண்டாராம். இதன் தேவையும் விளங்கவில்லை. அப்பால் பட்டினி நாட்களில் தண்ணீர் உட்கொண்டதாகத் தெரிகிறது. இத் தண்ணீரைப் பரிசோதித்திருந்தால் ஒருகால் மகாதேவியின் மகிமை வெளிப்படாதோ வென்று நமக்குத் தோற்றுகிறது. நிற்க, இப்போது இந்த ரிஜிஸ்திரார் தம் உபதேசத்தைக் காந்திஜியிடம் கூறப் போகிறாராம். காந்திஜி சன்மார்க்க நோக்கத்தோடு தன்னை வருத்துதல் மூலம் உலகைச் சுத்தம் செய்யவே பட்டினி இருக்கிறார். அத்தகையருக்குச் செப்பிடு வித்தை மந்திரம் எந்த அளவுக்குத் தேவை என்று தெரியவில்லை. சப் ரிஜிஸ்திரார் காந்திஜிக்கு உபதேசம் செய்வதற்குப் பதிலாக அன்னமில்லாது வாடும் கோடிக்கணக்கான ஏழையர்கட்கு உபதேசித்தால் நிரம்பப் பிரயோஜனமாக விருக்கும்!

சர்க்கார் பணத்தில்

செய்யப்பட்ட கிணறு, குளம், சத்திரம் முதலியவற்றை ஆதி இந்துக்கட்குத் திறந்து விட்டுவிட்டால் பிராமணரல்லாதாருக்குக் கோபம் வந்துவிடுமென்று "கிடுகிடு" என்று விறைகின்றதாம் பம்பாய் கவர்ன்மெண்டு. அடடா! என்ன பயம்! என்ன பயிர்ப்பு! எவ்வளவு ஒழுக்கம்! எவ்வளவு நல்ல நோக்கம்! இந்தக் குணம் சத்யாக்கிரக காலத்தில் வாராமற் போய் விட்டதே பாழாய்ப்போக! சமீபத்தில் பம்பாய்ச் சட்டசபையில் ஸ்ரீ பாக்லே என்பவர் சர்க்கார் பணத்தால் கட்டிய பொது ஸ்தாபனங்களை ஹரிஜனர்கட்குத் திறந்துவிட வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவந்தார். அதனைச் சர்க்கார் மேற்சொன்ன காரணத்தால் எதிர்த்துப் பாழாக்கிவிட்டார்கள். இதனால் என்ன விளங்குகின்றதென்பது நேயர்கட்குத் தெரியுமே— சென்னை சர்க்காரில் மேற்படிச் சட்டமிருக்கிறது; ஒரு பார்ப்பனனல்லாதானாவது வாலைக்கிளப்பியதில்லை. மேலும் இக்காலமே பார்ப்பனரல்லாதார் சண்டைக்குப் போகும் காலமல்ல. அப்படியிருக்கப் பம்பாய்ப் பார்ப்பனரல்லாதார் பொல்லாதவர்கள் என்று கூறுவது சர்க்கார் மனப்பான்மையை அன்றி வேறெதை விளக்குகிறது?

கும்பகோணத்தில்

ஒரு சுப்பிரமணியசாமி கோர்ட்டுக்கு வந்துவிட்டார்! என்ன காலம் பார்த்தீர்களா? அவர் சும்மா ஒரு கோவிலில் உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டிருந்தார். கடவுள் பக்தர்கள் அவர் மகாப் பெரியவர், எல்லாம் செய்யவல்லவரென்று தங்கள் மனப்பான்மையைக் காண்பித்தனர். அவர்களோடு வந்த ராமானுஜம் என்ற ஓர் இளைஞர் தம் மனப்பான்மையையும் காண்பித்தாராம். அவருக்குச் சாமி பெரியவரல்ல, வெறும் கல்தான் என்று தோற்றிற்றாம். ஆகவே அதனை நிரூபிக்கச் சாமியைக் காலாலுதைத்துத் தள்ளினாராம். சாமி ஒன்றும் பேசாது 'மடார்' என்று கீழே விழுந்தாராம். உடனே பக்த கோடிகள் அவர்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். அதன் கருத்து சாமியை வணங்க மட்டிலுந்தான் செய்யலாமென்பது போலும். எப்படியோ வழக்கின் ஏதுவால் பக்தர்களே சாமியைக் கோர்ட்டில் இழுத்து விட்டார்கள். அவர் ஆலயத்தைத் துறந்து ரிக்கார்டு அறையில் வந்துட்கார்ந்தார். மாஜிஸ்திரேட் வழக்கை விசாரித்துவிட்டு திரு. ராமானுஜம் குற்றவாளியல்லவென்று வழக்கைத் தள்ளிவிட்டாராம். சாமி திரும்பிக் கோவிலுக்குப் போவாரென்று தெரிகிறது. பாவம்! சும்மாவிருக்கும் சாமியை என்னபாடு படுத்துகிறார்கள் பக்தர்கள்!

ஸ்ரீமதி கமலா தேவி

அவர்களை 22-ந் தேதி, தண்டனைக் காலம் முடிவடையுமுன்பு வெளியே விட்டு விட்டார்கள் வேலூர் சென்டிரல் ஜெயிலிலிருந்து. தண்டனைக் காலம் முடிவடைவது டிசம்பர் 3-ந் தேதிதான். அதற்குமுன் விடுவதென்றால் ஏதாவது தகுந்த காரணம் வேண்டாமா? ஆம். அவருக்கு நோய் அதிகப்பட்டு இனி மேலிருந்தால் "ஆள் டேஞ்சர் ஆகிவிடும்" என்ற நிலைமை வந்துவிட்டதாம். மேலும் டிசம்பருக்கு இன்னும் 2 மாதந்தானே இருக்கிறது? ஆதலால் விட்டு விட்டார்கள். அம்மையார் இளைத்து மெலிந்த உருவத்தோடு வெளிவந்தாராம். இவரைப்பற்றி எனக்கொரு சந்தேகம். இவர் வெளிவந்த செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததும், 'எந்தக் கமலா தேவி' என்று எனக்குள்ளேயே கேள்வி கேட்டேன். கடைசியில்தான் தெரிந்தது கமலாதேவி (சதோபாத்யாயா) வென்று. இப்போது சதோபாத்யாயாதான் தூக்கப்பட்டு விட்டாரே? ஆதலால் இவரை வாசகர்கட்கு மாஜி கமலாதேவி சதோபாத்யாயாவென்று கூற விரும்புகிறேன்.

அக்காள் மேயோ மாதிரி

அமெரிக்காவில் பல நபர்கள் இருப்பதாகத் தெரிகிறது. செப்டம்பர் 20-ந் தேதி அமெரிக்க செனட் கமிட்டியின் ஒரு கோஷ்டியார் ஒரு வெடி தயாரிக்கும் கம்பெனியின் தஸ்தாவேஜுகளைப் பரிசோதித் தார்களாம். அப்போது ஸ்ரீமதி கெண்டால் என்ற ஒரு அக்காள் அக்கம்பனியிடமிருந்து இந்தியாவுக்குக் கண்ணீர் வெடிக்குண்டுகளை அனுப்பும் படித் திருவாய் மலர்ந்தருளிய ஒரு கடிதம் கிடைத்ததாம். செனட்டர்களைச் சேர்ந்த ஒரு தர்மப் பிரபு "ஏற்கெனவே அரை வயிற்றுப் பட்டினியாக விருந்து அல்லலுறும் ஏழை இந்தியர்கள்மீது கண்ணீர் வெடிகளை எறியக் கெண்டால் சொல்லிக் கொடுத்ததாகத் தெரிகிறது" என்று திருவாய் மலர்ந்தருளினாராம். அவருடைய 'ரிமார்க்' போகட்டும். இந்த நபர் (கெண்டாலின்) திமிரைப் பார்க்கவில்லையா? இவள் "இந்தியா" என்று ஒரு புத்தகமும் எழுதுகிறாளாம். மேயோ ஒன்றை எழுதிக் கொஞ்சம் பணத்தை அடித்துவிட்டது இவளுக்குத் தெரியும் போலிருக்கிறது; ஆகவே தானும் அடித்துவிடலாமென்று நினைக்கிறாள். இவளது புத்தகம் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் அதன் உள்ளுறையைப் பார்ப்போம்.

ஹரிஜனங்களை
ஆதரியுங்கள்



நமது தபால் பெட்டி

சர் ஹென்றி பேஜ்கிராப்ட்,
பார்லிமெண்ட் பிரதிநிதி,
போர்ன்ஸ்மௌத்.
(லண்டன் வழி)

பெரியவரே,

நீர் 25வருடமாகப் போர்ன்ஸ்மௌத் தொகுதியின் பிரதிநிதியாக விருந்து இங்கிலாந்திற்கு அரும்பெரும் தொண்டாற்றியிருக்கிறீர். அத்தொண்டை உம்மட்டோடு, இங்கிலாந்தளவில், வைத்துக் கொள்ளாது, சிற்சில வேளைகளில் வெளியேயும் கொட்டிவிடுவதைப் பார்த்தால் எரிகிறது. நாலைந்து நாட்களுக்கு முன்பு உமக்கு உமது நண்பர்கள் சிலர் ஒரு உபசாரப் பத்திரத்தைப்படித்து உமது மகளின் படமொன்றையும் தந்தபோது உமது தலை புரண்டுவிட்டதாம். ஆகவே பிரசங்கத்தில் என்னென்னமோ அளந்து விட்டீராம்.

“இந்தியாவுக்கு நாம் எவ்வளவோ நன்மை செய்திருக்கிறோம். பஞ்சம் நோய் முதலியவை வாராது பாதுகாத்தோம்.”

என்று உம் பிரதாபங்களைக் கூறிவிட்டு, அடுத்தபடியாக உம் கூற்றிற்குமாறாக,

“இந்தியர்களில் நூற்றுக்கு 93 பேர்களுக்குப் படிக்கவோ எழுதவோ ஒன்றுமே தெரியாது.”

என்று சொல்லி, அப்பால்,

“ஆகவே நமது அரசாட்சியை விட இந்தியர்களின் அரசாட்சிமேலானதாயிருந்து விடுமென்று எண்ணுதற்கில்லை. நாம் இந்தியாவிலிருந்து விலகிவிட்டால், உடன் அங்கு கலகமும் புரட்சியும் ஓங்கிவிடும். இந்தியர்கள் வசம் இந்தியாவை ஒப்படைப்பது மனிதவர்க்கத்துக்கே உலைவைப்பதாகும். நம்மவர்களில் சிறந்தவர்களால் கட்டப்பட்ட ஒரு சாம்ராஜ்யத்தை ஒரு நொடிப்பொழுதில் நாசமாக்கக் கூடியவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியமென்ன? ஆதலால் நாமே ஆட்சி புரிந்துவர வேண்டும். வேண்டுமானல் மாகாண சுயாட்சி கொடுத்துச் சோதனை ப் பார்க்கலாம்.”

என்று திருவாய் மலர்ந் தருளினீராம். இந்தப் பிரசங்கத்தைப் படித்தவுடன் எனக்கு ஒரு கப்பல் நிறையப் பதிலை உமக்கனுப்ப வேண்டுமென்று தோற்றிற்று; ஆனல் தற்போது அதற்குச் சந்தர்ப்பமில்லை. நீர் “சுயராஜ்யத்தைக் கொடுத்து விட்டால் இந்தியா அழிந்து போமே” என்று கவலைப்பட வேண்டாம்! எங்கள் பாட்டை நாங்கள் பார்த்து—எப்படியாவது அடிதடி போட்டோ, கட்டித் தழுவி ஒன்று சேர்ந்தோ அல்லது யுத்தத்திலேயோ எப்படியோ—வாழ்ந்து கொள்வோம்! நீர் இன்னும் யாராவது உபசாரப் பத்திரம், தேநீர் போன்றவற்றைத் தந்தால் மெய் மறந்து விடலாகாது. உங்கள் உதவி இல்லாமல் எத்தனையோ நாடுகள் காரியம் சமாளிக்கின்றனவென்பதை உமக்கு ஞாபக மூட்டுகின்றேன்.

—பகீரதன்

எச். எச். ஆகாகான்,
லண்டன்.

ஐயா,

நீங்கள், பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்த அரும் பெரும் தொண்டின் காரணமாக, அரசாய் வீற்றிருந்து, ஆட்சி செலுத்துவதற்கு அகன்றவோர் நாடு இந்தியாவில் வேண்டு மென்று, பிரிட்டிஷ் சர்க்காருக்கு எழுதியிருந்ததையும், அது சம்பந்தமாகப் பார்லிமெண்டில் பேச்சுவந்ததையும், முடிவில் தங்களுடைய அபிலாஷையைச் சாதிக்க முடியாதென்று பதில்கூறி விட்டதையும் உலகம் அறியும். அச்செய்தியைத் தொடர்ந்தாற் போல் செப்டம்பர் 18-ந் தேதி வாக்கில் வைசிராயும் தங்கட்கு ஓரிட மளிக்க முடியாது என்று பதில் கூறி விட்டதாகத் தகவல் வெளி வருகிறது. ஐயோ! தங்கள் ஆசை முழுதும் பாழாயிற்றே. பதிலைச் சர்க்கார் கொஞ்சம் பொறுத்தாவது கொடுத்ததா? நீங்கள் அரசனுவதையும், ஆணை செலுத்துவதையும், குடிகள் சுயாட்சி கேட்பதையும் அதனை மறுத்து நீங்கள் அவசரச் சட்டம் போடுவதையும், அதனல் சத்தியாக்கிரகங்கள் நடப்பதையும் பற்றி என்னென்ன கனவுகள் கண்டுக் கொண்டிருந்தீர்களோ? அத்தனையையும் தொலைத்து விட்டார் வைசிராய் கடைசியாக. போகட்டும் தங்கட்கு ராஜ்ய மில்லாது போனலும் திரண்ட ஆஸ்திதானிருக்கிறதே. அதனைக்கொண்டு திருப்தியடையுங்கள்.

தங்கள் செயலைக் கவனிக்கும்
பகீரதன்.

சனதனிகள்,
கல்கத்தா.

அண்ணுக்களே,

நீங்கள் செப்டம்பர் 18-ந்தேதியன்று டல்வுஹவுஸி மண்டபத்தில், சர். நளினரஞ்சன் சாட்டர்ஜியின் தலைமையில், திரு. ரங்க ஐயரின் ஆலயப் பிரவேசத் தடை நீக்க மசோதா உருப்படாமற் போனதைப் பாராட்டும் நிலைமையில் ஒரு விழாக் கொண்டாடினீர்களாம். அன்று கள்ளிக்கோட்டைத் ‘தம்பிரான்’ குருவாயூர்ப் போராட்டத்தில் கால்வழுக்கி விழாமல் (உறுதியாக) நின்றதைப் பாராட்டித் தீர்மானங்களும்

(46-ம் பக்கம் பார்க்க)



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஹூ ஆவணி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஹூ ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஆகஸ்டு	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஹூ சித்திரை	0—5—3
தவணை வட்டி	0—5—3

சென்னை நடப்பு வட்டி.

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0
ஆடி	0—6—6
ஆவணி	0—6—0

உண்டியல் விலை.

டிமாண்ட் விற்பனை	157¼
,30 நாள் தவணை வாங்குவது	150

ரப்பர்.

லண்டன், செப்., 24உ

புகைப்போட்ட ரப்பர் (ஸ்டாண்டர்டு) வாங்குவோர் விலை 7 7/16 பென்ஸ்.

புகைப் போட்ட ரப்பர் 7 9/16 பென்ஸ்

லண்டன் லிவர்பூல் ரப்பர் இருப்பு

லண்டன், செப். 24—

லண்டனில் இவ்வார ரப்பர் இருப்பு 53,924 டன். செப். 22-ந் தேதியோடு முடிவான வாரத்தில் செலவான மொத்த ரப்பர் 748 டன்.

லிவர்பூர் ரப்பர் இருப்பு 59028 டன் சென்ற வாரம் செலவான ரப்பர் 251 டன்.

தங்கம், வெள்ளி.

சென்னை, செப். 25உ

சவரன் (சில்லரை)	22—1—0
„ மொத்தமாக	22—0—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—14—6
மூணா தங்கம் „	34—9—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—10—0
100 ரூபா எடைக்கு	60—8—0

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் அல்பைன் அக்டோபர் 3-ந் தேதி வரும்.

ஹார்மோனைட்ஸ் அக்டோபர் 8-ந் தேதி வரும்.

ரங்கூன்

எரின்புரா அக்டோபர் 1-ந்தேதி வந்து 5-ந் தேதி புறப்படும்.

வெள்ளிக்கிழமை தோறும் ரங்கோனுக்கு மெயில் கொண்டு போகப்படும்.

மலேயா

ரஜுலா: அக்டோபர் 6-ந் தேதி வந்து 9-ந் தேதி புறப்படும்.

ரோணு: அக்டோபர் 20-ந் தேதி வந்து 23-ந் தேதி புறப்படும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

போர்ணர்டின் டி சேண்ட் பேரீ: அக்டோபர் 30-ந் தேதி சென்னை வந்து சேரும்.

எக்ஸ்ப்ளோரேடர் கிரான்டியர் நவம்பர் 27-ந் தேதி வரும்.

(45-ம் பக்கத் தொடர்ச்சி.)

நிறைவேற்றினீர்களாம். அச் செய்தி உண்மையானல் உங்களுடைய அரிய சந்தோஷத்திற்காக இரங்குகின்றேன். மசோதா போய்விட்டதனுலும் தம்பிரான் உறுதியாக நின்றதனுலும் ஒன்றும் ஆகிவிடவில்லை. இன்னும் எத்தனையோ மசோதாக்கள் வரவேண்டியிருக்கின்றன; எத்தனையோ கண்விழித்துக்கொண்டு மிருக்கின்றன. அன்றி எதிர்காலம் உங்கட்கு ஓர் இயமன் என்பதிலும் தடையில்லை. இந்த நிலைமையில் சந்தோஷம் கொண்டாடுவதென்றால், தந்தையிடமிருந்து காலணா பெற்றுவிட்ட சிறுபிள்ளைகள் குதிப்பதைவிட எந்த வழியில் மேலானது?

உண்மை தெரியும்
பகிரதன்.

ஊழியன்

பயிண்டு வால்யம்

"ஊழியன்" இந்த வாரத்தோடு இதுவலரை வெளி யான மலர் 14-ல் பதின்மூன்று இதழ்களும் சேர்த்து அழகிய காலிகோப் பயிண்டு செய்யப்பெறுகிறது.

ஆரம்பமுதல் விரும்பும் பலர் சவுகரியத்துக்காகவே இவ்வாறு தயாரிக்கிறோம்.

வேண்டுவோர் முந்திக்கொள்க!

கொஞ்சம் பிரதிகளே தயாராகின்றன.

ஏராளமான படங்கள்! உயர்ந்த பல கட்டுரைகள்! காதற் கதைகள்! கருத்தமைந்த பாடல்கள்! சிறந்த காலிகோ பயிண்டு! 624 பக்கங்கள்.

விலை ரூ 2. தபாற்கூலி வேறு.

மானேஜர்,
"ஊழியன் ஆபீஸ்,"
56, தம்பு செட்டித் தெரு, சென்னை.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.